## இரண்டாம் பகுதி


| | பக்கம் |
|---|---|
| மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் | ( i ) |
| ஆளணி | ( Liii ) |

## இரண்டாம் பகுதி

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும் | ( i ) |
| நாணய வெளியீடு | ( viii ) |
| வங்கித்தொழில் அபிவிருத்தி | ( viii ) |
| வங்கி மேற்பார்வை | ( x ) |
| அபிவிருத்தி நிதி | ( xi ) |
| கிராமியக் கொடுகடன் | ( xvii ) |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | ( xxii ) |
| கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி | ( xxvi ) |
| ஊழியர் சேம நிதியம் | ( xxvi ) |
| செலாவணிக் கட்டுப்பாடு | ( xxix ) |
| பொதுப்படுகடன் | ( xxxi ) |
| பிரதேச அலுவலகம்—மாத்தறை | ( xxxii ) |
| பிரதேச அலுவலகம்—அநுராதபுரம் | ( xxxx ) |
| பிரதேச அலுவலகம்—மாத்தளை | ( xxxxvii ) |
| வாடிக்கையாளர் பணிகள் | ( xxxxviii ) |
| வெளியீடுகள் | ( xxxxviii ) |
| ஆய்வரங்குகள் | ( xxxxix ) |
| அளவீடுகள் | ( xxxxix ) |
| பயிற்சி | ( L ) |
| தரவு செய்முறைப்படுத்தல் | ( Li ) |
| முகாமைக் கணக்காய்வு | ( Lii ) |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும்

மத்திய வங்கியின் 1985 திசெம்பர் 31 இல் உள்ளவாறுன ஐந்தொகையும், 1985 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கும் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளது.

1985 இறுதியில், மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 411,586 இலட்சங்களாக அமைந்து கடந்த ஆண்டின் இவற்றின் மட்டத்தை விட 23.7 சதவீதங் கொண்டதொரு அதிகரிப்பைப் பதிவு செய்தன. சொத்துக்களிலும் அரச, அரச உத்தரவாதப் பிணைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் ஏனைய சொத்துக்கள் கணக்குகளில் ஏற்பட்டதொரு கணிசமான அதிகரிப்பு ஆகியவற்றின் முக்கிய காரணமாக உள்நாட்டுச் சொத்துக்கள் (41.7 சதவீதம்) அதிகரித்தமையிலிருந்தே ஏற்பட்டது. எனினும் பன்னுட்டு ஒதுக்கு 9 சதவீதத்தினல் ரூ. 114,296 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதே காலப்பகுதியில் வங்கியின் பொறுப்புக்கள் உயர்ந்தமைக்கு ஏனைய பொறுப்புக்கள் கணக்குகள் வகையில் ஏற்பட்ட அதிகரிப்பும் (33.1 சதவீதம்) வைப்புக்கள் (16.9 சதவீதம்) சுற்றேட்டத்திலுள்ள நாணயம் (17.9 சதவீதம்) மத்திய வங்கிப் பிணைகள் (109.6 சதவீதம்) ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களும் முக்கிய காரணங்களாகும்.

1985 ஆம் ஆண்டிற்கான வங்கியின் வருமானம் ரூ. 38,250 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 21.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது. ஒதுக்குக் கணக்குகளுக்கான செலவு மற்றும் ஒதுக்கங்கள், பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கங்கள் ஆகியனவற்றிற்கு இடமளித்தபின்னர் மத்திய வங்கியின் தேறிய இலாபம் ரூ. 17,890 இலட்சங்களாக விளங்கியது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன் நியதிகளின்படி ரூ. 100 இலட்சம் கொண்ட தொகை வங்கியின் மிகைக்கு மாற்றல் செய்யப்பட்டது. மிகுதியான ரூ. 17,790 இலட்சம் கொண்ட தொகை நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின்படி மத்திய வங்கிக்கான அரசின் வெளிநிற்கும் கடப்பாடுகளின் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்துவதற்காக அரசிற்குச் செலுத்தப்பட்டது.

### வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்

மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுடனுன அதன் கொடுக்கல் வாங்கல்களுக்காக இலங்கை ரூபாவிற்கெதிராக ஐ. அ. டொலர்களின் நாளாந்த வாங்கும் விற்கும் வீதங்களை மத்திய வங்கி தொடர்ந்தும் தீர்மானித்ததுடன் இவ்வாறு நிறுவப்பட்ட வாங்கும் விற்கும் வீதங்களின் உடன் அடிப்படையில் ஐ. அ. டொலர்களைக் கொள்வனவு செய்து விற்கிறது. 1985 திசெம்பர் 31 இல் ஐ. அ. டொலர் ஒன்றிற்கான உடன் வாங்கும் விற்கும் வீதங்கள், முறையே ரூ. 27.4000 ஆகவும், ரூ. 27.4150 ஆகவும் விளங்கின.

## இலங்கை மத்திய

### ஐந்தொகை —

| 1984 திசெம்பர் 31 | | பொறுப்புக்கள் | 1985 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **மூலதன கணக்குகள்** | | |
| 15,000,000 | | முதல் ... | 15,000,000 | |
| 69,000,000 | 84,000,000 | மிகை ... | 70,000,000 | 85,000,000 |
| | | **சுற்றேட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 9,218,548,130 | | தாள்கள் ... | 10,763,800,798 | |
| 381,489,551 | 9,600,037,681 | குத்திகள் ... | 555,634,845 | 11,319,435,643 |
| | | **வைப்புக்கள்** | | |
| 1,344,326,827 | | அரசு ... | 2,119,925,142 | |
| 84,298,409 | | அரச முகவர் நிலையங்களும் அரச நிறுவனங்களும் | 85,447,855 | |
| 4,025,540,681 | | வர்த்தக வங்கிகள் ... | 5,490,156,739 | |
| 5,075,581,166 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள் ... | 4,108,963,586 | |
| 57,181 | | திறைசேரி உண்டியல்களில்முதலீடு செய்யப்பட்ட, ரூபா 115,119,625 கொண்ட தொகை நீங்கலாக கட்டாயச் சேமிப்பு நிதி ... | 54,476 | |
| 590,214,937 | 11,120,019,201 | ஏனையவைகள் ... | 1,190,716,724 | 12,995,264,522 |
| | 12,723,480 | வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | | 5,992,891 |
| | 775,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் ... | | 775,000,000 |
| | 110,000,000 | மூலதன உதவுதொகைக் கணக்குகள் ... | | 150,000,000 |
| | 557,315.000 | மத்திய வங்கிப் பிணைகள் ... | | 1,168,125,000 |
| | 11,012,747,243 | ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் ... | | 14,659,800,056 |
| | 33,271,842,605 | | | 41,158,618,112 |

### 1985 திசெம்பர் 31 ஆம் நாள் முடிவுற்ற

| 1984 திசெம்பர் 31 | | | 1985 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | 1,660,250,639 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களையும், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடங்களினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும், உள்ளடக்கும்) நாணய விதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும். | | 1,882,274,433 |
| | | 1985 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம் | | |
| — | | நாணய சீராக்கக் கணக்கிற்கு நாணய விதிச்சட்டத்தின் 39 (அ) பிரிவின் நியதிகளின்கீழ் தீர்ப்பனவு செய்யப் பட்ட நிலுவை | 153,735,000 | |
| 1,000,000 | | நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன்படி தேறிய இலாபம் மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது | 10,000,000 | |
| 1,500,461,262 | 1,501,461,262 | நாணயவிதிச் சட்டத்தின் 39 (இ) நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வரவேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு | 1,779,000,000 | 1,942,735,000 |
| | 3,161,711,901 | | | 3,825,009,433 |

1985ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை அரசியல் அமைப்பின் பிரிவு 154 (1) இற்கு அமையவும் 1971இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் நாணயவிதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்,
கொழும்பு–7.
1985, ஏப்பிறல் 11

**டி. எச். எவ். கேவகமகே**
பதில் கணக்காய்வாளர் நாயகம்

அட்டவணை 2-1

## வங்கியின் கணக்குகள் — 1985

### 1985 ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளபடி

| 1984 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1985 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 9,842,850,625 | | இலங்கைக்கு வெளியே உள்ள பணங்களும், நிலுவைகளும் | 8,328,092,837 | |
| 2,715,646,847 | | *வெளிநாட்டுப் பிணைகளும் திறைசேரி உண்டியல்களும்... | 3,099,913,490 | |
| 5,417,574 | 12,563,915,046 | கையிருப்பிலிருக்கும் சிறப்பு எடுப்பனவு உரிமை ... | 1,564,189 | 11,429,570,516 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 4,043,461,262 | | அரசிற்கு ... | 4,218,176,362 | |
| 649,853,108 | | ஏனையவற்றிற்கு—நடுத்தர, நீண்டகால ... | 692,501,865 | |
| 1,662,301,280 | | குறுங்கால ... | 1,444,475,344 | |
| 11,205,674,601 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... | 18,542,423,324 | |
| 110,000,000 | 17,671,290,251 | நிதி ஏனைய நிறுவனங்களுக்கான உதவுதொகைகள் ... | 150,000,000 | 25,047,576,895 |
| | 3,036,637,308 | ஏனைய சொத்துக்களும், கணக்குகளும் ... | | 4,681,470,701 |
| | 33,271,842,605 | | | 41,158,618,112 |

*அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1இல் ரூபா 5,527,675 முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூபா 57,450 முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூபா 2,933,697 ஆகவும், ரூபா 34,340/– ஆகவும் இருந்தன.)

### ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1984 திசெம்பர் 31 | | | 1985 திசெம். 31 |
|---|---|---|---|
| | ரூபா | | ரூபா |
| | 3,161,711,901 | பெறப்பட்ட வட்டி, ஏனையவை | 3,825,009,433 |
| | 3,161,711,901 | | 3,825,009,433 |

**வர்ணசேன இராசபுத்திரம்**
ஆளுநர்

**என். ஏ. தர்மபந்து**
முதன்மைக் கணக்காளர்

வர்த்தக வங்கிசள் இலங்கை ரூபாவிற்கு எதிராக ஐ. அ. டொலர்களை விற்கவும் கொள்வனவு செய்வதற்குமாக மத்திய வங்கி தொடர்ந்தும் அவற்றிற்கு முன்மாற்றினை வழங்கியது. அத்தகைய முன்மாற்றுக்காலம் 3 மாதங்கள் வரையிலாகும். 1985 இறுதியில் மத்திய வங்கி ஒரு மாத முன் டொலர்களை உடன் மாற்று, நடுத்தர வீதங்களில் கொள்வனவு செய்ததுடன் அவற்றை உடன் மாற்று நடுத்தர வீதத்திற்கு எதிராக ஒவ்வொரு 100 டொலர்களுக்கும் இலங்கை ரூ. 4.00 கொண்ட கட்டணத்தில் விற்பனை செய்தது. மூன்று மாத முன்மாற்று ஐ. அ. டொலர்கள் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கை ரூ. 0.50 கழிவுடன் உடன்மாற்று நடுத்தர வீதத்திற்கெதிராக 100 ஐ. அ. டொலர்களுக்கு இலங்கை ரூ. 20.00 கட்டணத்தில் விற்பனை செய்யப்பட்டது.

**ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்**

மீளாய்வின் கீழான ஆண்டில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தினூடாக ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 73,705 இலட்சங்களுக்கு எதிராக ரூ. 59,601 இலட்சங்களாக விளங்கியது.

இவ்வாண்டுக் காலத்தில் தீர்ப்பனவுகள் 1984 ஆம் ஆண்டின் ரூ. 1,501 இலட்சம் கொண்ட தேறிய பெறுகைகளுக்கெதிராக இவ்வாண்டில் ரூ. 9,145 இலட்சம் கொண்ட தேறிய கொடுப்பனவை விளைவித்தன.

1985 ஓகத்து 1 ஆம் நாளுக்கு முன்னர் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் நாணயங்களுக்கான செலாவணி வீதங்கள் 10 நாட்களுக்கு ஒருமுறை அறிவிக்கப்பட்டன. இவைகள் ஒவ்வொரு மாதத்திலும் 1 ஆம், 11 ஆம், 21 ஆம் நாட்களில் அறிவிக்கப்பட்டன. இம்முறை அனைத்து ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நாணயங்களுக்கும் நாளாந்தம் வீதங்கள் அறிவிக்கும் முறை தொடங்கிய 1985 ஓகத்து 1 ஆம் நாளிலிருந்து மாற்றப்பட்டது.

ஆறு மாதங்கள் வரையான உடன்மாற்று, முன்மாற்று இரண்டிற்குமான நாணயங்களின் விற்பனைகளும் கொள்வனவுகளும் தொடர்ந்தன. தொடர்புபட்ட நாணயங்களாக வங்காளதேச தக்கா, பர்மிய கியத், இந்திய ரூபாய், ஈரானிய றியால், நேபாள ரூபாய், பாக்கித்தான் ரூபாய் என்பன விளங்கின.

**குறுங்காலக் கொடுகடன்**

அரச, அரச உத்தரவாதப் பிணைகளையும் வர்த்தக, உற்பத்திக் கடன்கள் தொடர்பான வாக்குறுதிச் சான்றிதழ்களையும் பிணையாக வைத்து வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குறுங்கால முற்பணங்களின் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) ஆண்டொன்றுக்கு 13 சதவீதத்திலிருந்து 1985 திசெம்பர் 30 ஆம் நாளிலிருந்து ஆண்டிற்கு 11 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

ஏற்றுமதிக்கான மீள் நிதியிடல் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளுக்கான மத்திய வங்கியின் கடன் வழங்கல் ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தது. எனினும் 1985 பெப்புருவரி 1 ஆம் நாளிலிருந்தும் வகை II இன் கீழ் மீள் நிதியிடல் திட்டத்திற்குப் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

வகை II இன் கீழான மீள் நிதியிடல் வகை I இன் கீழ் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் அதே அடிப்படையிலேயே வழங்கப்பட்டதுடன் வகை II இன் கீழ் மீள் நிதியிடலுக்காக வர்த்தக வங்கிகளுக்கு அவற்றின் வாடிக்கையாளர்களினுல் வழங்கப்பட்ட வாக்குறுதிச் சான்றிதழ்களைக் கழிவு செய்யும் வசதி புறக்கீடு செய்யப்பட்டது. வகை II இன் கீழ் ஏற்றுமதிக்கான மீள் நிதியிடல் தொடர்பான வட்டி வீதம் 2 சதவீதப் புள்ளிகளினுல் ஆண்டிற்கு 10 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. அத்துடன் இவ்வகையின் கீழ் வரும் ஏற்றுமதிக்கான மீள் நிதியிடல் காலம் 90 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது.

1985 திசெம்பர் 30 ஆம் நாளிலிருந்து ஏற்றுமதிகள் தொடர்பாக மத்திய வங்கியின் மீள் நிதியிடல் கடன்கள் மீதான வட்டி வீதம் 2 சதவீதப் புள்ளியால் வகை I இற்கும், வகை II இற்கும் ஆண்டிற்கு முறையே 11 சதவீதத்திற்கும், 6 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. குறிப்பிட்ட கால எல்லைக்குள் தொடர்பான ஏற்றுமதிகளினது விற்பனை வருவாய்கள் இலங்கையில் பெறப்பட்டபொழுது மீள் நிதியிடல் கடன்களில் விதிக்கப்பட்ட வட்டியின்மீது ஆண்டிற்கு 4 சதவீதப் புள்ளியை மத்திய வங்கி தொடர்ந்தும் வாடிக்கையாளர்களுக்கு மீளளிப்புச் செய்தது.

நெல், மரக்கறி வகை, மற்றும் குறிப்பிட்ட உணவுப் பயிர்களின் உற்பத்தி தொடர்பாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது தனிப்பட்டோரின் சலுகைக் காலச் சான்றிதழ்களின் பிணைக்கெதிராக வர்த்தக வங்கிகளுக்கான மத்திய வங்கியின் முற்பணங்கள் மீதான வட்டி வீதம் ஆண்டிற்கு 1.5 சதவீதமாகத் தொடர்ந்துமிருந்தது. நெற்கொள்வனவு மற்றும் உள்ளூரில் விளைந்த குறிப்பிட்ட பயிர்களைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றிற்கு நிதியிடுவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண்மைப் பணி நிலையங்கள், அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட ஆட்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பாக பிணையாக வைக்கப்பட்ட சலுகைக்காலச் சான்றிதழ்களுக்கு எதிராக வர்த்தக வங்கிகளுக்கான வங்கி முற்பணங்களின் மீதான வட்டி வீதம் மாற்றமின்றி ஆண்டிற்கு 3 சதவீதமாக இருந்தது.

### நடுத்தர நீண்டகாலக் கொடுகடன்

1985 ஆம் ஆண்டுப் பகுதியில் மத்திய வங்கி நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழ் மீள் நிதியிடல் திட்டத்தினைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. மத்திய வங்கியின் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் திட்டத்தின் வகைகள் II, III, IV ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் கடன்களுக்குப் பொருந்தத்தக்க வட்டி வீதங்களும் 2 சதவீதப் புள்ளிகளினுல் குறைக்கப்பட்டன. இவ்வாண்டுக் காலத்தில் நாட்டின் சுற்றுலாக் கைத்தொழில் பிரச்சினைகளை எதிர்நோக்கியதனுல் நீண்ட காலம் வரவேண்டிய வட்டி மற்றும் தவணைக் கடன்களுக்கு முதலளிப்பதற்கு மீள் நிதியிடுவதற்காக மத்திய வங்கி நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழ் மீள் நிதியிடல் திட்டமொன்றினைத் தொடங்கியது. நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் நிலுவை ரூ. 7,750 இலட்சங்களாக விளங்கியதுடன் இதில் ரூ. 6,925 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டுக் கொடுகடன் நிறுவனங்களில் வெளிநிற்பதாயும் காணப்பட்டது.

**வர்த்தக வங்கிக் கொடுகடன்**

1984 இல் நடைமுறைக்கு வந்த கொடுகடன் எல்லைகள் 1985 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தன. இவ்வெல்லைகளின் நியதிகளில் மத்திய வங்கி அனைத்து வர்த்தக வங்கிகளையும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொண்டது.

(அ) இன்றியமையாதனவல்லாத விடயங்களின் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட முற்பணங்களின் மொத்தத் தொகை 1984 மாச்சு 23 இல் வழங்கப்பட்டு வெளிநிற்கும் முற்பணங்களை விஞ்சக் கூடாது;

(ஆ) இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகளைப் பொறுத்தவரை 1984 மாச்சு 23 இல் வெளிநிற்கும் மட்டத்திற்கு அப்பால் எந்தவொரு தனிப்பட்ட இறக்குமதியாளர்களுக்கும் கொடுகடன் அதிகரிக்கப்படக் கூடாது;

(இ) ஏற்றுமதிகள், வேளாண்மை தவிர்ந்த தனியார் துறைக்கு வழங்கப்பட்டு வெளிநிற்கும் மொத்த முற்பணங்கள் 1984 மே 11 இல் வழங்கப்பட்டு வெளிநிற்கும் அத்தகைய முற்பணங்களின் மொத்தத் தொகையின் 5 சதவீதத்திற்கும் அதிகமான தொகையை விஞ்சக்கூடாது.

**ஒதுக்குத் தேவைகள்**

1985 ஓகத்து 9 ஆம் நாளிலிருந்து வர்த்தக வங்கிகள் தொடர்பான ஒதுக்குத் தேவைகள் பின்வரும் விதத்தில் மாற்றியமைக்கப்பட்டன.

(1) கேள்வி வைப்புக்கள் மீதான ஒதுக்கு விகிதம் 2 சதவீதப் புள்ளிகளால் 18 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.

(2) 90 நாட்களுக்கும் குறைவான காலப்பகுதிக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட தவணை வைப்புக்கள் மீதான ஒதுக்கு விகிதம் 4 சதவீதப் புள்ளிகளினால் 12 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.

(3) மேலேயுள்ள (2) வைப்புக்கள் தவிர்ந்த தவணை வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்கள் மீதான ஒதுக்கு விகிதங்கள் 2 சதவீதப் புள்ளிகளினால் 10 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டன.

(4) வர்த்தக வங்கிகள் அவற்றின் மொத்தத் தவணைச் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக வேண்டப்பட்ட அவற்றின் ஒதுக்குகளின் ஆகக் கூடியது எட்டிலொரு பங்கிற்கு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் முறிகளை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டன.

1985 செத்தெம்பர் 13 ஆம் நாளிலிருந்தும் 90 நாள்களுக்கும் குறைவான காலப்பகுதிக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட தவணை வைப்புக்களின் மீதான ஒதுக்கு விகிதம் 2 சதவீதப் புள்ளிகளால் 14 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.

**திறைசேரி உண்டியல்களில் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகள்**

இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் கொடுக்கல் வாங்கல் களை மத்திய வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. விற்பனைகள் 1984 இன் ரூ. 398,356 இலட்சங்களிலிருந்து 1985 இல் ரூ. 758,441 இலட்சங்களுக்கு மிகக் கூடியளவில் அதிகரித்தது. கொள்வனவுகள் 1984 இன் ரூ. 256,774 இலட்சங்களிலிருந்து 1985 இல் ரூ. 371,315 இலட்சங்களுக்கு அதிகரித்தது. முன்னைய ஆண்டினைப் போன்றே இத்திட்டத்தின் கீழான தொழிற்பாட்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு அழைப்புப் பணச்சந்தை வீதங்களுக்கும் இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தை வீதங்களுக்கும் இடையேயான மிகக் குறைந்த வருவாய் வேறுபாடே முக்கிய காரணமாகும்.

இவ்வாண்டுக் காலத்தில் அழைப்புப் பணச் சந்தையின் வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 10.5 சதவீதத்திற்கும், 16.75 சதவீதத்திற்கும் இடையில் வேறு பட்டிருக்குமிடத்து இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் தொழிற் பாடுகளுக்குப் பொருந்தத்தக்க கழிவு வீதங்கள் ஆண்டிற்கு 11.3 சதவீதத் திற்கும், 14.2 சதவீதத்திற்கும் இடையில் வேறுபட்டன.

**இந்தியாவிற்கு குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவுதொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்**

1964 இல் இந்திய—இலங்கை உடன்படிக்கையின் கீழ் அடங்கும் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புவதற்கான இரு திட்டங் களையும் அரசின் சார்பில் மத்திய வங்கி செயற்படுத்தியது. அவையாவன:—

(அ) இந்தியாவிற்குத் திரும்பிச் செல்வோருக்கு ஒப்புதலளிக்கப்பட்ட உதவு தொகைகளின் 65 சதவீதத்திற்குச் சமமான தொகை அல்லது அதன் ஒரு பகுதி அத்தகைய குடிபெயர்ந்து செல்வோருக்குச் செலுத்தப்பட வேண்டுமென்ற நியதியைக் கொண்ட உதவு தொகைத் திட்டமும்,

(ஆ) வெகுமதிக் கொடுப்பனவான ரூ. 500 உம் இத்தொகைகளில் இத் தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்பட்ட 65 சதவீதமுமாகும்.

இவ்விரு திட்டங்களையும் வர்த்தக வங்கிகளுக்கூடாக வங்கி தொழிற்படுத் தியது. உதவு தொகைத் திட்டத்தின் கீழ் 1985 ஆம் ஆண்டுப் பகுதியில் இந்தியா விற்குத் திரும்பிச் செல்வோருக்கு ரூ. 3 இலட்சம் கொண்ட தொகை செலுத்தப் பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் நாட்டை விட்டு வெளியேறும் 1,710 பேர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வெகுமதிக் கொடுப்பனவுகளின் மொத்தத் தொகை ரூ. 14 இலட்சங்களாக விளங்கியது.

**கட்டாயச் சேமிப்பு நிதியம்**

மத்திய வங்கியானது 1971 இன் எண் 6 கொண்ட கட்டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும் 1972 இன் எண் 15 கொண்ட வருமான கட்டாயச் சேமிப்புக்கள் மீதான உச்சவரம்புச் சட்டத்தினதும் நியதிகளில் சேகரிக்கப்பட்ட பணத்தின் பாதுகாவலனாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன், அரசின் சார்பாகக் கட்டாய சேமிப்பு நிதியத்தின் நிருவாகத்தையும் மேற்கொண்டது. இவ்வாண்டுக்காலத்தில் பெறப்பட்ட 392 மீளளிப்பு விண்ணப்பங்களின் மீது உதவு தொகை செலுத்தி யோருக்கு ரூ. 26 இலட்சத்தை (வட்டியுட்பட) வங்கி செலுத்தியது.

**அரசாங்கக் கணக்குகள்**

அரசின் வங்கியாளராகிய மத்திய வங்கி தனது வங்கித் தொழில் திணைக் களத்தின் அரச கணக்குக் கிளையானது அரச திணைக்களங்கள், அரச முகவர்களும் நிறுவனங்களும், குறிப்பிட்ட சட்ட நியதிச் சபைகள் ஆகியவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணிவருகின்றது. 1985 திசெம்பர் இறுதியில் அரச கணக்குக் கிளையிலுள்ள தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை 160 ஆகக் (அரச திணைக்களங்கள் 145 உம் ஏனையவை 15 உம்) காணப்பட்டது.

## நாணய வெளியீடு

1985 திசெம்பர் 31 இல் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயம், ரூ. 113,194 இலட்சங்களாக விளங்கியது. இது முன்னைய ஆண்டின் இறுதியிலிருந்த தொகையினைவிட ரூ. 17,194 இலட்சம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இவ்வாண்டில் சுற்றோட்டத்திலுள்ள தாள்களும் குத்திகளும் முறையே ரூ.15,453 இலட்சத்தினாலும், ரூ. 1,741 இலட்சத்தினாலும் அதிகரித்தன.

உயர்ந்த இன நாணயத் தாள்களான ரூ. 50, ரூ. 100, ரூபா 500, ரூ. 1,000 ஆகியவற்றிற்கான கேள்விகளின் தீர்க்கப்படாத தன்மை 1985 ஆம் ஆண்டுப் பகுதியில் தோன்றியது. 1984 இல் ரூ. 2,410 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்த ரூ. 1,000 தாள்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து 40 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைச் சுற்றோட்டத்தில் விளைவித்த வேளையில் ரூ. 500, ரூ. 50 இன நாணயங்களுக்கான கேள்வி கூடிக் குறையாது நிலையாக இருந்தது. மறுபுறத்தில் 1985 இல் ரூ. 100 நாணயத் தாளின் சுற்றோட்டம் கூடியளவில் அதிகரித்தது.

அனைத்து இன நாணயக் குத்திகளுக்குமான கேள்வி (1 சதம், 2 சதம் தவிர) 1985 இல் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது. உயர்ந்துவரும் கேள்வியை ஈடு செய்வதற்காக வங்கி போதுமானளவு ஒதுக்குகளைப் பேணுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ரூ. 5, ரூ. 2 இனப் புதிய நாணயக் குத்திகள் இவ்வின நாணயத் தாள்களுக்குப் பதிலாக 1985 சனவரியில் சுற்றோட்டத்திற்கு விடப்பட்டன. எனினும் ரூ. 5, ரூ. 2 தாள்கள் குத்திகளுடன் இணையாகச் சுற்றோட்டத்திலிருப்பதுடன் இவற்றின் பயன்பாட்டுக் காலத்திற்குப் பின்னர் சுற்றோட்டத்திலிருந்தும் படிப்படியாகப் புறக்கீடு செய்யப்படும்.

## வங்கித் தொழில் அபிவிருத்தி

1985 இன் இறுதியில் 600 முதன்மைக் கிளை அமைப்புக்களுடன் 4 உள்ளூர் வங்கிகளையும் 21 வெளிநாட்டு வங்கிகளையும் உள்ளடக்கி 25 வர்த்தக வங்கிகள் இலங்கையில் தொழிற்பட்டன. அத்துடன் 907 கிராமிய வங்கிகளும், 53 வேளாண்மைப் பணி நிலையங்களும் காணப்பட்டன. வெளிநாட்டு வங்கிகளின் இரு பிரதிநிதித்துவ அலுவலகங்களும் இரு வணிக வங்கித் தொழில் கூட்டு நிலையங்களும் நாட்டில் அலுவல்களை மேற்கொண்டிருந்தன.

1985 ஆம் ஆண்டுப் பகுதியில் 14 புதிய வர்த்தக வங்கிக் கிளைகள் திறக்கப் பட்டதுடன் இவை பெரும்பாலும் முழுவதும் இரு அரசதுறை வங்கிகளையும் சார்ந்தவையாகவே இருந்தன. மக்கள் வங்கி 4 கிளைகளைத் திறந்தும் (1985 சனவரியில் மீண்டும் திறக்கப்பட்ட கெப்பட்டிகொலாவ கிளை உட்பட) கொம்பனி வீதியிலுள்ள வெளிநாட்டுக் கிளையை மூடியதன் மூலமும் அதன் முதன்மைக் கிளைகளின் எண்ணிக்கை 293 ஆகியது. இலங்கை வங்கி 9 கிளைகளைத் (முதன்மைக் கிளைக்குத் தரமுயர்த்தப்பட்ட கக்மன வேளாண்மை பணி நிலையம் உட்பட) திறந்த வேளையில் அதன் உயிலங்குளம் கந்தளாய் சீனித் தொழிற்சாலைக் கிளைகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக அண்மையிலுள்ள கிளைகளுடன் ஒருங்கிணைக்கப் பட்டன. இதன் காரணமாக 1985 இறுதியில் இலங்கை வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 235 ஆக விளங்கியது. அத்துடன், 1985 சனவரியில் இலங்கை வர்த்தக வங்கி கொழும்பில் புதிய கிளை அலுவலகமொன்றினைத் திறந்ததன் மூலம் அதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆகியது. இவ் வபிவிருத்திகளுடன் அனைத்து வர்த்தக வங்கிகளினதும் மொத்த எண்ணிக்கை 1985 இறுதியில் 600 ஆகியது. இவ்வாண்டுக் காலத்தில் தேசிய சேமிப்பு வங்கியும் 4 கிளைகளை மகரகம, தெனியாய, அக்குரச, நுவரெலியா ஆகிய இடங்களில் திறந்ததன் மூலம் அதன் கிளைகளினது மொத்த எண்ணிக்கை 1985 இறுதியில் 56 ஆகியது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே கிளை அலுவலகங்கள் கூடியளவு இடவசதியுள்ள, வசதியான அமைவிடங்களுக்கு மாறிக்கொண்டன. 1985 இல் இவ்வாறு 19 உள்நாட்டுக் கிளை அலுவலகங்களும், 3 வெளிநாட்டுக் கிளை அலுவலகங்களும் மீள அமைக்கப்பட்டன.

1985 இல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டமை இலங்கை வங்கித்தொழில் அபிவிருத்தியில் ஒரு மைல் கல்லாகும். பிரதேச, கிராமிய அபிவிருத்தி வங்கியின் முதன்மைக் குறிக்கோள் யாதெனில் இலங்கையில் கிராமிய வங்கித் தொழிலையும், கிராமிய அபிவிருத்தியையும் மேம்படுத்துவதே யாகும். இவ்வங்கிகள் தற்பொழுது மாவட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட விதத்தில் தொழிற்பாட்டிற்குக் குறிப்பிட்ட துறைகளைக் கொண்டனவாகவே இருக்கும். இவ்வாண்டுக் காலத்தில் நான்கு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் அலுவலக முதன்மை இடங்களாகப் புலத்சிங்கள, குளியாப்பிட்டி, யட்டியன–மெடஉயன்கொட, மிகிந்தலை ஆகியனவற்றைக் கொண்டு திறக்கப் பட்டதுடன் இவற்றின் தொழிற்பாட்டுப் பரப்பு முறையே களுத்துறை, குருநா கல், மாத்தறை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்குப் பரந்ததாக இருக்கும். அத்துடன், 1985 இன் பிற்பகுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் 17 கிளைகள் திறக்கப்பட்டன. இவை களுத்துறை, மாத்தறை மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள 4 கிளைகளையும் குருநாகல் மாவட்டத்திலுள்ள 6 கிளை களையும், அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள 3 கிளைகளையும் உள்ளடக்கியிருந்தன.

மத்திய வங்கியின் தொழிற்பாட்டு எல்லைகளுக்கு வெளியேயுள்ள அபிவிருத்தி களை வழங்கும் குறிக்கோளுடன் பிரதேச அலுவலகங்களை நிறுவுகின்ற கொள் கைக்கு அமைவாகக் குறிப்பிட்ட சில செயல் எல்லைகள் மத்திய வங்கியின் தொழிற் பாடுகள் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு இணைக்கப்பட முடியு மென்பதனால் கண்டி, மாத்தளை, கேகாலை மாவட்டங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 1985 திசெம்பரில் மத்திய வங்கி அதன் மூன்றாவது பிரதேசக் கிளையை மாத்தளையில் திறந்தது. முதலாவது, இரண்டாவது கிளைகள் மாத்தறை யிலும், அநுராதபுரத்திலும் முறையே 1981 இலும், 1982 இலும் திறக்கப் பட்டன.

மத்திய வங்கி, வங்கித்தொழில் துறையினை நவீனப்படுத்துவதனை ஊக்குவிக்கும் கொள்கை முயற்சியாக வாடிக்கையாளர் பணிகளை முன்னேற்றும் நோக்குடன் கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோபரேசனுக்கு அதன் தலைமை அலுவலகத்தில் தன்னியக்க கொடுக்கல் வாங்கல் பொறித்தொகுதியை நிறுவவும் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் எந்நேரமும் திறந்திருக்கும் அடிப்படையில் இயங்கவும் அனுமதியளித்தது.

வங்கித்தொழில் பணிகளைக் கணனிமயப்படுத்தும் ஒரு நடவடிக்கை தொடர்பாக மத்திய வங்கி வர்த்தக வங்கிகளின் கூட்டுடன் காசோலைத் தீர்ப்பனவுத் தொழிற்பாடுகளை விரைவுபடுத்தும் பொருட்டுத் தன்னியக்கக் காசோலைத் தீர்ப்பனவு முறையொன்றினை ஏற்படுத்துவதற்காகத் தொடக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இப்புதியமுறை தற்போதைய காசோலைத் தீர்ப்பனவு செய்முறையிலுள்ள காலதாமதத்தைக் குறைக்கும் என்பதுடன் கையாளத்தக்க காசோலையின் அளவையும் அதிகரிக்கும்.

### வங்கி மேற்பார்வை

நாணய விதிச் சட்டத்தின் 29 (1) பிரிவின் கீழ் 1985 இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் இருபது வர்த்தக வங்கிகளின் பரீட்சிப்புக்களை முடித்ததன் மூலம் 1984–85 பரீட்சிப்புக் காலப்பகுதியில் இலங்கையில் தொழிற்படும் ஒவ்வொரு வர்த்தக வங்கியினதும் பரீட்சிப்புக்களையும் நிறைவு செய்துள்ளது. அத்துடன் அனைத்து வர்த்தக வங்கிகளினதும் நிதி நிலைமைகள் ஒவ்வொரு மாத இறுதியிலும் வங்கிகளினால் வழங்கப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்களைக் கொண்ட கூற்றுக்களின் அடிப்படையில் கண்காணிக்கப்பட்டன. 1984 ஆம் ஆண்டிற்கான வங்கிகளின் இலாபத் தன்மையும் அவற்றினால் வழங்கப்பட்ட திரட்டுக்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டன. இலங்கையில் தொழிற்படும் வெளிநாட்டு வங்கிகள் அவற்றின் உள்நாட்டு அலுவலர்களுக்கு வழங்கிய பயிற்சி வசதிகளையும் குடிபெயர்ந்து செல்லும் இவ்வங்கிகளின் வேலையாட்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்குடன் திணைக்களம் கண்காணித்து வந்தது.

1979 இன் எண் 27 கொண்ட நிதிக் கூட்டு நிலையக் கட்டுப்பாட்டுச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் நாணயச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட நிதிக் கூட்டு நிலையங்களின் பரீட்சிப்பிலும் மேற்பார்வையிலும் திணைக்களம் ஈடுபட்டது. சட்டத்தின் உட்பிரிவு 15 (1) இன் கீழ் மூன்று நிதிக் கூட்டு நிலையங்களின் பரீட்சிப்பு 1985 ஆம் ஆண்டுப் பகுதியில் தொடங்கியது. இச்சட்டத்தின் கீழ் நிதிக் கூட்டு நிலையங்களிடமிருந்து பதிவு செய்வதற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு இவ்வாண்டுக் காலத்தில் ஆறு கூட்டு நிலையங்கள் நாணயச் சபையில் பதிவு செய்யப்பட்டன. திரவத் தன்மை, மூலதன நிதி விகிதம் மற்றும் ஒதுக்கு நிதியங்களுக்கான மாற்றல்கள் ஆகியன தொடர்பாக நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளை நிறைவேற்றுமுகமாக நிதிக் கூட்டு நிலையங்களினால் வழங்கப்பட்ட மொத்த வைப்புப் பொறுப்புக்களின் மாதாந்தக் கூற்றுக்கள் மொத்தத் திரவச் சொத்துக்கள், ஆண்டு இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகை என்பனவற்றிற்குச் சிறப்பான இடமளித்து ஆய்வு செய்யப்பட்டது.

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளினால் நிறுவப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணிக்கும் அதன் நிகழ்ச்சித் திட்டத்தினைத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது.

## அபிவிருத்தி நிதி

மத்திய வங்கியின் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழ் நடுத்தர, நீண்டகால மீள் நிதியிடல் கடன்களுக்கான கேள்வி 1985 இல் தொடர்ந்தும் மிதமானதாக இருந்ததுடன் வகைகள் II, III, IV ஆகிய வற்றின் கீழான மீள் நிதியிடலின் மொத்த ஒப்புதல்கள் ரூ. 1,436 இலட்சங் களாக விளங்கின. நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியத்தின் வகை 1 கிராமியக் கொடுகடன் திணைக்களத்தினுல் நிருவகிக்கப்படுகின்றது. ரூ. 1,020 இலட்சம் கொண்ட முக்கிய பங்கு சுற்றுலா விடுதிகளுக்கு வர்த்தக வங்கிகளினுல் வழங்கப்பட்ட கடன்கள் மீதான வட்டி நிலுவைகளுக்கு முதலிடுவதைப் பயன் படுத்துவது உள்ளிட்ட நலிவுற்ற கைத்தொழில்களை மீள்நன்னிலைப்படுத்துவதற் காகவே ஒப்புதலளிக்கப்பட்டது. மீள் நிதியிடல் ஒப்புதல்களின் பகுப்பாய்வொன்று அட்டவணை 2.2 இல் காட்டப்பட்டுள்ளது. வங்கித் துறையின் பெருமளவு தாராளமான திரவத் தன்மையின் காரணமாக ஏனைய துறைகளினது நிதிக்கான கேள்வி மிகக் குறைவாகக் காணப்பட்டது.

அட்டவணை 2.2

**நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம்**

**(வகைகள் II—IVஇன் கீழ் மீள்நிதியிடலின் ஒப்புதல்கள்)**

ரூபா பத்து இலட்சங்களில்

| வகை | 1983 கடன் தொகை | 1983 மீள் நிதியிடப்பட்ட தொகை | 1984 கடன் தொகை | 1984 மீள் நிதியிடப்பட்ட தொகை | 1985 கடன் தொகை | 1985 மீள் நிதியிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதித்துறை – II ... | 43.7 | 36.5 | 113.0 | 79.1 | 13.7 | 9.0 |
| IIIஉம் IVஉம் | | | | | | |
| (அ) வேளாண்மை ... | 27.8 | 19.2 | 0.1 | 0.1 | 2.6 | 1.6 |
| (ஆ) கைத்தொழில் ... | 9.7 | 7.0 | 98.2 | 49.1 | 38.9 | 27.2 |
| (இ) சுற்றுலா விடுதிகள் | 13.2 | 8.6 | — | — | — | — |
| (ஈ) ஏனையவை ... | 5.8 | 3.5 | 2.2 | 1.3 | 6.5 | 3.9 |
| நலிவுற்ற கைத்தொழில்களை மீள் நன்னிலைப்படுத்தல் | — | — | — | — | 145.5 | 101.9 |
| மொத்தம் | 100.2 | 74.8 | 213.5 | 129.6 | 207.2 | 143.6 |

மூலம்: **இலங்கை மத்திய வங்கி.**

சுற்றுலாக் கைத்தொழிலினுல் எதிர்நோக்கப்பட்ட கடுமையான நிதிப் பிரச் சனைகளைக் கருத்திற் கொண்டு அரசின் தொடக்க முயற்சிகளின் அடிப்படையில் மத்திய வங்கி 1984 இன் நடுப்பகுதியில் நிவாரண வழிமுறைகளின் தொகுப் பொன்றினை அறிவித்தது. இத்திட்டத்தின் கீழ் சுற்றுலா விடுதிகள் கடன்களின் மீதான முதலையும் வட்டியையும் மீளச் செலுத்துவதற்கான சட்டரீதியான கால அவகாசத்தை 1987 மாச்சு வரை பெறுவதற்குத் தகைமையுடையனவாக இருந் தன. இது நீடிக்கப்பட்ட காலப்பகுதியில் வெளிநிற்கும் படுகடனை மீள அட்ட வணைப்படுத்துவதன் மூலம் தொடரப்பட வேண்டுவதுடன் நிலுவையில் இருக்கும் வட்டியில் 60 சதவீதமான மீள் நிதியிடல் மத்திய வங்கியினுல் இடப்படுகின்றது. சுற்றுலாவில் தொடர்ச்சியாகக் காணப்படும் மந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு முன்னர் அனுமதிக்கப்பட்ட 80 சதவீதத்திற்கெதிராகக் கடன்களின் 100 சத வீதமான மீள் அட்டவணையைக் கொண்ட மேலுமொரு சலுகையுடன் சட்ட

ரீதியான கால அவகாசம் 1989 மாச்சு வரைக்கும் நீடிக்கப்பட்டது. அத்துடன் சுற்றுலா விடுதிகளினல் எடுத்துக் காட்டப்பட்ட தங்குமிட வீதத்தின்படி மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட சுற்றுலா விடுதிகளின் தொழிற்படு மூலதனத்தை ஈடுசெய்யும் பொருட்டு அரசினல் வட்டியற்ற கடனும் வழங்கப்பட்டது. கடன்களின் மீள் அட்டவணையிடல் வடிவிலமைந்த நிதி நிவாரணங்கள் ரூ. 3,328 இலட்சம் கூட்டுத்தொகையினை அடைந்து 57 சுற்றுலா விடுதிச் செயற்றிட்டங்களை முற்றுப் பெறச் செய்தன. இதேபோன்று ரூ. 1,502 இலட்சம் வெளிநிற்கும் கடன் நிலுவைகளைக் கொண்டுள்ள இன்னுமொரு 40 சுற்றுலா விடுதிகளுக்காகவும் மீள் அட்டவணையிடலைத் தொடங்குவது பற்றி ஆலோசிக்கப்படுகின்றது. ரூ. 756 இலட்சம் தொகையினையடைந்த 41 சுற்றுலா விடுதிகளின் வட்டி நிலுவைகள் வங்கிகளினல் முதலிடப்பட்டதுடன் கோரப்பட்ட மீள் நிதிக்கும் மத்திய வங்கியினல் ஒப்புதலளிக்கப்பட்டது. சுற்றுலாக் கைத்தொழிலின் நிவாரணத்திற்காக இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் அட்டவணை 2.3 இல் காட்டப்பட்டுள்ளன. நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்துடன் தொடர்பான இன்னுமொரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாதெனில் பெருந்தோட்டத் துறைக்கு நடுத்தர முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முதலீடுகளின் உள்நாட்டு நிதிக் கூறுகளுக்காக ரூ. 2,600 இலட்சம் கொண்ட தொகையை மீள் நிதியிடல் வசதியாக வழங்குவதென மத்திய வங்கி எடுத்துள்ள தீர்மானமேயாகும்.

அட்டவணை 2.3

**சுற்றுலாக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் — 1985 ஆம் ஆண்டில் கடன்களின் மீள் அட்டவணை**

| கொடுகடன் நிறுவணங்களின் பெயர் | முடிவடைந்த மீளட்டவணை | | பரிசீலனையிலுள்ள மீளட்டவணை | | மத்திய வங்கியினல் மீள்நிதியிடப்பட்ட நிலுவையிலிருக்கும் வட்டி |
|---|---|---|---|---|---|
| | உணவகங்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | உணவகங்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | தொகை (ரூபா.) |
| இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ... | 25 | 132,686,710 | — | — | 36,861,290 |
| தேசிய அபிவிருத்தி வங்கி ... | 10 | 105,678,568 | — | — | 33,296,389 |
| மக்கள் வங்கி ... | — | — | 22 | 87,634,783 | கோரப்படவில்லை |
| இலங்கை வங்கி ... | 09 | 51,350,835 | 10 | 38,186,975 | கோரப்படவில்லை |
| அட்டன் நெசனல் வங்கி ... | 05 | 24,489,469 | — | — | 3,693,665 |
| வர்த்தக வங்கி ... | 04 | 4,941,450 | 08 | 24,383,776 | கோரப்படவில்லை |
| கிறின்லேஸ் வங்கி ... | 01 | 6,964,285 | — | — | கோரப்படவில்லை |
| கபிப் வங்கி ... | 01 | 1,633,968 | — | — | கோரப்படவில்லை |
| இந்திய அரச வங்கி ... | 01 | 2,077,702 | — | — | கோாப்படவில்லை |
| ஐரோப்பிய ஆசிய வங்கி ... | 01 | 3,059,256 | — | — | 1,833,943 |
| மொத்தம் ... | 57 | 332,882,243 | 40 | 150,205,534 | 75,685,287 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் II கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளினல் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் கடன்களுக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த நிதியின் பயன்பாடு முன்னைய காலப் பகுதியில் ரூ. 100 இலட்சமாக இருந்த மாதாந்த ஒப்புதல்களுடன் ஒப்பிடுகையில் பின்னரைப்பகுதியில் ரூ. 300 இலட்சங்களுக்கு அதிகரித்தமையுடன் சேர்ந்து

1985 காலப்பகுதியில் முன்னேற்றமடைந்தது. இம்முன்னேற்றத்திற்குக் கடன்களுக்குப் பின்பற்றப்பட்ட பரந்த தகைமைமிக்க நிபந்தனைகளும் வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மேலதிக ஊக்குவிப்புக்களுமே பெருமளவு காரணமாகும். அத்துடன் 1985 யூனிலிருந்தும் சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் II கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழான ஆகக் கூடிய கடனின் அளவு முன்னைய அளவான ரூ. 20 இலட்சங்களிலிருந்து ரூ. 40 இலட்சங்களுக்கு உயர்த்தப்பட்டது. இவ்வதிகரிப்பு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உத்தரவாதக் காப்பீடு ரூ. 800,000 இலிருந்து ரூ. 1,200,000 இற்கு அதிகரித்தமையின் மூலம் ஆதரவளிக்கப்பட்டது.

மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மூன்று உத்தரவாத திட்டங்களுடன் இணைந்தபின் தொடர்பான நடவடிக்கைகள் 1985 இல் தீவிரப்படுத்தப்பட்டன. மொத்தமாக 81 செயல் திட்டங்கள் நேரடி பரிசீலனைக்குட்பட்டிருந்தன. மீளளிப்புக்களை முன்னேற்றுவதற்கும் நலிவுற்ற பிரிவுகளை மீள் நன்னிலைப் படுத்துவதற்கும் மத்திய வங்கியின் மிகக் கூடியளவு செயற்பாடுமிக்க பின்தொடர் நடவடிக்கைகள் உதவின. இரண்டு சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டங்களின் கீழ் மூன்று தவணைகளுக்கும் கூடுதலான நிலுவைகளையுடைய கடன்களின் எண்ணிக்கை 1984 இல் அத்தகைய கடன்களின் எண்ணிக்கையான 850 இலிருந்து 1985 இல் 701 இற்கு வீழ்ச்சியடைந்தமையின் மூலம் 1985 இல் வீழ்ச்சியடைந்த செயற்பாட்டினை எடுத்துக் காட்டியது.

**கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகள்**

கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகளின் தொகுப்பொன்று அட்டவணை 2.4 இல் காட்டப்பட்டுள்ளது.

**சிறிய அளவு கைத்தொழில் திட்டம்**

1978 இல் தொடங்கிய சிறிய அளவு கைத்தொழில்கள் திட்டத்தின் கீழ், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் விதந்துரைப்புக்களின்மீது கொடுகடன் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களுக்கு அரசின் சார்பில் மத்திய வங்கி உத்தரவாதத் திட்டங்களை வழங்கியது. சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் தொடங்கியதுடன் 1981 இறுதியில் உத்தரவாதங்களின் வழங்கல் நிறுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மொத்தமாக 767 உத்தரவாதங்கள் வழங்கப்பட்டதெனினும் 508 கடன்கள் முழுமையாக மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டதுடன் 1985 இறுதியில் 62 உத்தரவாதங்கள் காலங்கடந்தனவாக அல்லது புறக்கீடு செய்யப்பட்டனவாகக் கருதப்பட்டன. 1985 இறுதியில் தொழிற்படும் கடன்களின் எண்ணிக்கை 148 ஆக விளங்கி ரூ. 36 இலட்சம் கொண்ட வெளிநிற்கும் கடன் நிலுவைகளைக் கொண்டிருந்தன. இவற்றில் 118 கடன்கள் நிலுவையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளன. 1985 திசெம்பர் இறுதியில் ரூ. 15 இலட்சம் தொகைக்குக் கொடுகடன் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 47 கோரல்களை மத்திய வங்கி தீர்த்து அல்லது ஏற்றுக்கொண்டிருக்கிற வேளையில் இரண்டு கோரல் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இக்கொடுப்பனவுகள் அரசின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தும் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ரூ. 852,000 கொண்ட உத்தரவாதக் கட்டண சேகரிப்புக்கள் திறைசேரித் துணைச் செயலாளர் கணக்கில் காலத்துக்குக் காலம் படிப்படியாக வைப்புச் செய்யப்பட்டன.

அட்டவணை 2.4

## மத்தியவங்கிக் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் (1984—1985)

### (1985 டிசெம்பர் 31 இல் உள்ளபடி)

(தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயம் | சிறிய அளவுக் கைத்தொழில்கள் | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் — சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்- I | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் — சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்-II | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | | 1985 | | 1984 | | 1985 | | 1984 | | 1985 | |
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| வழங்கப்பட்ட கடன்கள் ... | 767 | 31.2 | 767 | 31.2 | 1,657 | 282.3 | 1,664 | 284.1 | 372(உ) | 141.0 | 831 | 382.3 |
| உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் ... | 767 | 23.4(அ) | 767 | 23.4(அ) | 1,657 | 155.5(இ) | 1,664 | 156.4(இ) | 372 | 77.4(ஈ) | 831 | 204.7(ஈ) |
| முழுமையாகப் பெறப்பட்ட கடன்கள் ... | 441 | 11.4 | 508 | 17.2 | 476 | 28.6 | 691 | 51.2 | 11 | 1.3 | 23 | 4.1 |
| புறக்கீடு செய்யப்பட்ட / காலங்கடந்த உத்தரவாதங்கள் ... | 61 | 3.6 | 62 | 3.6 | 45 | 11.4 | 45 | 11.4 | 15 | 2.4 | 23 | 6.9 |
| **அனுமதிக்கப்பட்ட / தீர்க்கப்பட்ட கோரல்கள்** | | | | | | | | | | | | |
| (i) வெளிநிற்கும் கடன்கள் ... | 35 | 1.25 | 47 | 2.0 | 50 | 3.04 | 95 | 10.835 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| (ii) அனுமதிக்கப்பட்ட பொறுப்புக்கள் | 35 | 0.75 | 47 | 1.5 | 50 | 1.82 | 95 | 6.502 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| **நிராகரிக்கப்பட்ட கோரல்கள்** ... | | | | | | | | | | | | |
| (i) வெளிநிற்கும் கடன்கள் ... | 1 | 0.2 | 2 | 0.22 | 5 | 1.58 | 10 | 6.83 | இல்லை | இல்லை | 2 | 0.23 |
| (ii) கோரப்பட்ட தொகை ... | 1 | 0.15 | 2 | 0.16 | 5 | 0.88 | 10 | 1.66 | இல்லை | இல்லை | 2 | 0.1 |
| வெளிநிற்கும் கடன்கள் ... | 229 | 6.09(ஆ) | 148 | 3.6(ஆ) | 1,081 | 151.5(ஆ) | 823 | 105.8(ஆ) | 346 | 116.5(ஆ) | 783 | 371.4(இ) |
| (நிலுவைகள் இருப்பவற்றில்) ... | 173 | 5.0 | 118 | 0.9 | 619 | 91.9 | 504 | 51.9 | 58 | 11.5 | 79 | 18.5 |
| வெளிநிற்கும் உத்தரவாதங்கள் ... | 229 | 4.57(அ) | 148 | 2.7(அ) | 1,081 | 86.6(இ) | 823 | 60.9(இ) | 346 | 65.2(ஈ) | 783 | 231.9(இ) |
| **தீராத கோரல்கள்** ... | | | | | | | | | | | | |
| (i) வெளிநிற்கும் கடன்கள் ... | 23 | 1.41 | 13 | 0.4 | 88 | 16.3 | 69 | 14.1 | 3 | 0.22 | 5 | 0.52 |
| (ii) கோரப்பட்ட தொகை ... | 23 | 1.06 | 13 | 0.3 | 88 | 9.8 | 69 | 8.5 | 3 | 0.13 | 5 | 0.31 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்புகள்:
(அ) 75 சதவீதமான வெளிநிற்கும் கடன்கள்.
(ஆ) அறவிடப்பட்ட தவணைப்பணம் தவிர்ந்த.
(இ) 60 சதவீதமான வெளிநிற்கும் கடன்கள் ஆகக் கூடியது ரூ. 400,000/-.
(ஈ) ரூ. 2,000,000 மற்றும் ரூ. 1,200,000 வரையான கடன்களையும் ரூ. 20 இலட்சத்திற்கும் ரூ. 40 இலட்சத்திற்கும் இடையிலான கடன்களையும் பொறுத்த வகையில் ஆகக்கூடியது ரூ. 800,000 என்ற வகையில் 60 சதவீதம் கொண்ட வெளிநிற்கும் கடன்கள்.
(உ) 1985 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டம் I இற்கு மாற்றப்பட்ட 5 உத்தரவாதங்களையும் உள்ளடக்கும்.

## சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டம்—I

பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் தொடர்க் கொடுகடன் 942 சிஈ யின் முழுப் பயன்பாட்டுடன் 1984 இன் பிற்பகுதியில் சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டம் I இன் கீழான கொடுகடன் உத்தரவாதங்களின் வழங்கல் முற்றுப் பெற்றது. இத்திட்டத்தின் கீழ் மத்திய வங்கி ரூ. 2,841 இலட்சங்களைக் கொண்ட 1,664 கொடுகடன் உத்தரவாதங்களை வழங்கியது. 1985 திசெம்பர் இறுதியில் ரூ. 512 இலட்சம் கொண்ட 691 கடன்கள் முழுமையாக மீளளிப்புச் செய்யப் பட்டதாக அறிவிக்கப்பட்டது. 1985 இறுதியில் வெளிநின்ற கடன்களின் எண்ணிக்கை 823 ஆகவும் கடன் நிலுவைகள் ரூ. 1,058 இலட்சங்களாகவும் காணப்பட்டன. இவற்றில் 504 கடன்கள் அல்லது மொத்தக் கடன் எண்ணிக்கையில் 30 சதவீதம் நிலுவையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. 1985 இறுதியில் கொடுகடன் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூ. 65 இலட்சம் பெறுமதி கொண்ட 95 கோரல்களை மத்திய வங்கி தீர்ப்பனவு செய்தது. மத்திய வங்கி ரூ. 16.6 இலட்சம் தொகை கொண்ட 10 கோரல்களை நிராகரித்தது. சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் I இன் கீழ்ப் பெறப்பட்ட உத்தரவாதக் கட்டணம் 1985 இறுதியில் ரூ. 78 இலட்சங்களாகக் காணப்பட்டது.

சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டம் I இன் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு அட்டவணை 2.5 ல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.5

**கைத்தொழில் வகைப்படியான கடன்களின் பகுப்பாய்வு சிறிய நடுத்தரக் கைத்தொழில் – திட்டம் I**

தொகை ஆயிரம் ரூபாய்களில்

| கைத்தொழில் | 1979—1985 | | |
|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | உத்தரவாதமளிக் கப்பட்ட தொகை |
| 1. நெல் குத்துதல் ... | 352 | 53,510 | 31,500 |
| 2. மென் பொறியியல் .. | 192 | 24,775 | 13,869 |
| 3. செங்கட்டிகளும் ஏனைய கட்டிடப் பொருட்களும் | 242 | 48,949 | 27,260 |
| 4. தைக்கப்பட்ட உடுப்புகள், பத்திக் கைத்தறி, விரிப்புக்கள் இன்னோரன்னவை .. | 141 | 21,342 | 11,125 |
| 5. இறப்பரும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களும் .. | 30 | 8,794 | 4,397 |
| 6. காலணிகளும் ஏனைய தோல் உற்பத்திகளும் | 22 | 3,452 | 1,821 |
| 7. பனங்கட்டியும் கரும்பு உற்பத்திகளும் .. | 6 | 198 | 119 |
| 8. தளபாடங்களும் ஏனைய மர பொருட்களும் | 80 | 9,806 | 5,579 |
| 9. தும்பும் தும்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளும் ... | 96 | 8,901 | 5,321 |
| 10. எழுது கருவிகளும் ஏனைய தாளுற்பத்திகளும் | 27 | 4,636 | 2,582 |
| 11. உணவும் குடி பானங்களும் .. | 80 | 13,202 | 6,953 |
| 12. பூச்சுக்கள், மினுக்கிகள், வண்ணமெழுகு இன்னோரன்னவை ... | 16 | 5,503 | 2,967 |
| 13. வானொலி ஈருருளிகள் என்பவற்றிற்கான உதிரிப்பாகங்கள் .. | 11 | 725 | 435 |
| 14. சவர்க்காரம் ஏனைய குளியலறைப் பொருட்கள் | 30 | 2,004 | 1,177 |
| 15. கைப்பணிப் பொருட்களும் பொம்மைகளும்... | 29 | 951 | 571 |
| 16. சுருட்டுக்களும் பீடிகளும் ... | 6 | 48 | 29 |
| 17. மீன்பிடி வள்ளங்களும் உள்ளூர் கடற்றொழிலும் ... | 14 | 11,100 | 4,700 |
| 18. நகைகளும் இரத்தினக் கற்களும் ... | 15 | 944 | 566 |
| 19. விளையாட்டுப் பொருட்கள் ... | 2 | 80 | 48 |
| 20. வேளாண்மைக் கருவிகள் ... | 13 | 2,213 | 1,128 |
| 21. கண்ணாடியும் ஏனைய உற்பத்திகளும் ... | 6 | 1,051 | 631 |
| 22. பித்தளையும் அலுமினியப் பொருட்களும் ... | 44 | 6,850 | 3,370 |
| 23. மரம் அரிதல் ... | 51 | 10,613 | 6,345 |
| 24. அச்சகம் ... | 43 | 12,706 | 6,831 |
| 25. பல்வகை ... | 116 | 31,763 | 17,089 |
| மொத்தம் ... | 1,664 | 284,116 | 156,413 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## சிறிய நடுத்தர அளவு கைத்தொழில் திட்டம்--II

1982 இல் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினல் வழங்கப்பட்ட ஐ. அ. டொலர் 300 இலட்சம் தொகை கொண்ட கொடுகடன் தொடரில் இரண்டாவது சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டம் தொடக்க ஆண்டுகளில் குறைந்த பயன்பாட்டினையே அடைந்தது. எனினும் ஆகக்கூடிய கடன் அளவு ரூ. 20 இலட்சங்களிலிருந்து ரூ. 40 இலட்சங்களுக்கு அதிகரித்தமையுடன் கொடுகடன் நிறுவனங்கள் பரந்தளவில் பங்குபற்றியமையாலும் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் விரைவான அதிகரிப்பினை எடுத்துக் காட்டின. இது தொடர்பாக மத்திய வங்கியினல் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதங்கள் ரூ. 3,823 இலட்சங்களைக் கொண்ட 831 கடன்களுக்கு அதிகரித்தது. 1985 இறுதியில் 23 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்டவேளையில் 79 கடன்கள் நிலுவையில் இருந்தன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் சமர்ப்பித்த ரூ. 3.1 இலட்சம் பெறுமதி கொண்ட 5 கோரல்கள் பரிசீலனையின் கீழ் உள்ளன. சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II இன் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் கைத்தொழில் வாரியான பகுப்பொன்று அட்டவணை 2.6 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.6

### கைத்தொழில் வகைப்படியான கடன்களின் பகுப்பாய்வு
### சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II

தொகை ஆயிரம் ரூபாய்களில்

| கைத்தொழில் | 1982 – 1985 | | | 1985 | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை |
| 1. உணவு பதப்படுத்தல் ... | 248 | 118,320 | 62,674 | 148 | 81,630 | 42,800 |
| 2. ஏனைய வேளாண்மைக் கைத்தொழில்கள் ... | 24 | 8,673 | 4,484 | 12 | 2,059 | 1,235 |
| 3. இறப்பர் உற்பத்திகள் ... | 32 | 21,432 | 10,639 | 17 | 13,535 | 6,671 |
| 4. உலோக உற்பத்திகள் ... | 97 | 34,493 | 18,196 | 43 | 22,557 | 10,989 |
| 5. கட்டடப் பொருட்கள் ... | 56 | 29,284 | 16,855 | 30 | 17,564 | 10,203 |
| 6. கட்டடவாக்க ஒப்பந்தம் ... | 4 | 5,575 | 2,785 | 4 | 5,575 | 2,785 |
| 7. மர உற்பத்திகள் ... | 71 | 21,814 | 12,633 | 33 | 12,072 | 6,788 |
| 8. ஆடைகள் ... | 56 | 23,253 | 13,175 | 27 | 9,728 | 6,077 |
| 9. புடவைகள் ... | 20 | 8,053 | 4,832 | 8 | 3,083 | 1,850 |
| 10. தொழிற்கூடத்திருத்தல் ... | 25 | 7,795 | 4,677 | 19 | 6,270 | 3,762 |
| 11. ஏனையவை ... | 198 | 103,594 | 53,715 | 118 | 67,229 | 34,057 |
| மொத்தம் ... | 831* | 382,286 | 204,665 | 459 | 241,302 | 127,212 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* 1984இல் உத்தரவாதமளிக்கப்பட்ட ரூ. 14.9 இலட்சம் தொகை கொண்ட கடன்கள் தவிர்ந்த மீதி 1985 இன் சிறிய நடுத்தரக் கைத்தொழில் Iஇற்கு மாற்றப்பட்டன.

## கிராமியக் கொடுகடன்

அண்மைய ஆண்டுகளில் மத்திய வங்கி வங்கித்தொழில் அமைப்பின் கிராமியக் கொடுகடன் தொழிற்பாடுகளை வழிப்படுத்துவதிலும், மேற்பார்வை செய்வதிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. கிராமியக் கொடுகடனுடன் தொடர்பான முழுக் கொள்கைகளையும் உருவாக்குவதில் வங்கி முக்கிய பங்கினை ஆற்றியுள்ளது. தகைமைமிக்க கிராமியக் கொடுகடன் தொழிற்பாடுகளுக்காக ஒரு நிறைவான நிறுவன ரீதியான வடிவமைப்பு வேலையினைநிறுவுவதே முதன்மைக் குறிக்கோளாக இருந்தது. கிராமியப் பகுதிகளில் கொடுகடன் ஏற்பாடுகளை நிறைவு செய்வதற்காக 1985 இல் நான்கு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஏற்படுத்தப்பட்டன.

வங்கி ஈடுபட்டிருந்த மிக முக்கியமான துறைகளாகப் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தை உருவாக்குவதில், மத்திய வங்கியின் மீள்நிதியிடல் மூலம் ஆதரவளிக்கப்பட்ட பல்வேறு கொடுகடன் திட்டங்களின் கீழ் வங்கிகளினுல் வழங்கப்பட்ட குறுங்கால வேளாண்மைக் கடன்கள் மற்றும் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன்கள் ஆகியவற்றிற்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை உருவாக்குதல் ஆகியன விளங்கின. 1986 இல் இரண்டு திட்டங்களின் நடைமுறைப்படுத்தல்கள் தொடங்கும்.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் கொடுகடன் கிடைப்பனவை உயர்த்துதல், கொடுகடன் முடிவுப் பயன்பாட்டினை மேற்பார்வை செய்யும் மட்டத்தினை முன்னேற்றல், மீளளிப்பு மட்டங்களை அதிகரித்தல் ஆகியவற்றினைக் கருத்திற் கொண்டு முன்னைய திட்டத்திற்குப் பல புதிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஒவ்வொரு பருவகாலத் தொடக்கத்திலும் கடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவையைத் தவிர்க்கும்பொருட்டு இப்புதிய திட்டத்தின் கீழ் கடன் பெறுநர் ஒவ்வொருவருக்குமான கொடுகடன் எல்லைக்கு மூன்று ஆண்டு காலத்திற்கு வங்கிகளினுல் ஒப்புதலளிக்க முடியும். வேளாண்மையாளர் சமூகத்திற்கான உற்பத்திக் கொடுகடன் ஏற்பாடுகளின் துறைசார்ந்த அணுகுமுறைகளை வங்கிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் இப்புதிய திட்டம் எதிர்பார்க்கின்றது. சிக்கன கொடுகடன் கூட்டுறவுச்சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன இத்திட்டத்தின் தொழிற்பாட்டில் இளைய பங்காளர்களாக உள்ளடக்கப்பட்டுள்ளமை இன்னுெரு புதிய பண்பாகும். இயற்கை அழிவுகளின் காரணமாகச் செலுத்தத் தவறியதாகக் கருதப்படும் கடன்களை மீள் அட்டவணைப் படுத்தலையும் இத்திட்டம் வழங்கியுள்ளது. ஆண்டிற்கு 1.5 சதவீதத்திலானமீள் அட்டவணையிடப்பட்ட கடன்களைப் பொறுத்தவரை மத்திய வங்கி மீள் நிதியிடலையும் வழங்கும். மேலும், கடந்த காலத்தில் மீள் செலுத்தல் செயலாற்றத்தை நன்கு கொண்டிருந்த கடன் பெறுநர்களுக்குப் பயிர்ச்செய்கைக் கடனுக ரூ. 7,500 வரையிலான தொகையை உத்தரவாத மெதுவுமின்றி வழங்கவும் வங்கிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. மேலும், திட்டத்தின் சிறப்பான கண்காணிப்பினை அடையும்பொருட்டுக் கருத்துரைக்கும் முறை இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இது இத்திட்டத்தின் கீழான கடன் வழங்கல் தொடர்பான தரவுகளைக் கணனிமயப்படுத்துவதற்கான தொடக்க வேலைகளையும் கொண்டுள்ளது.

## நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகை I இன்

| கொடுகடன் திட்டத்தின் பெயர் | மீள் நிதியிடல் ஒதுக்கீடுகள் (ரூ.ப.இ.) |
| --- | --- |
| **அ. 1985ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொடுகடன் திட்டங்கள்** | |
| 1. ஒகிட் மரச் செய்கைக்காக இலங்கை வங்கி / வரையறுக்கப்பட்ட இலங்கைப் புகையிலைக்கூட்டு நிலையத்திற்கான கொடுகடன் திட்டம் ... | 4.50 |
| 2. தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... ... | 55.00 |
| 3. கடற்றொழில் துறை வங்கி நிதியிடல் திட்டம் ... ... | 140.00 |
| 4. குள நீர்ப்பாசனம் நவீனமயப்படுத்தல் செயல்திட்டம் ... | 7.69 |
| 5. நுவரேலியா மாவட்டத்தில் பாற்பண்ணை அபிவிருத்திக்கான கடன் திட்டம் ... | 10.00 |
| 6. குருநாகல் மாவட்டத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான பண்ணைப் பொறித் தொகுதிக் கடன் திட்டம் ... | 76.5 |
| 7. சம்மாந்துறை தேர்தல் தொகுதியின் பாற்பண்ணை அபிவிருத்தி (முன்னோடி) செயற்றிட்டத்திற்கான கடன் திட்டம் ... ... | 0.12 |
| 8. மகாவலி செயற்றிட்டப் பகுதியில் குடியேறியவர்கள் உழுபொறிகளைக் கொள்வனவு செய்வதற்கு உதவும் கொடுகடன் திட்டம் ... ... | 55.00 |
| 9. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் நிறுவப்படும் வளமாக்கி களஞ்சியங்களுக்கான கொடுகடன் திட்டம் ... ... ... | 14.00 |
| 10. அபுதாபியினால் நிதியளிக்கப்பட்ட வடமேற்குக் கரை கடற்றொழில் அபிவிருத்தித் திட்டம் ... ... ... | 60.00 |
| 11. ஒகிட் பயிர்ச் செய்கைகளின் கொடுகடன் திட்டம் மக்கள் வங்கி / சர்வோதயம் / லக்மல்சல ... ... | 3.00 |
| 12. கடற்றொழில் கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன் திட்டம் ... | 42.00 |
| 13. மாத்தளை, புத்தளம் மாவட்டங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம் ... ... ... | 54.79 |
| 14. காற்றுடி ஆலைகளுக்கு நிதியிடுவதற்கான திட்டம் ... ... | 2.56 |
| 15. மாத்தறை மாவட்டத்தில் இளைஞர் சுயதொழில் வாய்ப்புத் திட்டம் ... | 8.20 |
| 16. இலங்கை கிராமியக் கொடுகடன் செயற்றிட்டக் கடன் திட்டம் ... | 137.00 |
| 17. தேயிலை சிறு உடைமையாளர்களுக்கான வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... | 7.50 |
| 18. இலங்கை கிராமிய கொடுகடன் திட்டத்திற்குள் அடங்காத மாவட்டங்களில் சுமை இழுக்கும் விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு நிதியிடுவதற்கான கொடுகடன் திட்டம்... | 5.60 |
| 19. அநுராதபுர மாவட்டத்தில் கிராம எற்பு சுய வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்களுக்கு நிதியிடலுக்கான கொடுகடன்திட்டம்... | 6.00 |
| 20. பயிரிடுகைக்கு முன்னுள்ள விதை உருளைக் கிழங்கு சிறு களஞ்கியங்களின் கட்டடவாக்கத்திற்கான கொடுகடன் திட்டம் ... ... | 1.00 |
| 21. பதுளை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி செயற்றிட்டம் ... | 7.00 |
| 22. மாதல் மீன்பிடிக்கான கொடுகடன் திட்டம் (கரையோர பாரவலை மீன்பிடி) ... | 5.00 |
| 23. பெல்வத்தை சீனிச் செயற்றிட்டத்தின்கீழ் கரும்பினை பயிரிடும் குடியிருப்பாளர்களுக்கான கொடுகடன் திட்டம் ... ... | 66.00 |
| 24. வவுனியா, மன்னார் மாவட்டங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமியஅபிவிருத்தி செயற்றிட்டம் ... ... ... | 32.00 |
| 25. செவனகல, இங்குரான, கந்தளாய் சீனி செயற்றிட்டத்தில் கரும்பினைப் பயிரிடும் சிறு வேளாண்மையாளர்களுக்கு உதவும் கொடுகடன் திட்டம் ... | 120.60 |
| 26. இறம்புக்கனைப் பிரதேசத்தில் இடைப் பயிர்ச் செய்கையுடன் மீள் நடுகை நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்வதற்காக தெங்கு வளர்ப்போருக்கு உதவுவதற்கான இலங்கை –ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெங்கு அபிவிருத்தி செயற்றிட்ட கொடுகடன் திட்டம் | 8.00 |
| **ஆ. 1985ஆம் ஆண்டுப் பகுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் திட்டங்கள்** ... | |
| 1. விக்டோரியா செயற்றிட்டத்தின்கீழ் இடம்பெயர்ந்த வர்த்தகர்கள் வர்த்தக கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கான கொடுகடன் திட்டம் ... | 22.00 |
| 2. ஈரவலய மாவட்டங்களிலும் மொனறாகலை மாவட்டத்திலும் இரு சில்லு உழுபொறிகளைக் கொள்வனவு செய்வதற்கான கொடுகடன் திட்டம் ... | 33.00 |
| 3. உணவு வேளாண்மை அமைப்பு/மாதர் பணியக செயற்றிட்டத்தின்கீழ் வருமான உருவாக்க நடவடிக்கைகளில் பெருந்தோட்டத்துறைப் பெண்களுக்கு உதவுவதற்கான சிறப்புக் கொடுகடன் திட்டம் ... | 1.00 |
| 4. குருநாகல் மாவட்டத்தில் சீன இஞ்சி, அன்னாசி, பாசன் பழங்களை பயிரிடுவதற்கான கொடுகடன் திட்டம் ... | 32.00 |
| 5. அநுராதபுரம் உலர்வலய வேளாண்மைச் செயற்றிட்டக் கடன் திட்டம் ... | 22.30 |
| 6. உயிரியல் வாயு பொறித்தொகுதியை நிறுவுவதற்கான மினிப்பே திட்டத்தின் குடியேற்றக்காரர்களுக்கு உதவுவதற்கான கொடுகடன் திட்டம் ... | 0.40 |
| மொத்தம் | 1,039.76 |

அட்டவணை 2.7

## கீழ் மீள் நிதியிடுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்ட கடன் திட்டங்கள்

| 31.12.85இல் பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ. ப. இ.) | 31.12.85இல் பயன்படுத்தப்படாத தொகை (ரூ. ப. இ.) | செயற்றிட்டம் தொடங்கிய நாள் | ஒதுக்கீடுகளின் பகிர்ந்தளிப்புக் காலப் பகுதி (ஆண்டுகள்) |
|---|---|---|---|
| 3.49 | 1.01 | 03.02.79 | 3 |
| 42.63 | 12.37 | 26.03.79 | 3 |
| 109.76 | 30.24 | 02.07.79 | 3 |
| 7.69 | — | 02.06.79 | 1 |
| 9.32 | 0.68 | 22.08.79 | 3 |
| 54.25 | 22.25 | 28.10.79 | 5 |
| — | 0.12 | 27.11.79 | 3 |
| 6.01 | 48.99 | 19.11.79 | 3 |
| 9.14 | 4.86 | 13.10.80 | 1 |
| — | 60.00 | 13.10.80 | 3 |
| 0.23 | 2.77 | 10.12.80 | 5 |
| 0.33 | 41.67 | 28.04.81 | 2 |
| 35.51 | 10.28 | 08.05.81 | 6 |
| 1.05 | 1.51 | 11.12.81 | 1 |
| 4.53 | 3.67 | 10.04.81 | — |
| 53.33 | 83.67 | 01.07.82 | 1 |
| 0.85 | 6.65 | 11.08.82 | 1 |
| 0.01 | 5.59 | 10.09.82 | 2 |
| 1.75 | 4.25 | 14.10.82 | 2 |
| — | 1.00 | 01.03.83 | 1 |
| 1.91 | 5.09 | 27.09.83 | 5 |
| 0.52 | 4.48 | 26.04.84 | 1 |
| — | 66.00 | 10.05.84 | 6 |
| 0.27 | 31.73 | 14.06.84 | 4 |
| 2.91 | 117.69 | 20.09.84 | 5 |
| 0.04 | 7.96 | 26.12.84 | 3 |
| — | 22.00 | 11.03.85 | 2 |
| 1.49 | 31.51 | 26.03.85 | 2 |
| 0.21 | 0.79 | 31.12.85 | 1 |
| — | 32.00 | 27.06.85 | 3 |
| — | 22.30 | 02.07.85 | 3 |
| — | 0.40 | 16.09.85 | 1 |
| 747.23 | 692.53 | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணையிடப்பட்ட கொடுகடன் திட்டங்களின் கீழ் கடன் வழங்கலின் போது வங்கிகளுக்கு ஏற்படும் இழப்புக்களில் 50 சதவீதமானவற்றிற்குப் புதிய கொடுகடன் உத்தரவாதத் திட்டம் உத்தரவாதமளிக்கும். எனினும் ஆகக்கூடிய காப்பீடு கடனென்றிற்கு ரூ. 25,000 இற்கு மட்டுப்படுத்தப்படும். இந்நோக்கத்திற்காக ரூ. 3,000 இலட்சம் கொண்ட ஆரம்ப ஒதுக்குடன் மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாத நிதியத்தை நிறுவியுள்ளது.

கிராமியக் கொடுகடன் மதியுரைச்சபை மீளாய்விற்குரிய ஆண்டில் ஆறு தடவைகள்கூடியது. இக் கூட்டங்களில் கிராமியக் கொடுகடன் மற்றும் கிராமிய அபிவிருத்தியுடன் தொடர்பான பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடலுக்காக எடுக்கப்பட்டன. கலந்துரையாடப்பட்ட சில முக்கிய விடயங்களாவன மாத்தறை சிறு வேளாண்மையாளர் அபிவிருத்தி செயற்றிட்டம் நீண்ட காலம் வரவேண்டிய வேளாண்மைக் கடன்களின் பொருட்டான மீள் அட்டவணையிடும் திட்டம், கடற்றொழிற்றுறை வங்கி நிதியிடல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கான மீள் நிதியிடல் திட்டம், கிராமியத்துறையில் சேமிப்புகளைத் திரட்டல், சுழலும் சேமிப்புக் குழுக்களை (சீட்டுமுறை) அமைத்தல், இலங்கையில் பண்ணைக் கொடுகடன் என்பனவாகும். கிராமியக் கொடுகடன் மதியுரைச் சபை மாத்தளை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ் இரு சில்லு உழு பொறிகளைக் கொள்வனவு செய்வதற்கான கடன்கள், மற்றும் இலங்கை வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேளாண்மைக் கடன்களுக்கான மீள் அட்டவணையிடும் திட்டம் ஆகியவற்றின் மீதான மதிப்பீட்டு அறிக்கைகளையும் ஆராய்ந்தது.

கிராமியத் துறைக்கு நடுத்தர, நீண்ட காலக் கொடுகடன்களை வழங்குவதற்காக இவ்வாண்டுக் காலத்தில் பல புதிய கொடுகடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் முன்னைய பல திட்டங்கள் புதுத்திருத்தங்களுக்கும் உட்பட்டன. இலங்கை எண்ணெய்க் கொழுப்புக் கூட்டுத்தாபனத்தின் சோயா அவரை, சோளம் என்பனவற்றின் கொள்வனவிற்கு வசதியளிக்கும் முகமாக மத்திய வங்கி சந்தைப்படுத்தல் கடன் திட்டமொன்றையும் அறிமுகப்படுத்தியது.

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகை I இன் கீழ் தற்போது நடைமுறையில் உள்ள நடுத்தர நீண்ட காலக் கொடுகடன் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் அட்டவணை 2.7 இல் காட்டப்பட்டுள்ளது.

ஆண்டின் இறுதியில் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட திட்டங்களின் கீழ் மீள் நிதியிடல் ஏற்பாடுகளுக்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த நிதி ஒதுக்கு ரூ. 10,397.6 இலட்சங்களாக அமைந்ததுடன் இதில் ரூ. 3,472.3 இலட்சம் அல்லது 33.4 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. கொடுகடன் பகிர்ந்தளிப்பில் ஏற்பட்ட இம்மெதுவான செயற்பாட்டிற்குக் கொடுகடனுக்கான குறைந்த கேள்வி, நாட்டின் சில பகுதிகளில் காணப்பட்ட அமைதியற்ற நிலைமைகள், திட்டங்களைப் பற்றிய விளம்பரங்கள் போதியதாக இல்லாமை, தொழிற்பாட்டு இடர்ப்பாடுகள், கொடுகடன் வழங்கல் முறையிலுள்ள குறைபாடுகள் போன்ற பல காரணிகள் காரணமாக இருந்தன. மேலும், மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்டுள்ள கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் ஈடுபட்டுள்ள முகவர்களிடையே சிறந்த இணைப்புக்கள் குறைவாகக் காணப்பட்டமையும் ஒரு காரணமாகும்.

அநுராதபுரம் உலர் வலய வேளாண்மைச் செயற்றிட்டம், குருநாகல் மாவட்டத்தில் சீன இஞ்சி, அன்னுசிப்பழம், பாசன்பழம் ஆகியனவற்றின் பயிர்ச் செய்கைக்கான கொடுகடன் திட்டம் போன்ற குறிப்பிட்ட புதிய திட்டங்களின் கீழான நிதியிடல்கள் இவ்வாண்டின் பிற்பகுதியிலேயே அறிமுகப்படுத்தப்பட்டமை யின் காரணமாக இவ்வாண்டுக் காலத்தில் கூடுதலான செயலாற்றத்தினைப் பதிவு செய்யவில்லை. எனினும், இரு சில்லு உழவுப்பொறிகள் போன்ற உடனடிக் கேள்விகளைக் கொண்ட விடயங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளைக் கொண்ட திட்டங்களின் செயற்பாடு திருப்திகரமானதாக இருந்தது.

மீளாய்விற்குரிய ஆண்டுக் காலப்பகுதியில், ஆசிய அபிவிருத்திவங்கியினால் உதவியளிக்கப்பட்டதும், மத்திய வங்கியை இணைப்பு முகவராகக் கொண்டதுமான இலங்கை கிராமிய கொடுகடன் செயற்றிட்டம் திருப்திகரமான செயற்பாட்டினைக் காட்டியது. மூல உடன்படிக்கை விலையில் 1,000 இரு சில்லு உழவு பொறிகள் வழங்குவதற்காக மீள்கட்டளையொன்று இலங்கை அரச வர்த்தக (உழவு பொறி) கூட்டுத்தாபனத்திற்குக் கையளிக்கப்பட்டதுடன், கூட்டுத்தாபனம் 1985 பெப்புரு வரியில் அவற்றை இறக்குமதி செய்தது. இழுபொறிகளை வழங்குவதற்கான புதிய ஒழுங்கொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன் கீழ் ஐந்து இழுபொறித் தயாரிப்பாளர்கள் இத்திட்டத்தின் கீழ் முறையான ஏற்றுக்கொள்ளப்பட்ட வழங் குநர்களாகப் பதிவு செய்யப்பட்டனர். முறையாக ஏற்றுக்கொள்ளப் பட்ட வழங்குநரிடமிருந்து கடன் பெறுநர்கள் தாம் விரும்பிய இழுபொறிகளைத் தெரிவு செய்ய அனுமதிக்கப்பட்டனர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரேயொரு வழங்குநர் இருந்த காலத்தில் அவதானிக்கப்பட்ட இழுபொறிகளின் பற்றுக்குறை வழங்கல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இப்புதியஒழுங்குகள் உதவின.

இவ்வாண்டுக் காலத்தில் ஒதுக்கில் ஒரு பகுதியை அரிசி ஆலைக் கூறிலிருந்து வேளாண்மையாளரின் கேள்வியைக் கொண்டிருந்த 200 நெல் சூடடிப்புப் பொறி களைக் கொள்வனவு செய்வதற்காக மாற்றுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டது. இழுபொறிகளுக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட வழங்கு நர்களைப் பதிவு செய்வதற்குப் பின்பற்றப்பட்ட நடைமுறைகளே இவ்விடயத் திற்கும் பின்பற்றப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மேலதிக 1,000 இரு சில்லு உழுபொறிக்கான நிதியிடல் ஆண்டில் இறுதியில் கிட்டத்தட்ட முடிவுற்றது. இவ்வாண்டுக் காலத்தில் செயற்பட்ட நெல் சூடடிப்புப் பொறியின் கொள்வனவிற்கான கடன் வழங்கல் அறுவடைக்காலம் தொடங்கும் 1986 இன் தொடக்கப் பகுதியில் இக்கூறு திருப்திகரமான செயற்பாட்டினைக் காட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குழாய்க் கிணறு அமைப்பதற்கான நிதியிடல் திருப்திகரமாக இல்லாமைக்கு உயர்ந்த மூலதனச் செலவும் சில மாவட்டங்களில் காணப்பட்ட குழப்பநிலைமைகளும் காரணங்களாகும். செயற் றிட்டத்தின் பூர்த்திக்காலத்தை 1986 யூன் 30 ஆம் நாள் வரை நீடிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

பண்ணை மற்றும் பண்ணைக்கு வெளியேயான முதலீடுகளின் தேவை, கிராமத் திற்கான தற்போதுள்ள வழங்கல் பொறிமுறையைத் தரமுயர்த்தும் வழிமுறைகள் இலங்கையில் வேளாண்மைக் கைத்தொழில் கொடுகடன் என்பனவற்றின்மீது ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனையாளர் குழுவொன்று ஆய்வுகளை மேற் கொண்டதுடன் அவர்களின் அறிக்கையும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு ஆண்டின் பிற்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டில், மக்கள் வங்கியின் 7 கிளைகள், இலங்கை வங்கியின் 4 கிளைகள், இரத்தினபுரி, கேகாலை, அம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கி ஆகியவற்றை உள்ளடக்கிய 12 கிளைகளின் வேளாண்மைக் கடனின் சொத்துப் பட்டியலின் பரிசீலனையை மத்திய வங்கி நிறைவு செய்தது. பரிசீலனை அறிக்கைகள் தொடர்பான வங்கிகளுக்கும் வங்கிக் கிளைகளுக்கும் அவற்றின் குறைபாடுகளை திருத்துவதற்கான பொருத்தமான விதந்துரைப்புக்கள் அனுப்பப்பட்டதுடன் மத்திய வங்கிக்கான இணக்க அறிக்கை ஒன்றினை அனுப்புமாறும் வேண்டப்பட்டது.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்

1985 இன் எண் 15 கொண்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நாணயச் சபை களுத்துறை, குருநாகல், மாத்தறை, அநுராதபுரம் ஆகிய நான்கு மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் முறையே புளத்சிங்கள, குளியாப்பிட்டி, யட்டியன, மிகிந்தலை ஆகிய இடங்களில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் அவற்றின் முதன்மை அலுவலகங்களை நிறுவுவதற்கான நான்கு ஒருங்கிணைந்த கட்டளைகள் 1985 யூன் அரச செய்தி மடலில் வெளியிடப்பட்டன.

இவ்வங்கிகள் வர்த்தக வங்கிகள் அபிவிருத்தி வங்கிகள் இரண்டுமாகும். அதே சமயம் இவை மாவட்ட மட்டத்தில் தனி வங்கிகளாகவும் அவற்றின் தொழிற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்தைப் பொறுத்தவரை முழுமையான சுய நிர்ணயம் உடையனவாகவும் இருப்பதனுல் அத்தகைய வங்கிகள் தெளிவான உள்ளூர் பண்புகளை உடையனவாக இருக்கவேண்டுவதுடன் அப்பிரதேசத்தின் உள்ளூர்த் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கத்தக்க நிலையிலும் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினதும் ஒப்புதலளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ஒவ்வொன்றும் ரூ. 100 இனைக் கொண்ட 500,000 பங்குகளை உள்ளடக்கிய ரூ. 500 இலட்சங்களாகும். வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 100 இலட்சமாக விளங்கியதுடன் இது முழுமையாக மத்திய வங்கியினுல் உதவப்பட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு காலத்தின் பின்னர் மத்திய வங்கி வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தில் 49 சதவீதம் வரையிலான பங்குகளை உள்நாட்டு நான்கு வர்த்தக வங்கிகளுக்கும் கூட்டுறவு நிலையங்களுக்கும் வழங்கலாம்.

ஒவ்வொரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினதும் முகாமையும் தலைவர் ஒருவரைக் கொண்ட ஐந்து உறுப்பினரைக் கொண்ட பணிப்பாளர் சபையினூடாக மேற்கொள்ளப்படும். சபையின் மூன்று பணிப்பாளர்கள் நிதியமைச்சரின் இசைவுடன் நாணயச் சபையினுல் நியமிக்கப்படுவர். அமைச்சரின் இசைவுடன் நாணயச்சபையினுல் நியமிக்கப்படும் மற்றைய இரு பணிப்பாளர்களும் பின்னைய கட்டத்தில் வங்கியின் பொதுச்சபையினுல் தெரிவு செய்யப்படுவர். அமைச்சரின் இசைவுடனே பணிப்பாளர்களிடையேயிருந்து தலைவர் நியமிக்கப்படுவார்.

வேளாண்மை, குடிசை மற்றும் சிறியளவு கைத்தொழில், மீன்பிடித்தொழில், வர்த்தகம், மற்றும் கிராமியப் பகுதிகளில் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை விருத்தி செய்வதன் வாயிலாகக் கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதே பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் குறிக்கோளாகும்.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி ஒவ்வொன்றும் வெளிநாட்டுச் செலாவணி வியாபாரம் தவிர்ந்த வங்கித்தொழில் அலுவல்களை மேற்கொள்ளவும், கொடுக்கல் வாங்கல் செய்யவும் ஏனையவற்றுடன் சில குறுங்கால, நடுத்தரகால, நீண்டகாலக் கடன்களை வழங்கவும் ஏனைய கடன்களைக் குறிப்பாக வேளாண்மையாளர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கும், வங்கியின் பணிப்பாளர் சபையினால் தன்மையில் சிறியளவிலானவை எனக்கருதப் படும் குடிசைக் கைத்தொழில்கள், வர்த்தகம் அல்லது கைத்தொழில் அல்லது உற்பத்தி நடவடிக்கைகளையுடைய ஏனைய வகையுடன் தொடர்புபட்டுள்ள மற்றைய தனிப்பட்ட ஆட்கள் அல்லது குழுக்களுக்கும் வழங்கவும் அதிகாரங்களைக் கொண்டுள்ளன.

1985 இறுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமது கிளை அமைப்பினை விரிவாக்கியுள்ளன. தொடக்கத்தில் ஒவ்வொரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியும் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒரு கிளையினைக் கொண்டிருக்க எண்ணியுள்ளன. கிளை அமைப்பு, விரிவாக்கம், பயிற்சி பெற்ற அலுவலர், அலுவலக இடவசதி, மற்றும் ஏனைய அனுகூலங்களின் கிடைப்பனவில் தங்கியுள்ளது.

1985 இல் திறக்கப்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| வங்கியின் பெயர் | கிளைகளின் எண்ணிக்கை |
|---|---|
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி — களுத்துறை | 5 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி — மாத்தறை | 6 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி — குருநாகல் | 7 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி — அநுராதபுரம் | 3 |

1985 திசெம்பர் 31 ஆம் நாளிலுள்ளவாறு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளைகளினால் திரட்டப்பட்ட வைப்புக்கள் கீழேயுள்ள அட்டவணை 2.8 தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.8

**பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் திரட்டப்பட்ட வைப்புக்கள்—1985, திசெம்பர் 13**

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர் | சேமிப்பு வைப்புக்கள் | | நிலையான வைப்புக்கள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை ரூபா | எண்ணிக்கை | தொகை ரூபா | எண்ணிக்கை | தொகை ரூபா |
| 1. மாத்தறை பி. கி. அ. வ. ... | 3,472 | 1,133,883 | 05 | 51,000 | 3,477 | 1,184,883 |
| 2. களுத்துறை பி. கி. அ. வ. ... | 2,845 | 727,650 | 15 | 180,500 | 2,860 | 908,150 |
| 3. குருநாகல் பி. கி. அ. வ. ... | 4,786 | 905,882 | 10 | 50,000 | 4,796 | 955,882 |
| 4. அநுராதபுரம் பி. கி. அ. வ. ... | 1,382 | 336,154 | 3 | 28,750 | 1,385 | 364,904 |
| மொத்தம் ... | 12,485 | 3,103,569 | 33 | 310,250 | 12,518 | 3,413,819 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

நான்கு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் 1985 திசெம்பர் 31 இல் 12,518 கணக்குகளையும் ரூ. 3,413,819 கொண்ட மொத்த வைப்புக்களையும் திரட்டியுள்ளன. இவ்வெண்ணிக்கையில் 12,485 அல்லது 99.7 சதவீதம் சேமிப்பு வைப்புக்களை உள்ளடக்கி ரூ. 3,103,569 கொண்ட தொகைக்கு வகை கூறியது. சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்களின் சராசரி அளவு கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| வங்கியின் பெயர் | சேமிப்பு வைப்புக்களின் சராசரி அளவு (ரூபா) | நிலையான வைப்புக்களின் சராசரி அளவு (ரூபா) |
|---|---|---|
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி – மாத்தறை | 326 | 10,200 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி – களுத்துறை | 255 | 12,033 |
| பிரதேச கிராமியஅபிவிருத்தி வங்கி – குருநாகல் | 189 | 5,000 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி – அநுராதபுரம் | 243 | 9,583 |
| அனைத்து வங்கிகளுக்குமான சராசரி | 248 | 9,401 |

சேமிப்பு வைப்புக்களில் பெருமளவானவை அப்பகுதியிலுள்ள மக்களின் சிறியளவு சேமிப்பு வடிவத்திலேயே திரட்டப்பட்டுள்ளமையை அட்டவணை 2.9 எடுத்துக் காட்டுகின்றது. பொதுமக்களிடமிருந்து கேள்வி வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்குப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளபோதும் அவை அவ்வாறு இன்னமும் செய்யவில்லை. சேமிப்பு வைப்புக் களின் சிறிய அளவிற்கு இதுவும் ஓரளவிற்குக் காரணமாக இருக்கலாம்.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் கடன் சொத்துப் பட்டியல் 1985 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கீழே அட்டவணை 2.9 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.9

**1985 திசெம்பர் 31 இல் வழங்கப்பட்ட/ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள்**

| நோக்கம் | மாத்தறை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | | குருநாகல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | | களுத்துறை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | | அநுராதபுர பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை ரூபா | எண்ணிக்கை | தொகை ரூபா | எண்ணிக்கை | தொகை ரூபா | எண்ணிக்கை | தொகை ரூபா |
| 1. வேளாண்மை | | | | | | | | |
| 1.1 பயிர்ச்செய்கை | 113 | 207,325 | 32 | 357,010 | 84 | 75,058 | 111 | 788,034 |
| 1.2 பண்ணைக் கருவிகள் ... | 07 | 19,500 | 4 | 25,475 | — | — | 17 | 486,500 |
| 1.3 ஏனையவை ... | 09 | 9,189 | — | — | 18 | 59,397 | — | — |
| 2. கால்நடை ... | 05 | 28,500 | 31 | 321,150 | 31 | 123,200 | 10 | 80,900 |
| 3. சிறு கைத்தொழில்... | 112 | 93,990 | 41 | 406,100 | 100 | 404,165 | 4 | 95,000 |
| 4. வர்த்தகமும் வியாபாரமும் ... | 171 | 222,530 | 15 | 116,000 | 89 | 334,932 | 12 | 116,500 |
| 5. ஏனையவை ... | 65 | 206,134 | — | — | 13 | 157,400 | 10 | 114,275 |
| மொத்தம் . | 482 | 787,168 | 123 | 1,225,735 | 335 | 1,154,152 | 164 | 1,681,209 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 1985, திசெம்பர் 31இல் உள்ளவாறு ரூ. 4,848,264 மொத்தத் தொகை கொண்ட 1,104 கடன்களை வழங்கியுள்ளன. வங்கியொன்றிற்கான கடன்களின் சராசரி அளவு கீழே தரப்பட்டுள்ளது.

| வங்கியின் பெயர் | | கடன்களின் சராசரி அளவு (ரூபா) |
|---|---|---|
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | – மாத்தறை | 1,633 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | – குருநாகல் | 9,965 |
| பிரதேச கிரரமிய அபிவிருத்தி வங்கி | – களுத்துறை | 3,445 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | – அநுராதபுரம் | 10,251 |
| அனைத்து வங்கிகளின் சராசரி | | 4,391 |

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட சிறிய அளவுக் கடன்கள் சிறிய தொகை மூலதனத்தை வேண்டி நின்ற சமூகத்தின் நலிவுற்ற பிரிவுகளை உற்பத்தியாற்றல் மிக்க தொழில் முயற்சிகளில் நிலை நிறுத்துவதற்காக வங்கிகளினால் கொடுகடன் உதவிகள் வழங்கப்பட்டமையை எடுத்துக் காட்டின. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட 1,104 கடன்களினதும் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| நோக்கம் | கடன்களின் எண்ணிக்கை | தொகை | வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் சராசரி |
|---|---|---|---|
| வேளாண்மை | 395 | 2,027,488 | 41.8 |
| கால்நடை | 77 | 553,750 | 11.4 |
| சிறு கைத்தொழில்கள் | 257 | 999,255 | 20.6 |
| வர்த்தகமும் வியாபாரமும் | 288 | 789,962 | 16.3 |
| ஏனையவை | 287 | 477,809 | 9.9 |
| மொத்தம் | 1,104 | 4,848,264 | 100.0 |

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமது குறிக்கோள்களைப் பேணும் பொருட்டுத் தமது தொழிற்பாட்டில் சில புதுவித் வங்கித்தொழில் முறைகளை மேற்கொண்டன. வைப்புக்களைத் திரட்டுவதற்கான இயக்கத்தின் ஒரு பகுதியாக பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் ஒவ்வொரு கிளைகளும் அவற்றின் சட்டரீதியான எல்லைக்குட்பட்ட கிராமங்களில் கூட்டங்களை ஒழுங்கு செய்தன. அக்கூட்டங்களில் கிளை முகாமையாளரும் கள மேற்பார்வையாளரும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் குறிக்கோள்களையும் கிராமியப் பொருளாதாரத்தில் அவற்றின் பங்கினையும் விளக்கினர். வைப்புக்கள் அக் கூட்டங்களிலேயே சேகரிக்கப்பட்டதுடன் வைப்பாளர்களுக்கு வங்கிப் பற்று வரவு ஏடுகளை அவர்களின் வீடுகளிலேயே பின்னர் வழங்குவதற்கும் வங்கி ஒழுங்குகளை மேற்கொண்டது. கடன்களுக்கான அனுமதிக்கும் பகிர்ந்தளிப்பிற்கும் இலகுபடுத்தப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. அதுமட்டுமன்றி சிறிய கடன்களைப் பொறுத்தவரை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் பிணைகளை வற்புறுத்தாமலேயே கடன்களை வழங்கின.

## கிராமிய வங்கித் தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி

இலங்கை மத்திய வங்கியின் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி 1985 ஆம் ஆண்டில் 30 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் முகாமை ஆளணியினர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், இளைஞர் அலுவல்கள், தொழில் வாய்ப்பு அமைச்சு போன்ற கிராமிய அபிவிருத்தியுடன் தொடர்புடைய சில அரச முகவர்களைக் கொண்ட 580 பங்கேற்பாளர்களினால் பின்பற்றப்பட்டது. கிராமிய வங்கித்தொழிலும் கிராமிய அபிவிருத்தியும், முதலீடுகளை மதிப்பிடல், முகாமை அபிவிருத்தி, புள்ளிவிபரவியல், வர்த்தக வங்கித் தொழில் மற்றும் பன்னாட்டு வங்கித்தொழில் ஆகிய துறைகளில் கல்லூரி பயிற்சிகளை வழங்கியது.

கல்லூரியினால் நடத்தப்பெற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வங்கித் தொழில் துறையின் தகைமையை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டதாகும். இந்நிகழ்ச்சித் திட்டங்கள் கிராமியத் துறையுடன் இணைந்த பொருளாதாரச் சிக்கல்களை விளக்கிக்கொள்ளும் உள்ளாற்றலைப் பங்குபற்றியோருக்கு அளிப்பதனையும் அத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கும் அவர்களின் முயற்சிகளுக்குத் துணை செய்வதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தன.

கல்லூரி அதன் நான்காவது ஆண்டு தொழிற்பாட்டினை 1985 செத்தெம்பரில் நிறைவு செய்தது. கல்லூரியின் நான்காவது ஆண்டு நிறைவு விழாச் சொற்பொழிவு ''வங்கிகளும் வேளாண்மைக் கொடுகடனும்—இந்தியாவின் அனுபவம்'' என்ற தலைப்பின் கீழ் இந்திய ஒதுக்கு வங்கியின் முன்னாள் ஆளுநரும் புத்தாக்க அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி, பன்னாட்டு நாணய நிதியம் ஆகியவற்றின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளருமான எம். நரசிம்மம் அவர்களினால் ஆற்றப்பட்டது.

## ஊழியர் சேம நிதியம்

மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு நிதியத்தின் உதவுதொகைகளையும் மேலதிகக் கட்டணங்களையும், பண முதலீடுகளிலிருந்தான வருமானத்தையும் பெறுவதற்கும் ஊழியர் சேம நிதியத்தின் பதிவு செய்யப்பட்ட தொழில் வழங்குநர் தனிப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்கான சரியான கணக்குகளைப் பேணுவதற்கும், ஊழியர் சேமநிதிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைய உறுப்பினர்களின் நன்மைகளை மீளச் செலுத்துவதற்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் நிருவாகம், நடைமுறைப் படுத்தல் என்பவற்றை மேற்கொள்ளும் தொழிற்றிணைக்களத்தின் ஊழியர் சேம நிதியப் பிரிவின் நெருங்கிய கூட்டுத் தொழிற்பாட்டுடன் வங்கியின் ஊழியர் சேமநிதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. 1985 இல் இதன் தொழிற்பாடுகள் பற்றிய சுருக்கமான குறிப்புக் கீழே தரப்பட்டுள்ளது.

## உதவு தொகைகள்

1985ஆம் ஆண்டில் இந்நிதியத்தினுல் பெறப்பட்ட உதவுதொகைகள் 1984 இன் ரூ. 15,834 இலட்சத்திற்கு எதிராக ரூ. 19,206 இலட்சமாக விளங்கியது. இது முன்னைய ஆண்டில் பெறப்பட்ட உதவுதொகைகளின் மட்டத்தை விட ரூ. 3,372 இலட்சம் அல்லது 21.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது.

## உறுப்பினர்களின் நிலுவைகள்

மீளாய்விற்குரிய ஆண்டிற்கான வட்டி ஒதுக்கப்படுமுன்னர் உறுப்பினரின் நிலுவைகள் 1985 திசெம்பர் 31 இல் ரூ. 130,867 இலட்சமாக விளங்கின. இது 1984 இன் மட்டத்தினைவிட ரூ. 26,939 இலட்சம் அல்லது 25.9 சதவீதம் கூடுதலானதாகும்.

## முதலீடுகள்

அரசின் பிணைகள், திறைசேரி உண்டியல்கள், நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையினுலும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியினுலும் வழங்கப்பட்ட தொகுதிக் கடன் முறிகள் என்பவற்றில் நிதியம் முதலீடு செய்த தொகை 1984 இன் ரூ. 58,956 இலட்சத்திற்கெதிராக ஆய்வுக்குரிய ஆண்டில் ரூ. 54,019 இலட்சம் ஆக விளங்கியது. இது 1984 இன் மட்டத்தினைவிட ரூ. 4,937 இலட்சம் குறைவானதாகும். ஆய்வுக்குரிய ஆண்டில் செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் முந்திய முதலீடுகளினதும் திறைசேரி உண்டியல்களினதும் முதிர்ச்சியினுல் பெறப்பட்ட தொகையான ரூ. 24,845 இலட்சத்தினையும் உள்ளடக்கும். அரசின் பிணைகளில் மட்டும்முதலிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 44,178 இலட்சமாக அமைந்து 1985 இல் இலங்கை அரசினுல் வழங்கப்பட்ட மொத்தப் பிணைகளில் 41.9 சதவீதத்தினைப் பிரதிபலித்தது. இவ்வாண்டில் வேறுபட்ட கால இடைவெளிகளில் குறுகியகால திறைசேரி உண்டியல்களில் முதலிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 8,160 இலட்சமாக விளங்கியது. ஆய்வுக்குரிய ஆண்டின் முடிவில் நிதியம் திறைசேரி உண்டியல்கள் எதனையும் வைத்திருக்கவில்லை. ஏனெனில் அவை முன்பே கழிவு செய்யப்பட்டு விட்டன, 1985 திசெம்பர் 31 இல் நிதியத்தினுல் வைத்திருக்கப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ. 140,520 இலட்சமாக விளங்கின. இது 1984 இன் மட்டத்தினைவிட ரூ. 29,173 இலட்சம் அதிகமானதாகும்.

## முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம்

நிதியத்தின் முதலீடுகளிலிருந்து கிடைத்த வருமானம் 1984 இன் ரூ. 11,939 இலட்சத்திற்கெதிராக 1985 இல் ரூ. 15,524 இலட்சமாக அமைந்து ரூ. 3,585 இலட்சம் அல்லது 30.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பு முக்கியமாக நிதியத்தினுல் பெறப்பட்ட உதவுதொகைகளின் அதிகரித்த அளவிலான முதலீடு, கடந்தகால முதலீடுகளிலிருந்து ஆய்வுக்குரிய ஆண்டில் பெறப்பட்ட வருமானத்தினை மீள முதலிட்டமை என்பவற்றுல் ஏற்பட்டதாகும்.

**மீளளிப்புகள்**

ஊழியர் சேம நிதிய நன்மைகளின் மீளளிப்பு வடிவில் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 1984 இன் ரூ. 5,517 இலட்சத்திற்கெதிராக 1985 இல் ரூ. 5,236 இலட்சமாக விளங்கியது. இது ரூ. 281 இலட்சம் அல்லது 5.1 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. ஆய்வுக்குரிய ஆண்டில் திணைக்களத்தில் 51,978 கோரல்கள் நன்மைகளின் மீளளிப்பிற்காகப் பெறப்பட்டன. இது இந்திய வம்சாவழியினரின் நாடு திரும்புவோரிலிருந்து 3,857 ஐயும் மருத்துவ அடிப் படையிலான 20,981 ஐயும் உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டில் செலுத்தப் பட்ட கோரல்களின் மொத்த எண்ணிக்கை 46,123 ஆகும். மருத்துவ அடிப் படையிலான கோரல்களின் எண்ணிக்கைளில் அதேபோன்று கொடுப்பனவுகளிலும் கணிசமானளவு குறைப்புக் காணப்பட்டது.

**உறுப்பினர்களின் நிலுவைகள் மீதான வட்டி**

ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் உள்ள உறுப்பினர்களின் நிலுவைகள்மீது நிதியத்தின் முதலீடு செய்யப்பட்ட பணங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தி லிருந்து வட்டி செலுத்தும்படி ஊழியர் சேம நிதியம் வேண்டப்படுகின்றது. 1984 இறுதியில் உள்ளவாறான உறுப்பினர்களின் நிலுவைகள் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் 1985 இல் 12.5 வீதத்திற்கு உயர்த்தப்பட்டது. ஆண்டு முடிவில் உறுப்பினரின் வரவில் நிற்கும் நிலுவைகள் மீது வட்டி செலுத்தப்பட்டு அதன் பின்னர் மொத்தத் தொகையில் வட்டி ஒன்று சேரும். இது தவிர ஆண்டின் முடிவில் உறுப்பினரின் வரவில் நிற்கும் நிலுவையின்மீது உறுப்பினரின் வரவிற்கு நிதியத்தினுல் எந்த நாளில் அப்பகுதி நிலுவை (இது நடைமுறை ஆண்டின் உதவு தொகைகளைக் குறிக்கும்) பெறப்பட்டது என்பதனைப் பொருட்படுத்தாது ஆண்டு முழுவதற்கும் வட்டி செலுத்தப்படும். உதாரணமாகத் திசெம்பர் மாதத் தில் பெறப்பட்ட உதவு தொகை அவ்வாண்டின் சனவரி மாதத்தில் பெறப்பட்ட உதவு தொகையைப் போன்று முழு ஆண்டுக்குமான வட்டியைப் பெறும். எனவே வட்டி வீதத்தின் செயற்தாக்கமானது ஓரளவில் உயர்வாக அமையும்.

நிதியத்தின் தொழிற்பாட்டைப் பற்றிய ஒப்பிடத்தக்க கூற்று மீதான தற்போது கிடைக்கக் கூடியதாகவுள்ள தரவுகள் கீழேயுள்ள அட்டவணை 2.10இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.10

**ஊழியர் சேமநிதியப் புள்ளி விபரங்கள் 1984–1985**

| விடயம் | | 1984 | 1985 |
|---|---|---|---|
| 1. பெறப்பட்ட உதவு தொகைகள் (ரூ.ப.இ.) | ... | 1,583.4 (அ) | 1,920.7 (அ) |
| 2. முதலீடுகள் (ரூ.ப.இ.) | ... | 5,895.6 (ஆ) | 5,401.9 (ஆ) |
| 3. முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் (ரூ.ப.இ.) | ... | 1,193.9 | 1,552.4 |
| 4. மீளளிப்புக் கொடுப்பனவுகள் (ரூ.ப.இ.) | ... | 551.7 | 523.6 |
| 5. மீளளிப்புக்களின் எண்ணிக்கை | ... | 65,198 | 46,123 |
| 6. வட்டி வீதம் (சதவீதம்) | ... | 12.5 | 12.5 |
| 7. உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி ஒதுக்கு (ரூ.ப.இ.) | ... | 1,299.1 | 1,635.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவு தொகைகள் நீங்கலாக.
(ஆ) அரச பிணைகளில் மீள் முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சித் தொகைகளையும் குறுங்கால திறைசேரி உண்டி யல்களில் முதலீடு செய்யப்பட்ட பணத்தையும் உள்ளடக்கும்.

## செலாவணிக் கட்டுப்பாடு

செலாவணிக் கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்துவதில் அரசின் முகவராக வங்கி தொடர்ந்தும் தொழிற்பட்டது. மீளாய்வின் கீழான ஆண்டில் நடைமுறைக்கு வந்த செலாவணிக் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் முக்கிய மாற்றங்கள் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

### 1. இறக்குமதிகள்

(i) எந்த ஒரு மூலங்களிலிருந்தும் மிளகு, ஏலக்காய், மரமுந்திரிகை என்பன இறக்குமதி செய்வதற்குக் கொடுகடன் பத்திரங்கள் ஆரம்பிப்பதற்கு முன்பு வர்த்தகப் பணிப்பாளரிடமிருந்து ஒப்புதல் பெறவேண்டும் என அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 1985.01.29 இன் எண் ஈ.சி/ 06/85/(பீ) 1984.04.16 இன் எண் ஈ.சி./20/85 (பீ) ).

(ii) 1984 இல் கோப்பி இறக்குமதி மீது விதிக்கப்பட்ட தடை 1985 ஏப்பிறல் மாதத்தில் நீக்கப்பட்டது. எனினும் இவ்விறக்குமதி வர்த்தகப் பணிப்பாளரினுல் விதிக்கப்பட்ட சில நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 85.04.17 இன் எண் ஈ.சி/ 21/85 (எச்) ).

(iii) பத்திரிகைத்தாளும் பழைய பத்திரிகைகளும் இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து உரிமத்தைப் பெறல் அவசியமென வெளிப்படுத்தப்பட்டது. (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 85.07.10 இன் எண் ஈ.சி./31/85 (பீ), 85.10.11 இன் ஈசி/51/85 ).

### 2. ஏற்றுமதிகள்

(i) தகுதியுடைய காரணங்களைக் கொடுக்கும் வெளிநாட்டு வாங்குநர்கள்—முகவர்கள் ஆகியவர்களிடமிருந்து கோரிக்கைகள் கேட்கப்பட்டிருந்தால் ஏற்றுமதியாளர்களின் வேண்டுகோளுக்கிணங்கப் பிந்திய கொடுப்பனவுகளிலிருந்து ஏற்றுக்கொள்வதற்கெதிராக ஆவணங்களின் நியதிகளுக்கு 180 நாட்களுக்குப் பிந்தாமல் கொடுப்பனவு நியதிகளுக்கு மாற்றுவதற்குச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தொடர்பின்றி அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதி அளிக்கலாம். (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 85.07.16 இன் எண் ஈ.சி/ 35/85 (எச்) ).

(ii) ஏற்றுமதியாளரிடமிருந்து செல்லுபடியான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் குறைந்தது 180 நாட்கள் வரை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கெதிரான ஆவணங்களின் கால எல்லையைச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தொடர்பின்றி அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கலாம்.

(iii) ஏற்றுமதிச் சரக்குகளின் பட்டியல்கள் ஒருவரின் சார்பில் அல்லது கொடுகடன் திறக்கும் வெளிநாட்டு வங்கியின் கட்டளைப்படி அல்லது கொடுகடன் பத்திரங்களில் குறிப்பிட்ட எந்தவொரு வங்கியினுலும் எனக் கொடுகடன் பத்திரங்களில் நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருக்கு மிடத்துச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினைத் தொடர்பு கொள்ளாமல் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் ஆவணங்களைக் கைமாற்றிக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 85.08.06 இன் எண் ஈ.சி./40/85 (எச்).

3. இலாபங்களினதும் பங்கிலாபங்களினதும் பண அனுப்புதல்

வெளிநாட்டு வங்கிக் கிளைகள் உட்பட வெளிநாட்டுக் கூட்டு நிலையங்களின் கிளைகள் இலங்கையில் தொழிற்படும் பங்குடைமையாளர்களின் வதிவற்ற பங்காளர்களும் ரூபாய் கூட்டு நிலையங்களின் வதிவற்றேர் பங்குரிமையாளர்களினுல் பெறப்பட்ட இலாபங்களினதும் பங்கிலாபங்களினதும் மேலதிகப் பண அனுப்பல்களைத் தவிர்க்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு வருமானவரி தீர்ப்பனவு சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கும்படி கட்டாயப்படுத்த வேண்டுமென்றுகேட்டுக் கொள்ளப்படுகிறூர்கள். (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 85.05.16 இன் எண் ஈ.சி./25/85 (சி அன்ட் எவ்.)

4. கொடுகடன் நிரம்பலர்களினுலும் அரச, தனியார்துறைகளினுலும் பெறப்பட்ட ஏனைய வெளிநாட்டுக் கடன்பாடு

வெளிநாட்டுக் கடன்பாடுகளிலிருந்துவரும் (வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் உட்பட) கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் முயற்சிகள் தவிர்ந்த வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான மீள் கொடுப்பனவு சார்ந்த எல்லா விண்ணப்பங்களும் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டுமென்று அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். திணைக்களத்தினுல் வழங்கப்பட்ட இணைக்கோப்பு படிவங்களில் அனைத்தையும் உள்ளடக்கிய தரவுகளை கொடுக்கும்படி விண்ணப்பதாரர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இவ்விதமான கடன்பாடுகளைக் கண்டிப்பாகக் கட்டுப்படுத்துவதே இதன் குறிக்கோளாகும். (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 1985.03.22 எண் ஈ.சி/ 15/85 (சி அன்ட் எவ்.)

5. தடுப்புக் கணக்கு

கணக்கு வைத்திருப்போர் தனது வதிவற்றேர் தடுப்புக் கணக்கிலிருந்து ரூ. 200,000 வரை மட்டும் பணம் அனுப்புவதற்கு அனுமதிக்கப்படுவர். இவ்வாறன கட்டுப்பாடு இருந்தாலும் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வெளிநாட்டு குடி உரிமையைப் பெற்றேர் நீங்கலான வர்த்தக வங்கிகளில் பேணப்படும் வதிவற்றேர் தடுப்புக் கணக்கில் இருக்கும் நிதியங்களையும் பங்கு விற்பனைகளிலிருந்து பெறப்பட்ட நிதியங்கள் அனைத்தையும் முழுமையாக அனுப்புவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கலாமென்று அறிவிக்கப்பட்டது. தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 1985.04.02 இன் எண் ஈ.சி./18/85 (சி அன்ட் எவ்.)

**6. உள்நாட்டு முகவர்களினூல் வெளிநாட்டுத் துறைமுகங்களிருந்து பெறப்படும் கப்பற் சரக்குக் கட்டணங்கள் பயணிகள் கட்டணச் சேகரிப்புகளை அனுப்புதல்.**

உள்ளூர் கப்பல் சொந்தக்காரர்களும், கப்பல் ஒப்பந்தக்காரர்களும் அவர்களினூல் வெளிநாட்டில் வைத்திருக்கும் சரக்குக் கட்டணம், பயணிக் கட்டணம் ஆகிய சேகரிப்புக்களை வெளிநாட்டுத் துறைமுகங்களிலுள்ள அவர்களின் முகவர்களினூல் அவர்களின் கப்பல்களுக்கு வழங்கப்பட்ட பணிகளுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்தியபின் வர்த்தக வங்கிகளுடன் வைத்திருக்கும் வெளிநாட்டுக் கப்பற் கணக்குகளில் வரவு வைப்பதற்காக இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளனர். செலாவணிக் கட்டுப்பாட்டு ஒப்புதல்களின்றி அத்தகைய நிதியை வெளிநாட்டிலுள்ள ஒரு முகவரிடமிருந்து இன்னொரு முகவருக்கு எந்தவொரு நோக்கத்திற்காக மாற்றுவதற்கு எதிராகவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் 85.06.05 இன் ஈ.சி./எஸ். ஏஏ/01/85)

**பொதுப்படுகடன்**

நாணய விதிச் சட்டத்தின் 113 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய மத்திய வங்கி தொடர்ந்தும் அரசின் சார்பில் பொதுப்படுகடனை முகாமைப்படுத்தியது. 1985 இல் பொதுப்படுகடன் திணைக்களத்தினூல் கையாளப்பட்ட முக்கிய தொழிற்பாடுகள் பிணைகள்/கடன்களைமிதக்கவிடல், திறைசேரி உண்டியல்களையும் வரி ஒதுக்குச் சான்றிதழ்களையும் வழங்குதல், வெளிநாட்டுக் கடன் பெறுகைகளைப் பதிவு செய்தல் என்பனவாகும்.

1985 ஆம் ஆண்டில் மொத்த வெளிநின்ற, தேறிய பொதுப்படுகடன் தொகைகள் முறையே ரூ. 1,308,699 இலட்சம் ரூ. 1,237,196 இலட்சமாக விளங்கின. 1985 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் மிதக்கவிடப்பட்ட ரூபாக் கடனின் தொகை ரூ. 105,503 இலட்சமாக விளங்கி ஆண்டின் பிற்பகுதியில் வெளிநின்ற தொகை ரூ. 365,702 இலட்சமாக விளங்கியது. 1985 ஆண்டுக் காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் எல்லை ரூ. 20,000 இலட்சத்தினூல் ரூ. 230,000 இலட்சத்திலிருந்து ரூ. 250,000 இலட்சத்திற்கு அதிகரித்தது. வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் தொகை ஆண்டின் இறுதியில் ரூ. 222,800 இலட்சமாக விளங்கியது. 1985 ஆம் ஆண்டில் பொதுப்படுகடனுக்கான மொத்த வட்டிக் கொடுப்பனவுகளின் தொகை ரூ. 83,347 இலட்சமாகும். இது ரூ. 172 இலட்சம் தொகையான மிதக்கும் கடன் செலவுகளையும் முகாமைக் கட்டணங்களையும் உள்ளடக்கும். ஆண்டுக் காலத்தில் மொத்த நடுத்தர நீண்டகால வெளிநாட்டுக் கடன்பாடுகளின் மீள் பெறுகைகளின் தொகை ரூ. 90,324 இலட்சமாக விளங்கியது. செயற்றிட்ட, பண்ட ஏனைய வகைகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் மீதான மொத்த மீள் கொடுப்பனவுகள் ரூ. 17,889 இலட்சமாக விளங்கியது. 1985 ஆம் ஆண்டு முடிவில் வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் பொதுப்படுகடனின் தொகை ரூ. 676,733 இலட்சமாகவிருந்தது.

இத் திணைக்களம் தொடர்ந்தும் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை, அரச ஈட்டு முதலீட்டு வங்கி என்பவற்றின் சார்பாக தொகுதிக் கடன்களை மிதக்கவிட்டு அவற்றின் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இத் திணைக்களம் நாணய விதிச் சட்டத்தின் 91 (1) (ஆ) பிரிவின் கீழ் பொருளாதாரத்தின் திரவத் தன்மை மிகையைக் குறைப்பதன் பொருட்டு மத்திய வங்கிப் பிணைகளை 1985இல் தொடர்ந்தும் வழங்கியது.

இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் தீர்வுகளைக் கணனிமயப்படுத்த, வேண்டுமென்ற பொதுநலவாய செயலகத்தின் தொழில்நுட்ப உதவிக் குழுவின் எடுத்துரைப்பினைத் தொடர்ந்து இத் திணைக்களம் வெளிநாட்டுப் படுகடனுக்கான விடயங்கள் அடங்கிய ஒரு பட்டியலைத் தயாரிப்பதில் ஈடுபட்டது. இவ்வாண்டுக் காலத்தில் வெளிநாட்டுப் பொதுப்படுகடன் தொடர்பான தரவுகளை நிதி, திட்ட மிடல் அமைச்சின் வெளிநாட்டுப் படுகடன் கண்காணிப்புப் பிரிவுக்கு வெளி நாட்டுப் படுகடன் தரவுகளைக் கணனிமயப்படுத்தும் வசதிக்காக அனுப்பிவைத்தது. இப்புதிய திட்டம் 1986 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தொழிற்பாட்டிற்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பிரதேச அலுவலகம் — மாத்தறை

1985 இல் மாத்தறைப் பிரதேச அலுவலகம் அதன் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தியது. இதன் விளைவாகக் கிராமியப் பொருளாதாரத் துறைகளின் அபிவிருத்திக்கென வரையப்பட்ட பல்வேறு கிராமியக் கொடுகடன் திட்டங்களின் கீழ் பெருமளவிலான தொகையினரை உள்ளடக்கக்கூடியதாகவிருந்தது. வேளாண் மையாளர்கள், குடிசைக் கைத்தொழிலாளர்கள், கைவினைஞர்கள் என்போர் தமது முதலீடுகளை விரிவுபடுத்துவதன் மூலம் தங்களது வருமானத்தை முன்னேற்று வதற்கான கொடுகடனுக்குப் பெருமளவு கேள்வி இருந்தது. அதேவேளை பாட சாலையிலிருந்து விலகுவோரில் அதிகரித்த தொகையினர் சுயதொழில் நடவடிக்கை களில் தம்மை ஈடுபடுத்தும் பொருட்டு வங்கிக் கொடுகடன் திட்டத்தில் சேர விரும்பினர். முந்திய ஆண்டுகளைப் போன்று கிராமியத் துறைகளில் வெளியீடு, வருமானம், தொழில் வாய்ப்பு என்பனவற்றின் வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காக மத்திய வங்கியினால் அறிமுகம் செய்யப்பட்ட வழிமுறைகளில் ஒன்றாகிய மீள் நிதியிடல் கொடுகடன் திட்டங்களின் தொழிற்பாடானது பிரதேச அலுவலக விடயங்களில் மிக முக்கிய இடத்தைப் பெற்றது. 1985 முடிவில் இவ்வலுவலகத் தினால் நேரடியாகப் பேரம் பேசப்பட்டதன் மூலம் வங்கித்தொழில் அமைப்பி லிருந்து உதவி பெற்றோரின் மொத்தத் தொகை 2,728 ஆக அமைந்து பல்வேறு வருமானம் தரும் செயற்றிட்டங்களுக்காகப் பெறப்பட்ட கடன்களின் மொத்த தொகை ரூ. 141 இலட்சமாக விளங்கியது.

பிரதேச அலுவலகம் அதன் ஐந்தாவது தொழிற்பாட்டு ஆண்டைப் பூர்த்தி செய்ததும் அதன் நடவடிக்கைகளின் முக்கிய ஒரு விடயமாக அமைந்தது யாதெனில் அது உள்ளடக்கிய இடப்பரப்பு அதிகரிக்கப்பட்டதாகும். பேரளவி லான அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன இப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டமையினால் உள்ளமைப்பு வசதிகள் அபிவிருத்தியடைந்தமையின் காரணமாக அயலிலுள்ள மாவட்டங்களிலுள்ள பல்வேறு வதிவிடங்களிலிருந்து கிராமியக் கொடுகடன் வசதிக்கான வேண்டு தல்கள் 1983 இலிருந்து விரைவாக அதிகரித்தன. இதன் விளைவாக, பிரதேச அலுவலகம் 1985 இல் அதன் செல்வாக்கினைக் காலி, அம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களுக்கும் பரப்பக் கூடியதாக இருந்தது. இப்பிரதேசங் களில் பல்வேறு தெரிந்தெடுக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்காக வங்கிக் கடன் களை ஒழுங்குபடுத்துவதற்கும் வங்கியாளருக்கும் வாடிக்கையாளருக்குமிடையிலான தொடர்பினை ஊக்குவிப்பதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. முந்திய ஆண்டு களைப் போன்று பயிற்சியும், அது சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப் பட்டன. 1985 இல் 40 கூட்டத் தொடர்களில் ஏறக்குறைய 900 பேர் பங்கு பற்றினர். இக்கூட்டத்தொடர்கள் சில சமயங்களில் குறிப்பிட்ட நபர்களினால் முன் வைக்கப்பட்ட செயற்றிட்டங்கள் நடைமுறைக்கு ஒவ்வாதனவாக அல்லது நோக்கமற்றனவாக இருந்தமையினை வெளிப்படுத்தின. நன்மை பெறுவோர்,

முகவர்கள் என்பவர்கள் தமக்கிடையேயான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு தருணமாகவும் உதவியது. செயல்முறையில் ஈடுபட்டுள்ள முக்கிய முகவர்கள் அனைவரும் கூடும் ஒரு இடமாகவும் இக்கூட்டத் தொடர் அமைகிறது. பிரதேச அலுவலகம் கைத்தொழில் அபிவிருத்திச் சபை, வேளாண்மைத் திணைக்களம், வேளாண்மை அபிவிருத்தி மேலாண்மைச் சபை, பயிர்க் காப்புறுதிச் சபை, விலங்கு வளர்ப்பு நலத்துறைத் திணைக்களம், தேயிலைச் சிற்றுடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபை, மற்றும் இது போன்ற நிறுவனங்களிடமிருந்து உதவி பெற்றது. இதற்குப் பதிலாகப் பிரதேச அலுவலகம் இம் முகவர் நிலையங்களினூல் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்குத் தனது உதவியினை வழங்கியது. பிரதேச முகாமையாளரும் அவரது அலுவலர்களும் 1985 இல் நடாத்திய இத்தகைய ஏறக்குறைய 50 ஆய்வரங்குகள் தொழிற்கூடங்கள் என்பவற்றில் பங்குபற்றினர். பிரதேச மட்டத்திலும் மத்திய நிலையத்திலும் உள்ள அபிவிருத்திக் கூட்டங்கள் பெரும்பாலானவற்றில் அலுவலக உறுப்பினர்கள் பணிபுரிந்தனர்.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினை நிறுவியமையும், மாத்தறையிலுள்ள தேசிய சேமிப்பு வங்கியினூல் கிராமிய கொடுகடன் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டமையும் இரு முக்கிய அபிவிருத்திகளாகும். பிரதேச அலுவலகம் அலுவலர்களைப் பயிற்றுவித்தல், பொருளியல் அளவீடுகள் தொடர்பூட்டல் வேலை என்பவற்றுக்கு உதவி வழங்கியது. தற்சமயம் இரு அரச வங்கிகளினதும், இந்தியன் ஓவசீஸ் வங்கியினதும் கிளைகளுடன் தொழிற்படும் கொடுகடன் திட்டங்கள் மாத்தறைப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தப்படும். தேசிய சேமிப்பு வங்கி கொடுகடன் செயற்றிட்டம் பல்வேறு தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் மத்திய வங்கி மீள் நிதியிடல் திட்டங்களிற்குப் புறம்பாகவும் தொழிற்படும்.

**மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகள்**

1985 இறுதியில் உள்ளவாறுன மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகளின் புள்ளி விபரத் தொகுப்பினை கீழ் அட்டவணை 2.11 தருகின்றது.

அட்டவணை 2.11

**மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகள் பிரதேச அலுவலகம்—மாத்தறை**
**(புள்ளிவிபரவியல் தொகுப்பு — 1985 இறுதியில் உள்ளவாறு ஒன்று சேர்ந்த நிலைமை)**

| திட்டங்கள் | நன்மையடைவோர் எண்ணிக்கை | கடன் தொகை (ரூபா) |
|---|---|---|
| 1. சுயதொழில் வாய்ப்புக்கான மீள் நிதியிடல் கொடுகடன் திட்டம் ... | 596 | 5,433,500 |
| 2. கிராம எற்பு மீள் நிதியிடல் கொடுகடன் திட்டம் ... | 112 | 566,685 |
| 3. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் "மாதிரி யாயா நெற்பயிர்ச் செய்கைக்கான கடன்கள்" ... | 1,243 | 3,500,783 |
| 4. வரண்ட நில வேளாண்மைக்கான கடன்கள் ... | 242 | 968,000 |
| 5. தேயிலை வளமாக்கி மீள் நிதியிடல் கடன் திட்டம் ... | 196 | 1,232,277 |
| 6. தெங்கு வளமாக்கி மீள் நிதியிடல் கடன் திட்டம் ... | 339 | 2,426.617 |
| மொத்தம் ... | 2,728 | 14,127,862 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பிராந்திய அலுவலகத்தின் தாக்கமான பங்களிப்பின் மூலமாகப் பல்வேறு மீள் நிதியிடல் கொடுகடன் திட்டங்களின் கீழ் வங்கிகளினுல் ரூ. 14,127,862 கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதனையும் 2,728 பேர் நேரடியாக நன்மையடைந்திருப்பதனையும் காணக்கூடியதாகவுள்ளது. பிரதேச அலுவலகத்திஞல் வழங்கப்பட்ட வழிகாட்டலின் விளைவாக வங்கிகளது சொந்தக் கடன் வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து பெருந்தொகையாஞேர் நேரடியாக உதவியைப் பெற்றனர்.

**சுயதொழில் வாய்ப்பும் கிராம ஏற்புத் திட்டங்களும்**

மாத்தறை மிக உயர்ந்த வீதத்திலான கல்விகற்ற இளைஞர்களின், வேலையின்மை சுமையுடனுன பிரச்சினையைக் கொண்டுள்ளவேளையில் நிலப்பரப்பின் பகிர்ந்தளிப்புத்தன்மையும் வர்த்தக ரீதியான வேளாண்மை நடவடிக்கைகளுக்குச் சாதகமாக அமையவில்லை. இதன் விளைவாகக் குடிசைக் கைத்தொழில்கள், கால் நடைப் பண்ணை, பணித்துறைகள் என்பவற்றில் சுயதொழில் வாய்ப்பு மூலம் வருமானத்தை உருவாக்குதல் உயர்ந்த முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது. சுயதொழில் வாய்ப்புக் கொடுகடன் திட்டமானது வங்கித்தொழில் அமைப்பிலிருந்து ''மேற்பார்வை செய்யப்பட்ட கொடுகடனை'' வழங்குவதன் மூலம் முக்கியமாக இளைஞர் மத்தியில் வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு முயற்சித்தது. வங்கிகள் சலுகை நியதிகளின் கீழ் ஒப்புதலளிக்கும் கடன்களுக்கான தனிப்பட்ட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதனைப் பிராந்திய அலுவலகம் அடையாளங் கண்டு மேற்பார்வை செய்தது. 1985 முடிவில் 690 சுயதொழில் செயற்றிட்டங்களும் 708 கடன் பெற்றவர்களும் காணப்பட்டனர். இதற்கு வங்கிகள் ரூ. 60 இலட்சம் கடன் வசதிகளை வழங்கியிருந்தன.

கிராம ஏற்புத் திட்டமானது கிராமியப் பொருளாதாரத்தில் பெருமளவு விளைவுத் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய கொடுகடன் செயற்றிட்டங்களின் ''தொகுதிகளை'' ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மாத்தறைக் கிளை இத்திட்டத்தில் பங்குபற்றி (மிகவும் ஆர்வத்துடன்) பல்வேறு கிராமத் தொகுதிகளில் 83 தனித்தனிச் செயற்றிட்டங்களுக்கு வங்கித்தொழில் உதவியினை வழங்கியது. அட்டவணை 2.12 வங்கிகளினுல் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் செயற்றிட்டங்களின் துறைவகைப்படியான பகுப்பின் புள்ளிவிபரத் தொகுப்பினைத் தருகின்றது.

அட்டவணை 2.12

**சுய தொழில் வாய்ப்பு, கிராம ஏற்புத்திட்டங்களின் கீழ் நிதியிடப்பட்ட கொடுகடன் செயற்றிட்டங்களின் பகுப்பாய்வு—மாத்தறை (1985 இறுதியிலுள்ளவாறு)**

| துறை | கொடுகடன் செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | கடன் தொகை (ரூபா) |
|---|---|---|
| வேளாண்மை ... | 203 | 1,241,135 |
| கைத்தொழில் ... | 315 | 1,595,395 |
| பணிகள், பண்ணை வலு இன்னேரன்னவையும் ... | 172 | 2,831,025 |
| மொத்தம் ... | 690 | 5,667,555 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 2.12 இல் காட்டப்பட்டவாறான பொதுவான நிலையானது இருசில்லு உழு பொறித்தொகுதிக்கான கடன்கள், பண்ணைக்கருவிக் கடன்கள் என்பவற்றை முக்கியமாகக் கொண்ட பணித்துறை நிதியிடலை நோக்கி மாற்றமடைந்தமையினைக் காட்டுகின்றது. பெருந்தொகையான செயற்றிட்டங்களுக்கு வகை கூறிய கைத்தொழில் துறையில் உணவு, புடைவைகள், செங்கற்கள், ஓடுகள் ஆகிய கைத்தொழில்கள் முதன்மை பெற்றிருந்தன. வேளாண்மைத் துறையில் கால்நடைப் பண்ணைச் செயற்றிட்டங்கள் முக்கியமாகக் கோழிப் பண்ணைக் கூறுகள் முக்கிய இடம் பெற்றன. சுயதொழில் வாய்ப்பு கிராமியகையேற்புச் செயற்றிட்டம் என்பவற்றுக்கான நிதியிடலின் விபரமான பகுப்பு அட்டவணைகள் 2.13, 2.14, என்பவற்றில் தரப்பட்டுள்ளன. அட்டவணை 2.13 இல் உள்ள எண் தொகைகள் 1985 இறுதியில் பிராந்திய அலுவலகத்தினால் அடையாளம் காணப்பட்டு வழிமொழியப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கையினைக் காட்டுவது கவனிக்கத்தக்கது. இது கைவிடப்பட்ட செயற்றிட்டங்களைக் கணக்கிலெடுக்கும் பொருட்டுக் காலத்திற்குக் காலம் சீராக்கம் செய்யப்பட்ட ஒன்று திரட்டிய நிலையாகும். பல்வேறு தடைகள் காரணமாகப் பெருந்தொகையான செயற்றிட்ட எடுத்துரைப்புக்கள் காலம் தாழ்த்தப்பட்டு வங்கி நிதி கிடைக்கச் செய்யமுன்பே கைவிடப்பட்டன. சில சமயங்களில் விண்ணப்பதாரிகளுக்கு மத்திய வங்கியின் பிரதேச அலுவலகத்தினால் அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்களுக்கான கடன்களுக்கு ஒப்புதலளிப்பதற்குக் கடமைப்படாத, வங்கிகளினால் இடப்படும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. வங்கி அதிகாரிகளுக்குக் கடன் வழங்கும் நடைமுறைகளைச் சிறப்பான முறையில் முன்னேற்றுவதற்கும் கிராமியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கான சிறுதுறைக் கடன் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தினை அபிவிருத்தி செய்வதற்கும் பெருமளவு வாய்ப்புண்டு.

## நெற் கடன்கள்

மாத்தறை மாவட்டத்தில் நெற் பயிரிடுகையின் கீழ் 45,000 ஏக்கர்கள் காணப்படுவதுடன், இதில் முக்கிய பங்கு மழை நீரை நம்பியுள்ளது. எனவே நெற்பயிர்ச் செய்கையில் கணிசமான அளவு நிலையற்ற தன்மை காணப்படுவதுடன் இதன் விளைவாக நெற்றுறைக்குக் கடன் வழங்குவதில் உள்ள ஆபத்தும் அதிகமாக உள்ளது. இவ் இயற்கையான பின்னணிக்கு மாறாகவும் கடந்த காலத்தில் ஏற்பட்ட உயர்ந்த வீதமான கடன் செலுத்தத் தவறியமைகளின் அனுபவத்தின் மத்தியிலும் பிரதேச அலுவலகத்தினால் நெற்றுறையில் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தினை மிகவும் நுட்பமாக மேற்பார்வை செய்யப்பட்ட கொடுகடன் வசதியான ''மாதிரி யாயா நெற்பயிரிடல் கடன் திட்டத்தினை'' அறிமுகப்படுத்துவதன் மூலம் புதுப்பிக்கும் புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது.இவ்வொழுங்கின் கீழ் வேளாண்மையாளர்கள் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட, வழிகாட்டப்பட்ட முறையில் பயிர்க் கடன்களைப் பெற்றதுடன் இப்பருவகாலத்தில் பல ஊக்குவிப்புப் பணிகளும் வேளாண்மையாளரின் நன்மை கருதிச் செய்யப்பட்டன. 1981–82 பெரும்போக காலத்தில் தங்காலையில் சிறு எண்ணிக்கையான வேளாண்மையாளருடன் ஆரம்பித்த இவ்வியக்கம் மிக விரைவாக மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனறாகலை மாவட்டங்களுக்கும் பரவியது. தற்சமயம் 1,200 ஏக்கர் நெற்காணிகள் உண்டு. இதற்கு ஒவ்வொரு பருவகாலத்திலும் மொத்தமாக ரூ. 19 இலட்சம் கடன்கள் வழங்கப்படுகின்றன. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி நிறுவப்பட்டமையினால் கடன்கள் விரைவாக அதிகரிக்கக்கூடும்.

அட்டவணை 2.13

**சுய தொழில் வாய்ப்பு, கிராம ஏற்பு ஆகிய திட்டங்களின்கீழ் மாத்தறை பிரதேச அலுவலகத்தின் செயற் திட்டங்களின்முன்னேற்றம் 1985 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு**

| துறை | சுய தொழில் வாய்ப்புத் திட்டம் | | | | கிராம ஏற்புத் திட்டம் | | | | இரு திட்டங்களும் | | | | மதிப்பிடப்பட்ட தொழில்வாய்ப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விதந்துரைக்கப் பட்டவற்றின் மொத்தம் | | ஒப்புதலளிக்கப்பட்ட வற்றின் மொத்தம் | | விதந்துரைக்கப் பட்டவற்றின் மொத்தம் | | ஒப்புதலளிக்கப்பட்ட வற்றின் மொத்தம் | | விதந்துரைக்கப்பட்ட வற்றின் மொத்தம் | | ஒப்புதலளிக்கப்பட்ட வற்றின் மொத்தம் | | |
| | எண்ணிக்கை | தொகை ரூ. | எண்ணிக்கை | தொகை ரூ. | எண்ணிக்கை | தொகை ரூ. | எண்ணிக்கை | தொகை ரூ. | எண்ணிக்கை | தொகை ரூ. | எண்ணிக்கை | தொகை ரூ. | |
| **வேளாண்மை** | | | | | | | | | | | | | |
| 1. வேளாண்மை ... | 40 | 111,335 | 26 | 85,885 | 4 | 11,000 | 1 | 2,000 | 44 | 122,335 | 27 | 87,885 | 33 |
| 2. பாற்பண்ணை ... | 23 | 127.700 | 15 | 85,000 | 7 | 35,200 | 6 | 29,800 | 30 | 162,900 | 21 | 114,800 | 24 |
| 3. கோழிப்பண்ணை ... | 140 | 1,060,350 | 83 | 641,050 | 49 | 334,200 | 48 | 323,400 | 189 | 1,394,550 | 131 | 964,450 | 133 |
| 4. ஆட்டுப்பண்ணை ... | 2 | 12,500 | 1 | 5,000 | 18 | 41,000 | 18 | 41,000 | 20 | 53,500 | 19 | 46,000 | 26 |
| 5. கடற்றொழில் ... | 12 | 181,000 | 5 | 28,000 | — | — | — | — | 12 | 181,000 | 5 | 28,000 | 05 |
| **கைத்தொழில்கள்** | | | | | | | | | | | | | |
| 6. அப்பமனையும், இனிப்புத் தொழிற்சாலையும் ... | 59 | 343,190 | 43 | 224,890 | 3 | 11,000 | 3 | 11,000 | 62 | 354,190 | 46 | 235,890 | 85 |
| 7. ஏனைய உணவு உற்பத்திகள் ... | 2 | 25.000 | — | — | — | — | — | — | 2 | 25,000 | — | — | — |
| 8. புகையிலை / பீடி ... | 5 | 38,200 | 4 | 30,200 | — | — | — | — | 5 | 38,200 | 4 | 30,200 | 11 |
| 9. கைத்தறி நெசவு ... | 29 | 156,300 | 20 | 105,800 | 8 | 37,500 | 7 | 32,500 | 37 | 193,800 | 27 | 138,300 | 56 |
| 10. தையல் ... | 83 | 558,015 | 62 | 387,315 | 5 | 30,000 | 5 | 30,000 | 88 | 588,015 | 67 | 417,315 | 107 |
| 11. ஏனைய புடவை உற்பத்திகள் ... | 19 | 118,470 | 12 | 60,370 | 1 | 10,000 | 1 | 10,000 | 20 | 128,470 | 13 | 70,370 | 31 |
| 12. தச்சுத் தொழில் ... | 26 | 157,720 | 22 | 132,720 | 2 | 10,500 | 2 | 10,500 | 28 | 168,220 | 24 | 143,220 | 34 |
| 13. தாள் உற்பத்திகள் ... | 2 | 9,090 | 2 | 9,090 | — | — | — | — | 2 | 9,090 | 2 | 9,090 | 3 |
| 14. உலோகமல்லாத கனிபொருட்கள் | 84 | 395,675 | 70 | 306,825 | 2 | 8,150 | — | — | 86 | 403,825 | 70 | 306,825 | 174 |
| 15. கல்லுடைத்தல் ... | 7 | 31,500 | 7 | 31,000 | 2 | 5,471 | 2 | 5,250 | 9 | 36,971 | 9 | 36,250 | 21 |
| 16. உலோக உற்பத்திகள் ... | 13 | 96,200 | 9 | 41,200 | — | — | — | — | 13 | 96,200 | 9 | 41,200 | 28 |
| 17. கயிற்று உற்பத்திகள் ... | 43 | 133,940 | 28 | 79,520 | 12 | 34,210 | 9 | 21,415 | 55 | 168,150 | 37 | 100,935 | 47 |
| 18. திருத்தலும் பேணலும் ... | 48 | 276,945 | 34 | 192,695 | 1 | 5,000 | 1 | 5,000 | 49 | 281,945 | 35 | 197,695 | 51 |
| 19. பண்ணைக் கருவிகள் ... | 77 | 2,386,355 | 71 | 2,274,480 | 4 | 14,300 | 4 | 14,300 | 81 | 2,400,655 | 75 | 2,288,780 | 76 |
| 20. இரசாயனப் பொருட்கள் ... | 6 | 55,800 | 6 | 55,800 | 1 | 10,000 | 1 | 10,000 | 7 | 65,800 | 7 | 65,800 | 7 |
| 21. வர்த்தகமும், வணிகமும் ... | 24 | 131,700 | 19 | 94,900 | — | — | — | — | 24 | 131,700 | 19 | 94,900 | 21 |
| 22. ஏனையவை ... | 71 | 487,505 | 39 | 229,130 | 8 | 40,670 | 4 | 20,520 | 79 | 528,175 | 43 | 249,650 | 63 |
| மொத்தம் | 815 | 6,894,490 | 578 | 5,100,870 | 127 | 638,201 | 112 | 566,685 | 942 | 7,532,691 | 690 | 5,667,555 | 1,036 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 2.14

## சுயதொழில் வாய்ப்பு, கிராம ஏற்பு ஆகிய திட்டங்களின் கீழ் மாத்தறை பிரதேச அலுவலகத்தினுல் மீளப்பெறப்பட்ட கடன்கள் 1985 டிசெம்பர் இறுதியில் உள்ளவாறு

| துறை | வழங்கப்பட்ட கடன்களின் தொகை (ரூபாய்கள்) | மூலதன மீள் கொடுப்பனவுகள் அட்டவணைப் படுத்தப்பட்ட தொகை (ரூபாய்கள்) | மீளச் செலுத்தப்பட்ட தொகை (ரூபாய்கள்) | மேலதிகமாக வரவேண்டிய தொகை (ரூபாய்கள்) |
|---|---|---|---|---|
| **வேளாண்மை** | | | | |
| 1. வேளாண்மை ... | 52,050 | 21,140 | 16,671 | 4,469 |
| 2. பாற்பண்ணை ... | 37,800 | 26,000 | 18,600 | 7,400 |
| 3. கோழிப்பண்ணை ... | 523,514 | 243,339 | 153,347 | 89,992 |
| 4. ஆட்டுப்பண்ணை ... | 35,305 | 12,000 | 9,525 | 2,475 |
| 5. கடற்றொழில் ... | 28,000 | 10,098 | 4,459 | 5,639 |
| **கைத்தொழில்களும் பணிகளும்** | | | | |
| 6. அப்பமனையும் இனிப்புத் தொழிற்சாலையும் ... | 147,085 | 60,358 | 39,654 | 20,704 |
| 7. ஏனைய உணவு உற்பத்திகள் ... | — | — | — | — |
| 8. புகையிலை / பீடி ... | 20,800 | 11,360 | 1,536 | 9,824 |
| 9. கைத்தறி நெசவு ... | 105,000 | 35,988 | 25,385 | 10,603 |
| 10. தையல் ... | 245,840 | 89,209 | 71,549 | 17,660 |
| 11. ஏனைய புடவை உற்பத்திகள் ... | 48,300 | 28,200 | 20,227 | 7,973 |
| 12. தச்சுத் தொழில் ... | 63,470 | 30,056 | 18,364 | 11,692 |
| 13. தாள் உற்பத்திகள் ... | — | — | — | — |
| 14. உலோகமல்லாக் கனிப் பொருட்கள் ... | 115,335 | 63,194 | 38,642 | 24,552 |
| 15. கல்லுடைத்தல் ... | 22,000 | 16,020 | 13,468 | 2,552 |
| 16. உலோக உற்பத்திகள் ... | 19,000 | 15,055 | 13,990 | 1,065 |
| 17. கயிற்று உற்பத்திகள் ... | 67,500 | 47,220 | 38,035 | 9,185 |
| 18. திருத்தலும் பேணலும் ... | 113,882 | 58,497 | 31,508 | 26,989 |
| 19. பண்ணைக் கருவிகள் ... | 2,190,700 | 1,286,770 | 1,220,189 | 66,581 |
| 20. இரசாயனப் பொருட்கள் ... | 56,000 | 13,433 | 6,532 | 6,901 |
| 21. வர்த்தகமும் வணிகமும் ... | 64,000 | 33,363 | 25,659 | 7,704 |
| 22. ஏனைய வைகள் ... | 156,837 | 72,521 | 47,736 | 24,785 |
| மொத்தம் ... | 4,112,418 | 2,173,821 | 1,815,076 | 358,745 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**வரண்ட வலயப் பிரதேசம்**

அம்பாந்தோட்டை, மொனருகலை மாவட்டங்களில் கீழோட்ட நீர்ப்பாசனம், பண்ணை வலு, உப உணவுப் பயிர்கள் போன்ற நோக்கங்களுக்காகக் கடன் பெறுவதில் வேளாண்மையாளரிடையே பெரும் ஆர்வம் காணப்பட்டது. முதற் தடவையாக வெள்ளவாயா, புத்தல பிரதேசங்கள் வங்கிக் கடனிஞல் வழங்கப் பட்ட திறந்த கிணறுகள், நீர்ப் பம்பிகள் என்பவற்றிலிருந்து போதியளவு நீரைப் பெற்று நிரந்தரமான பயிரிடல் முறையினைப் பின்பற்ற முடிந்தது. 1985 இறுதியில் பிரதேசத்தில் இத்தகைய 50 கூறுகள் காணப்பட்டன. பெருந் தொகையான வேளாண்மையாளர்கள் தமது வங்கிக் கடன்களிலிருந்து பெற்ற மொத்த முதலீட்டினை விடக் கூடுதலான தொகையை ஒரு பருவத்திலேயே உழைக்க முடிந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வேளாண்மையாளருக்குக் காய் கறிகள், வெங்காயம், மிளகாய் மற்றும் பயிர்களைப் பயிரிடுவதற்கும் கடன்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

**தேயிலே, தெங்கு வளமாக்கிக் கடன்கள்**

தேயிலேயும் தெங்கும் இப் பிரதேசத்தின் மிக முக்கியமான பெருந்தோட்டப் பயிர்களாகும். பிரதேச அலுவலகம் கடன்களே வழிப்படுத்துவதற்கு உதவியாகக் கொடுகடன் முகாம்களேயும் வேளாண்மையாளர் குழுக்களேயும் அமைத்ததுடன் உள்ளீடுகளே வழங்குவதற்கான கடன் திட்டம் மேலும் தூண்டுதலேப் பெற்றது. பெரும்பாலான மீள் நிதியிடல் ஒதுக்குப் பாவிக்கப்படாதிருந்தபோதிலும் பாதக மான விலே மாற்றங்கள் ஏற்பட்ட ஒருகாலப் பகுதியின்போது வளமாக்கிக் கொடுகடன் திட்டமானது சிறு உடைமையாளருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. உண்மையில் ஒன்று சேர்ந்ததும் குழப்பமானதுமான நடைமுறைகள் இத் துறையின் கடன் பகிர்ந்தளிப்புச் செய்முறையின் விரைவினேத் தடைப்படுத்துவதாக அமைந்தன. பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் தேயிலே வளமாக்கிக் குழுக் கூட்டங்களுக்குப் பிரதேச அலுவலகம் ஒழுங்காகச் சமூகமளித்தது. கூட்டத்தில் தேயிலேத் துறைக்கான நிதியிடலே நிரப்பும் திட்டமும் கவனத்திற்கு முன்மொழியப்பட்டது.

**கடன்களின் மீளக் கொடுப்பனவு**

கிராமியக் கொடுகடன் நடவடிக்கைகளில் மிகவும் விவாதிக்கப்பட்ட விடயங்களில் ஒன்று சிறு அளவிலான கொடுகடன்களின் மீளச் செலுத்தத் தவறுதல்கள் மிக உயர்வாக இருந்தமையாகும். அதிட்டவசமாகப் பிரதேச அலுவலகத்திலிருந்து பெற்ற உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட கொடுகடன் செயற்றிட்டங்கள் அட்டவணே 2.15 இல் காட்டப்பட்டவாறு ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வீதமான மீளப் பெறுகைகளேக்காட்டுகின்றன.

*அட்டவணே 2.15*

**கடன்களின் மீள் கொடுப்பனவு — மாத்தறை பிரதேச அலுவலகத்திஞல் நடைமுறைப்படுத்தப்பட்ட கொடுகடன் செயற்றிட்டங்கள் (1985 இறுதியிலுள்ளவாறு)**

| திட்டம் | மீளளிப்பு வீதம் (சதவீதம்) |
|---|---|
| சுய தொழில் வாய்ப்பும் கிராம ஏற்பு கடன்களும் ... | 83 |
| நெற் கடன்கள் ... | 90 |
| உலர்வலய வேளாண்மைக்கடன்கள் ... | 90 |
| தேயிலே வளமாக்கிக் கடன்கள் ... | (சலுகைக் காலம்) |
| தெங்கு வளமாக்கிக்கடன்கள் ... | (சலுகைக் காலம்) |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

எனினும் இப் பதிவுகளுக்கு மாறுகக் கடன்களே விரைவில் மீளப்பெறுவது தொடர்பாக ஒவ்வாத பண்புகளும் காணப்படுகின்றன. தவறிழைத்த கடன்

LIBRARY

பாட்டாளர்களுக்கெதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதில் அளவுக்கு மீறிய தாமதங்களையும்,குறிப்பிட்ட கடன்பாட்டாளர்களிடையே தவறான கொள்கையையும், உண்மையில் இடர்ப்பாடுகளில் உள்ள கடன் பாட்டாளர்களுக்கு உதவுவதில் வங்கிகளின் இயலாமையையும் இங்கு காண முடிந்தது. இரண்டு அரச வங்கிகள் மூலமாகப் பகிர்ந்தளிக்கப்பட்ட சுய வேலை வாய்ப்புக் கடன்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன் இவை தொடர்பான செலுத்தத் தவறிய வீதங்கள் சார்பு ரீதியில் இலங்கை வங்கி (32 சதவீதம்), மக்கள் வங்கி (26 சதவீதம்) ஆகியவற்றைப் பொறுத்தவரை உயர்வாகவும் இருந்தன.

### பொருளாதாரத் தாக்கம்

அதிகரிக்கப்பட்ட வருவாய், உருவாக்கப்பட்ட தொழில்வாய்ப்பு, பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்தியில் தோன்றிய வளர்ச்சி ஆகியன தொடர்பான கொடு கடன் செயற்றிட்டங்களிலிருந்து தோன்றுகின்ற பொருளாதார நன்மைகளை அளவிட முடிகின்றது. அட்டவணை 2.16, 1985 இறுதியில் உள்ளவாறு தெரிந் தெடுக்கப்பட்ட பல கொடுகடன் செயற்றிட்டங்களின் சில அடிப்படைப் பொரு ளாதாரப் பண்புகளை எடுத்துக் காட்டுகின்றது.

அட்டவணை 2.16

கொடுகடன் செயற்றிட்டத்தின் பொருளியல் நோக்கு—பிரதேச அலுவலகம்—மாத்தறை—1985 இறுதியிலுள்ளவாறு

| வகை | செயற்றிட்டங் களின் எண்ணிக்கை/ அலகுகள்/ வேளாமையாளர்கள் | செயற்றிட் டங்களின் மொத்தச் செலவு (ரூ. ப. இ.) | வங்கிக் கடன்கள் (ரூ. ப. இ.) | மதிப்பிடப் பட்ட வெளியீட் டின் மொத்த ஆண்டுப் பெறுமதி (ரூ. ப. இ.) |
|---|---|---|---|---|
| 1. சுயதொழில் வாய்ப்புக்கடன்கள் ... | 690 (அலகுகள்) | 7.2 | 5.6 | 40.0 |
| 2. நெற் கடன்கள் ... | 1,215 (ஏக்கர்கள்) | 8.5(அ) | 3.5 (ஆ) | 8.7(இ) |
| 3. உலர் வேளாண்மை ... | 200 (வேளாண்மை யாளர்கள்) | 0.8 | 0.4 | 2.0 (ஈ) |
| 4. திறந்த கிணறுகள் ... | 43 (அலகுகள்) | 0.8 | 0.5 | 0.8 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) ஏக்கரொன்றிற்கு ரூ. 3,500 வீதத்தில்.

(ஆ) இரண்டு பருவ காலங்களில்.

(இ) ஏக்கரிற்கு 55 புசல்கள் என்ற வீதத்தில் புசலொன்றிற்கு ரூ. 65/- என மதிப்பிடப்பட்டது.

(ஈ) ஆண்டொன்றிக்கு ஏக்கருக்கு ரூ. 5,000 என்ற அடிப்படையில் 400 ஏக்கர்களுக்கு.

பகுதிநேர வேலை வழங்கலையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமிடத்து 690 சுயதொழில் வாய்ப்புச் செயற்றிட்டங்கள் மட்டும் ஏறத்தாழ 1,036 பேர் களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கியுள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளமையை ஈண்டு குறிப்பிடலாம்.

**அமைப்பு ரீதியானவை**

கொடுகடன் செயற்றிட்டங்களில் பொருளியல் தகைமையையும் பொது மக்களின் சுறுசுறுப்பான பங்கேற்பையும் உயர்த்தும் பொருட்டு மீளாய்விற்குரிய ஆண்டில் பிரதேச அலுவலகம் உற்பத்தியாளர் மற்றும் வேளாண்மையாளர் குழுக்களை அமைப்பதில் ஈடுபட்டது. உலர்வலயத்தில் வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் களரியில் ஈடுபாடு காட்டினர். நெல் வேளாண்மையாள ரிடையே கொடுகடன் களரியில் ஈடுபாடு காணப்பட்டவேளையில் கைத்தறி, கயிறு, கோழிப்பண்ணை போன்ற உற்பத்தியாளர் குழுக்கள் கொள்வனவு, சந்தைப் படுத்தல் களரிகளில் விருப்புக் கொண்டிருந்தன. பல்வேறுபட்ட அரசு சார்பற்ற அமைப்புக்கள் வெளியீட்டை அதிகரிக்கவும், விற்பனையை விரிவாக்கவும் சிறந்த விலைகளைப் பெறுவதற்கும் இக்குழுக்களுக்கு அவற்றின் ஆதரவை வழங்கின. 1985 இறுதியில் 400 இற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட 21 அத்தகைய குழுக்கள் காணப்பட்டன. இக்குழுக்களின் நன்மைக்காகப் பிரதேச அலுவலகம் பல கலந்துரையாடல்களையும், தொழில்நுட்ப ரீதியான கூட்டத் தொடர்களையும், மருந்தகங்களையும், முகாம்களையும், செய்முறைப் பயிற்சிகளையும் ஒழுங்கு செய்தது.

**ஏனைய நடவடிக்கைகள்**

பிரதேச அலுவலகம் ஆய்வரங்கு தரவு சேகரிப்பு வேலைகள் ஆகியவற்றினை நடத்துவதில் மத்திய வங்கியின் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கும், பொருளியல் ஆராய்ச்சித் திணைக்களத்திற்கும் உதவியது. கிராமியக் கொடுகடன் திணைக் களம் மாத்தறையிலுள்ள உள்ளூர் வங்கி அலுவலர்களிடையே அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் மீதான புதிய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை அறிமுகம் செய்வதற்காக ஆய்வரங்குகளை நடத்தியது. தேசிய இளைஞர் பணிகள் மன்றம், வர்த்தக முகாமையின் தேசிய நிறுவனம் போன்ற பல முகவர்களும், அரசு சார்பற்ற அமைப்புக்களும் மாத்தறையில் நடத்தப் பெறும் வேறுபட்ட செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து பிரதேச அலுவலகத்தினால் கிடைக்கச் செய்யப்படும் மூலவளங்களைப் பயன் படுத்திக்கொண்டன.

பிரதேச தீர்வகம், பிரதேச அலுவலகத்தில் நாளாந்தம் இரண்டு தடவை கூடி 1985 இல் ரூ. 8,910 இலட்சம் பெறுமதி கொண்ட 138,554 காசோலை களைத் தீர்ப்பனவு செய்தது.

## பிரதேச அலுவலகம்-அநுராதபுரம்

1985 ஆம் ஆண்டில் பிரதேச அலுவலகம் அநுராதபுரம் எண் 340, 340ஏ என்னுமிடத்தில் முதற்படியாகக் கட்டி முடிக்கப்பெற்ற 3 மாடிக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக மாவட்டத்தின் வட பகுதியிலுள்ள வங்கிகள் மட்டுப்படுத்தப்பட்ட வேலை நேரத்துடன் தமது பணிகளை மட்டுப்படுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டன. சில வங்கிகள் வைப்புக்களை ஏற்றுக் கொள்ளல், மீளளித்தல்களைச் சிறிதளவு பணத்திற்கு வரையறுத்துக் கொண்டன. மக்கள் வங்கியின் நகை அடைவு நிறுத்தப்பட்டமையின் விளைவாக மாவட்டத்திலுள்ள வேளாண்மையாளர்களுக்கான இலகுவான கொடுகடன் வழிகள் குறைவடைந்தன.

மிகச் சாதகமற்ற சூழ்நிலை காணப்பட்டபோதும், இவ்வாண்டுக் காலத்தின் மிக முக்கிய நடவடிக்கையாகக் காணப்பட்ட சிறப்பு நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பிரதேச அலுவலகம் கிராமியக் கொடுகடன் அபிவிருத்தி வேலைகளைத் தொடர்ந்தும் விரிவாக்கியது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான விரிவுபடுத்தப்பட்ட வசதிகள் மாவட்டத்தின் சில பகுதிகளுக்கான வெளிக்களப் பார்வையிடல் தவிர்க்க முடியாத விதத்தில் கட்டுப் படுத்தப்பட்டமையின் விளைவாக ஓரளவிற்குப் பாதிக்கப்பட்டன. எனினும் வங்கியினுல் வழங்கப்பட்ட கடன்களின் அளவு, அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்கள், வங்கிகளினுல் அளிக்கப்பட்ட ஒப்புதல்கள் என்பனவற்றின் தன்மை கூடியளவிற்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ளது.

அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட நடுத்தர, நீண்ட காலச் செயற்றிட்டங்களின் ஒன்று சேர்ந்த மொத்த எண்ணிக்கை 1,254 ஆகக் காணப்பட்டது. இவற்றில் 411 செயற்றிட்டங்கள் வங்கிகளினுல் ஒப்புதலளிக்கப் பட்டதுடன் 357 செயற்றிட்டங்கள் 1985 இறுதியில் தொழிற்பாட்டிலுமிருந் தன. மீளாய்விற்குரிய காலப்பகுதியில் 300 செயற்றிட்டங்கள் வங்கியினுல் அடையாளம் காணப்பட்டதுடன் 122 இற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. இச்செயற்றிட்டங்களுக்கான வர்த்தக வங்கிகளின் கடப்பாடுகள் ரூ. 3,162,410 ஆக விளங்கின.

அட்டவணை 2-17

**அடையாளங்காணப்பட்டதும் ஒப்புதலளிக்கப்பட்டதுமான செயற்றிட்டங்களின் தொகுப்பு**

| வகை | அடையாளங் காணப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை | விதந்துரைக்கப் பட்ட கடன்களின் தொகை ரூபா | வங்கிகளினுல ஒப்புதலளிக்கப் பட்ட அலகு களின் எண்ணிக்கை | வங்கிக்கடன் ரூபா |
|---|---|---|---|---|
| வேளாண்மை .. | 546 | 5,517,700 | 173 | 1,870,200 |
| கால்நடை ... | 483 | 2,395,479 | 127 | 606,285 |
| கைத்தொழில் .. | 160 | 1,300,739 | 79 | 521,175 |
| பணிகள் .. | 65 | 364,750 | 32 | 164,750 |
| மொத்தம் ... | 1,254 | 9,578,668 | 411 | 3,162,410 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

பிரதேச அலுவலகத்தினுல் அடையாளம் காணப்பட்டு வர்த்தக வங்கிகளினுல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் பெருமளவு கவனமும் மாவட்டத்தின் முக்கிய பொருளாதார நடவடிக்கையான வேளாண்மைத்துறையிலேயே தொடர்ந்தும் காணப்பட்டது. நிலத்துக்கடியிலுள்ள நீரைப் பயன்படுத்துகின்ற சிறு அளவு வேளாண்மைச் செயற்றிட்டங்கள் மாவட்டத்தின் பிரபல்யம் பெற்ற ஒன்ருக மாறி வருகின்றன.

பிரதேச அலுவலகம் சிறப்பு அபிவிருத்திக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அதன் பகிர்ந்தளிப்புக்களில் பெரும் பங்கும் குறைந்த தொடக்கக் கொடுப்பனவு, நீண்ட காலக் கடன் முதிர்ச்சி, குறைந்த வட்டி வீதம் போன்ற சலுகை நியதிளுடன் சிறிய வேளாண்மையாளர், மற்றும் குறைந்த வருமானம் பெறும் தொகுதியினருக்கு நிதியிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. கடன் பெறுநர்கள் மத்திய வங்கியின் பயிற்சி வசதிகளையும் வழிப்படுத்தலையும், ஆதரவையும் தொடர்ந்தும் அனுபவித்தனர்.

தொழிற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்கள் தொழில் வாய்ப்பைப் பெருக்கல், வருமானத்தை உருவாக்கல் ஆகியவற்றைப் பொறுத்தவரை பாராட்டத்தக்க செயற்பாட்டினைக் காட்டின. இவ்வாண்டுக் காலத்தில் ரூ. 120 இலட்சம் கொண்ட வருமானம் உருவாக்கப்பட்டதாகவும் (கடன் பெறுநர்களுக்கு வழங்கபட்டமை தவிர) 274 தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ச்சியான வழிகாட்டல்களும் உதவிகளும், தடையற்ற விரிவாக்கப் பணிகள் பெருமளவிற்குக் கிடைத்தமை ஆகியன பெரும்பாலான செயற்றிட்டங்களும் மீள் கொடுப்பனவுகளும் வெற்றி பெறுவதற்கு உதவிய காரணிகளாக இருந்தன.

1985 திசெம்பர் இறுதியில் 240 செயற்றிட்டங்கள் தமது கடன்களை மீளச் செலுத்தவேண்டியிருந்தபோதும் 44 செயற்றிட்டங்கள் தமது கடன்களை முழுமையாக மீளச் செலுத்தின. சில செயற்றிட்டங்கள் தோல்வியடைந்தமையும், சிலர் வேண்டுமென்றே கடன் செலுத்தத் தவறியமையும், மீள் கொடுப்பனவு வீதங்களைப் பாதித்தன. எனினும் மீள் கொடுப்பனவு வீதம் இன்னமும் 75 சத வீதத்திற்குக் கூடுதலாக இருந்ததுடன் வேளாண்மைக் கடன்களில் காணப்பட்ட மீளளிப்பு வீதத்துடன் ஒப்பிடுகையில் இதனை உயர்ந்தளவு திருப்திகரமானதொன்றாகவும் கருதமுடியும். தோல்வியுற்ற செயற்றிட்டங்களுக்காக மீள் அட்டவணையிடும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள வேளையில் வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறிய ஏனையவர்களைப் பொறுத்தவரையில் தொடர்ந்தும் கண்காணிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

**பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வரங்குகள், கிராம மட்டத்தில் கூட்டங்கள்**

கிராமிய மக்களுடனான தொடர்ச்சியான கலந்துரையாடல்களும் வேளாண்மை கடன் பெறுநர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் கடன் வழங்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் மிக இன்றியமையாததொரு ஆக்கக் கூறினை உருவாக்கின. உள்ளார்ந்த அபிவிருத்தி மற்றும் நிறுவன ரீதியான நிதியிடல் ஆகியவற்றினைப் பொறுத்தவரை பொதுமக்களுடன் வலுவானதும் தாக்கம் மிக்கதுமான தொடர்புகளை மேற்கொள்ளக் கிராம மட்டத்திலான கூட்டங்களே வெற்றிகரமான சாதனம் எனக் காணப்பட்டுள்ளது. இவ்வாண்டுப் பகுதியில் ஏறத்தாழ 2,000 மக்களை உள்ளடக்கிய அத்தகைய நாற்பத்தைந்து கூட்டங்கள் நடத்தப்பெற்றன. முன்னைய ஆண்டினைப் போலன்றி வேளாண்மையாளர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பரவலாக்கப்பட்டு மாவட்டத்தின் வேறுபட்ட 7 நிலையங்களில் நடத்தப்பட்டன. முன்னூற்று ஐம்பத்தாறு ஆட்கள் வேளாண்மைப் பயிற்சியை மேற்கொண்டதன் மூலம் மத்திய வங்கியின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்ப் பயனடைந்தோரின் ஒன்று சேர்ந்த மொத்தம் ஏறத்தாழ 2,000 இனை அடைந்தது. பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் வகுப்பறை விரிவுரைகள் களப்பார்வையிடல் ஆகியனவற்றைக் உள்ளடக்கியிருந்தது.

கிராம ஏற்பு சுய

1985 டிசெம்பர்

| வகை | வங்கிகளுக்கு அனுப்பப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | | வங்கிகளினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | |
|---|---|---|---|---|
| | அலகுகள் | பெறுமதி | அலகுகள் | பெறுமதி |
| **1. நீர்ப்பாசன வசதிகளுடனான வேளாண்மை** | | | | |
| 1.1 கிணறுகளும் நீரிறைக்கும் பம்பிகளும் ... | 429 | 3,842.9 | 131 | 1,164.7 |
| 1.2 வாழைப் பயிர்ச்செய்கை ... | 03 | 13.3 | 01 | 3.5 |
| 1.3 நீரிறைக்கும் காற்றாடி ... | 41 | 548.5 | 05 | 71.2 |
| 1.4 இரு சில்லு உழுபொறிகள் ... | 31 | 1,022.0 | 18 | 606.0 |
| 1.5 வேளாண்மைக் கருவிகள் ... | 42 | 91.0 | 18 | 24.7 |
| **2. கால்நடை** | | | | |
| 2.1 கோழிப்பண்ணை ... | 77 | 474.2 | 28 | 167.3 |
| 2.2 பாற்பண்ணை ... | 177 | 1,064.3 | 33 | 193.0 |
| 2.3 ஆட்டுப்பண்ணை ... | 151 | 608.9 | 43 | 160.5 |
| 2.4 பன்றிப்பண்ணை ... | 78 | 248.1 | 23 | 85.5 |
| **3. கைத்தொழில்** ... | | | | |
| 3.1 கடினச் சீமெந்து கலவை உலோக வேலைகள் ... | 03 | 18.6 | — | — |
| 3.2 செங்கல் தயாரிப்புக்கள் ... | 11 | 46.3 | 05 | 22.7 |
| 3.3 அப்பமனையும் இனிப்பு வகையும் ... | 48 | 319.3 | 31 | 153.2 |
| 3.4 கொல்ல வேலை, தகர வேலை, ஒட்டு வேலைகள் ... | 22 | 407.3 | 05 | 67.6 |
| 3.5 தச்சு வேலையும் மரம் செதுக்குதலும் ... | 17 | 131.0 | 11 | 92.4 |
| 3.6 பீடியும் சுருட்டுத் தயாரிப்பும் ... | 05 | 24.5 | 03 | 13.9 |
| 3.7 ஆடையும் பட்டிக்கும் (வர்ணம் தீட்டிய துணிகள்) ... | 24 | 175.2 | 12 | 98.5 |
| 3.8 கயிற்று உற்பத்திகள் ... | 07 | 27.3 | 05 | 19.3 |
| 3.9 சவர்க்காரம், எழுது பொருட்கள் தயாரித்தல் ... | 03 | 20.3 | 01 | 5.5 |
| 3.10 ஆயுர்வேத மருந்துத் தயாரிப்புக்கள் ... | 02 | 9.0 | 01 | 3.0 |
| 3.11 தோல் உற்பத்திகள் ... | 03 | 25.0 | 03 | 75.0 |
| 3.12 களிமண் கைத்தொழில் ... | 11 | 65.5 | 01 | 10.0 |
| 3.13 அரிசிகுத்துதல் ... | 01 | 10.0 | — | — |
| 3.14 தொட்டியில்மீன் வளர்த்தலும், நன்னீர் மீன்பிடியும் | 03 | 21.5 | 01 | 10.0 |
| **4. பணிகள்** | | | | |
| 4.1 வர்த்தகம், வீட்டுப்பயன்பாட்டுக்குத் தேவையான பொருட்களும், பலசரக்குகளும் உறைகளில் அடைத்தல் ... | 19 | 81.0 | 08 | 28.0 |
| 4.2 ஈருருளிகள் திருத்தல் பிரிவுகள் ... | 27 | 174.0 | 13 | 68.0 |
| 4.3 நிழற்படமெடுத்தல் ... | 02 | 15.0 | 01 | 8.5 |
| 4.4 சிகையலங்காரம் ... | 07 | 24.8 | 05 | 17.3 |
| 4.5 மின்னியக்க வேலை ... | 02 | 26.0 | 01 | 16.0 |
| 4.6 மின்கலத்திற்கான மின்னூட்டல் அலகுகள் ... | 02 | 16.4 | 02 | 16.4 |
| 4.7 போக்குவரத்துப் பணிகள் ... | 01 | 2.0 | — | — |
| 4.8 விளம்பர அட்டைகள் தயாரித்தல் ... | 01 | 5.0 | 01 | 5.0 |
| 4.9 வானொலி திருத்தல் பிரிவுகள் ... | 04 | 20.5 | 01 | 5.5 |
| மொத்தம் ... | 1,254 | 9,578.7 | 411 | 3,162.4 |

அட்டவணை 2.18

## தொழில் வாய்ப்புத் திட்டம்

## இறுதியிலுள்ளவாறு

(பெறுமதி ஆயிரம் ரூபாய்களில்)

| நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் கொண்டிருந்த மூலதனம் | | | | மீள்கொடுப்பனவுகள் | | | | செலுத்தப்பட்ட அலகுகள் | தொழில் வாய்ப்பு | சராசரிவருமானம் (மாதாந்தம்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலகுகள் | வங்கிக் கடன் | கடன் பட்டோர் உதவு தொகை | மொத்தம் | திரும்பி வரவேண்டிய கடன் அலகுகள் | வரவேண்டிய மொத்தத் தொகை 1984 டிசெம்பர்இறுதியில் | திருப்பி செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 1985 டிசெ. | நீண்டகாலமாக வரவேண்டிய மொத்தத் தொகை | | | |
| 114 | 1,010.4 | 248.7 | 1,259.1 | 77 | 209.6 | 141.2 | 68.4 | 11 | 250 | 448.9 |
| 01 | 3.5 | 0.5 | 4.0 | 01 | 3.5 | 1.5 | 2.0 | — | 01 | 3.2 |
| 05 | 71.3 | 13.2 | 84.4 | 02 | 5.0 | 5.0 | — | — | 08 | 26.3 |
| 16 | 551.0 | 324.4 | 875.4 | 08 | 15.9 | 15.9 | — | — | 32 | 66.6 |
| 18 | 24.7 | 7.7 | 32.4 | — | — | — | — | — | — | — |
| 22 | 125.5 | 41.0 | 166.5 | 16 | 52.0 | 31.8 | 20.2 | 06 | — | — |
| 23 | 136.9 | 29.4 | 166.3 | 14 | 21.9 | 19.2 | 2.7 | — | 23 | 11.5 |
| 37 | 131.7 | 20.9 | 151.9 | 27 | 59.3 | 44.0 | 15.3 | 03 | 37 | 12.9 |
| 18 | 65.8 | 20.5 | 86.3 | 11 | 26.1 | 9.2 | 17.0 | 07 | — | — |
| — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 03 | 14.5 | 3.5 | 18.0 | 03 | 11.7 | 5.9 | 5.9 | — | — | — |
| 28 | 135.2 | 91.0 | 226.2 | 21 | 53.1 | 39.4 | 13.7 | 07 | 45 | 420.0 |
| 05 | 67.6 | 23.4 | 91.0 | 03 | 15.9 | 15.9 | — | 02 | 09 | 25.4 |
| 10 | 85.1 | 24.5 | 109.7 | 07 | 36.6 | 27.2 | 9.4 | 02 | 15 | 100.00 |
| 03 | 13.9 | 2.7 | 16.6 | 02 | 6.4 | 4.9 | 1.4 | 01 | 12 | 25.6 |
| 11 | 83.5 | 35.3 | 118.9 | 07 | 16.3 | 16.3 | — | 04 | 28 | 88.0 |
| 05 | 19.3 | 3.4 | 22.7 | 05 | 11.9 | 8.0 | 3.9 | — | 03 | 8.0 |
| 01 | 5.5 | 1.2 | 6.8 | 01 | 5.5 | 5.3 | 0.2 | — | — | — |
| 01 | 3.0 | 1.0 | 4.0 | 01 | 2.1 | 1.9 | 0.2 | — | 02 | 2.8 |
| 03 | 25.0 | 18.4 | 43.5 | 03 | 4.7 | 4.7 | — | — | 08 | 36.0 |
| 01 | 10.0 | 2.0 | 12.0 | 01 | 1.7 | 1.7 | — | — | 02 | 2.3 |
| — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 01 | 10.0 | 3.5 | 13.5 | 01 | 1.9 | 1.8 | — | — | 0.2 | 2.5 |
| 07 | 25.0 | 16.7 | 41.7 | 06 | 9.3 | 7.4 | 1.9 | 01 | 10 | 52.5 |
| 13 | 68.0 | 31.5 | 99.5 | 13 | 35.0 | 34.1 | 0.8 | — | 16 | 39.0 |
| 01 | 8.5 | 5.0 | 13.5 | 01 | 8.2 | 8.3 | — | — | 01 | 6.4 |
| 05 | 17.4 | 3.8 | 21.2 | 05 | 10.2 | 5.9 | 4.3 | — | 08 | 12.5 |
| 01 | 16.0 | 8.0 | 24.0 | 01 | 4.5 | 3.7 | 0.8 | — | 03 | 12.4 |
| 02 | 16.4 | 5.0 | 21.4 | 01 | 5.7 | 5.7 | — | — | — | 2.1 |
| — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 01 | 5.0 | 0.6 | 5.6 | 01 | 2.8 | 1.5 | 1.3 | — | 02 | 3.0 |
| 01 | 5.5 | 0.6 | 6.1 | 01 | 1.0 | 1.0 | — | — | 02 | 2.0 |
| 357 | 2,754.6 | 987.5 | 3,742.1 | 240 | 637.9 | 468.4 | 169.5 | 44 | 520 | 1,409.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பொது மக்களுடன் தொடர்பு கொள்கின்றமையுடன் வங்கி அலுவலர்களைக் கிராமிய நிதியிடல்களின் புதிய துறைகளில் முயற்சியை மேற்கொள்ளும்பொருட்டு தூண்டும் விதத்தில் நடைமுறை அடிப்படையில் அவர்களுடன் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன.

அபிவிருத்தி சார்ந்த நீண்டகாலச் செயற்றிட்டங்கள் மற்றும் நிறுவன ரீதியான துறைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரை மக்களின் மனப்பான்மையில் கவனிக்கத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும், கிராமக் கூட்டங்களும் வெற்றி கண்டன.

பிரதேச அலுவலகம் அதன் சொந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுடன், ஏனைய முகவர்களுக்கு அவர்களின் பயிற்சித் தொடர்களிலும் தொடர்ச்சியாக உதவியது. மாதர் பணியகம்,இளைஞர் அலுவல்கள் தொழில் வாய்ப்பு அமைச்சு, கல்வித் திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, வங்கிகள், கிராமோதய இயக்கம், சர்வோதயம் ஆகியன பிரதேச அலுவலகத்திலிருந்து தொடர்ச்சியாக உதவிகளைப் பெற்றன. மீளாய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் பிரதேச அலுவலகம் 25 இற்கும் அதிகமான ஆய்வரங்குகள்/கூட்டங்களில் விரிவுரையாற்றியது.

**அபிவிருத்தி வேலைகளின் கண்காட்சி**

பிரதேச அலுவலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவைக் குறிக்குமுகமாகப் பிரதேச அலுவலகம் 1985 ஒகத்து மாதத்தில் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் மற்றும் கடன் வழங்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் சார்ந்த செயற்றிட்டங்கள் ஆகியவற்றினை எடுத்துக் காட்டும் சிறப்புக் கண்காட்சி ஒன்றினை நடத்தியது. கண்காட்சி 3 பரந்த வகைகளில் ஒழுங்கு செய்யப்பட்டது.

1. அரச அலுவலர்கள்.
2. கிராமப் பொதுமக்கள்.
3. மாணவர்கள்.

கண்காட்சியில் கலந்து கொண்டவர்கள் 6,500 இற்கும் அதிகமானவர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. கண்காட்சியைத் தொடர்ந்து செயற்றிட்டங்களுக்காகப் பெருமளவு எண்ணிக்கை கொண்ட விண்ணப்பங்களும் விசாரணைகளும் பெறப்பட்டுள்ளன.

பிரதேச அலுவலகம் மாவட்டத்திலுள்ள சிறிய நடுத்தரக் கைத்தொழில் செயற்றிட்டத்தை மேற்பார்வையிடுதலில் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்குத் தொடர்ந்தும் உதவியது. தலைமை அலுவலகத்தின் நாடுதழுவிய தரவு சேகரிக்கும் திட்டத்தின் கீழ் உள்ள தரவுச் சேகரிப்பாளர்கள் பிரதேச அலுவலகத்தின் மேற்பார்வைக்குட்பட்டதுடன் இவ்வலுவலகம் தொடர்ந்தும் நுகர்வோர் உள்ளீட்டு விலைகளைச் சேகரித்தது.

பிரதேச அலுவலகத்தின் தீர்வகம் ரூ. 160,028,346.19 சதம் பெறுமதி கொண்ட காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது.

## பிரதேச அலுவலகம்-மாத்தளை

இலங்கை மத்திய வங்கியின் மூன்ருவது பிரதேச அலுவலகம் அதன் தொழிற்பாடுகளை 1985 திசெம்பர் 23 ஆம் நாளன்று தொடங்கியது. இவ் வலுவலகத்தின் தொழிற்பாட்டுப் பரப்பு மாத்தளை, கண்டி, கேகாலை ஆகிய நிருவாக மாவட்டங்களாகும்.

பிரதேச அலுவலகத்தை ஏற்படுத்தியதன் முதன்மைக் குறிக்கோள் யாதெனில் அபிவிருத்திக் கடன் வழங்கல் கோட்பாட்டின் அடிப்படையில் கிரா மியத்துறையின் வங்கித் தொழில் தேவைகளை அர்த்தமுள்ள விதத்திலும் சுறு சுறுப்புமிக்க விதத்திலும் அளிப்பதற்குக் கிராமியப் பரப்புக்களில் வர்த்தக வங்கி கள் அவற்றின் நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு அவற்றினை ஊக்குவிப்பதே யாகும். இந்நோக்கத்திற்காக அபிவிருத்திக்கான உள்ளார்ந்த வளம், மற்றும் அபிவிருத்திக் கடன் வழங்கல்களின் பிரச்சனைகள், அடையாளம் காணல், தீர்வு களைக் கண்டு இன்றியமையாத உதவிகளை வழங்குதல், வங்கித்தொழில் துறையை நெறிப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் பொருத்தமான சூழ்நிலையை உருவாக் கலாம் எனப் பிரதேச அலுவலகம் எதிர்பார்க்கின்றது. பிரதேச வங்கி கிராமிய மக்களுக்குச் சலுகை வட்டி வீதத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள கடன் வசதிகளை அவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கும் அவர்களின் தற்போதைய தவருன மனப் பான்மையை மாற்றுவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டது. இவற்றினைப் பொறுத் தவரை சிறந்ததொரு வாடிக்கையாளராக வருவதில் உள்ள நன்மைகளைப்பற்றி வேளாண்மையாளர்களை நம்ப வைப்பது இன்றியமையாதது என்பதனுல் அவர் களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலமாகத் திருப்தியற்ற வங்கித் தொழில் நடைமுறைகளையும் வழக்கங்களையும் களைந்துவிட வேண்டும். இந்நட வடிக்கைகள் கிராம மக்களுக்கும் வங்கியாளர்களுக்குமிடையிலான அகன்ற இடை வெளிக்கு இறுதியாகப் பாலமாயமைந்து கிராமியத் துறையின் அபிவிருத்திக்காகச் சிறந்த வங்கித் தொழில் அமைப்பினைக் கட்டியெழுப்பும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

''சுயதொழில் வாய்ப்பும் கிராம ஏற்புத்திட்டமும்'' என்ற எடுத்துரைப்பு இறுதியாக்கப்படும் வரையில் மாத்தளைப் பிரதேச அலுவலகம் மாத்தளை மாவட்டம் முழுவதிலுமுள்ள வேளாண்மையாளர்களுக்கு'' ''புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்'' பற்றி விளக்கமளிப்பதன் பொருட்டுத் தொடர்ச்சியான ஆய்வரங்குகளை நடத்துவதற்கான தொடக்க ஒழுங்குகளில் ஈடுபட்டிருந்தது. இதற்கு மேலாக மாத்தளை, கண்டி, கேகாலை, குருநாகல், நுவரெலியா, புத்தளம் மாவட்டங்களிலுள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர்களுக்கும், குருநாகல் மாவட்டத்திலுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளை முகாமையாளர்களுக்கும் புதிய அனைத்தையும் உள் ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் பற்றி விளக்கமளிப்பதற்காக இவ்வாண்டில் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. மாத்தளை பிரதேச ''தீர்வகம்'' ஒன்றினை நிறுவுவதற்கும் கூடத் தொடக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## வாடிக்கையாளர் பணிகள்

மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள் குறிப்பிட்ட அபிவிருத்தி சார்ந்த அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் என்பனவற்றின் மூத்த அலுவலர்களை உள்ளடக்கிய வங்கித் தொழிலில் உள்ள வாடிக்கையாளர் பணிகள் குழுவானது 1981 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து இது வாடிக்கையாளர்களுக்கு வர்த்தக வங்கிகளின் பணிகளை முன்னேற்றுவதனை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு தொழிற்படுகின்றது.

இக்குழுவானது 1985ஆம் ஆண்டில் இலங்கையில் வங்கித் தொழில் பணிகளுக்கான ஒரு அஞ்சல் அளவீட்டை நடாத்தியது. 1985 ஆம் ஆண்டின் முதற் பகுதியில் ஐந்து வர்த்தக வங்கிகளிலிருந்து எடுக்கப்பட்ட மேலோட்ட மாதிரியான 10,000 வாடிக்கையாளர்களுக்கு வினாக் கொத்துக்கள் அனுப்பி வைக்கப்பட்டது. வினாக் கொத்துக்கள் பெறப்பட்டவர்களில் கிட்டத்தட்ட 20 சதவீதத்தினரினால் பதில் அனுப்பப்பட்டது. தரவு செய்முறைப்படுத்தல் திணைக்களத்தினால் பதில்கள் செய்முறைப்படுத்தப்பட்டது. புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட அளவீட்டின் அறிக்கை தற்சமயம் வரைவு நிலையிலிருக்கின்றது. இது 1986 ஆம் ஆண்டில் பொதுமக்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## வெளியீடுகள்

1984 ஆம் ஆண்டின் மத்திய வங்கி ஆண்டறிக்கை நாணயச் சட்ட விதியின் 35 வது பிரிவு நியதிகட்கமைய மாண்புமிகு நிதி திட்டமிடல் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. 1984 பொருளாதார மீளாய்வும் ஆண்டின் பிற்பகுதியில் வெளியிடப்பட்டது. இதே வேளை மாதாந்தச் செய்தித் திரட்டு ஒழுங்காக வெளியிடப்பட்டு வந்தது. 1985 ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் ஒரு சுருக்கமான பொருளாதார ஆய்வு 1985 ஆம் ஆண்டின் முதலரைப்பகுதிக்கான ''பொருளாதாரச் செயலாற்றம்'' என்ற தலைப்பின்கீழ் வெளியிடப்பட்டது.

இவ்வாண்டிற்கான வெளியீடுகளுக்கிடையே நாடளாவிய தரவு சேகரிப்பு முறையின் கீழ்ச் சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்ட 1985 ஆம் ஆண்டிற்கான விலைகள் கூலிகளின் புள்ளிவிபரங்களும், இவ்வாண்டிற்கான அடிப்படைத் தரவுகளை உள்ளடக்கிய சமூக பொருளாதார தரவுக் கையேடு—1985 என்பன காணப்பட்டன. இலங்கையின் பொருளாதார சமூக புள்ளிவிபரங்கள்—1984, நுகர்வோர் நிதி அளவை அறிக்கையின் I ஆம் பகுதிக்கான சிங்கள மொழிபெயர்ப்பும் ஆங்கில புள்ளிவிபர அட்டவணைகளைக் கொண்ட இதே அறிக்கையின் பகுதி II உம் வெளியிடப்பட்டன. இத்துடன் உயர் அலுவலர் ஆய்வுகள் தொகுதி 12 எண் 2, தொகுதி 13 எண்கள் 1 உம், 2 உம் கலாநிதி விமால் விக்கிரமசிங்கவின் பல்வகை செலாவணி வீதங்களின் கோட்பாடும் இலங்கையில் செலாவணி வீதத்தின் முகாமையும் என்பன வெளியிடப்பட்டன.

சிறப்பிதழ்கள்:—எண் 9 மகாவலிக் குடியிருப்பாளர்களும் கிராமியக் கொடுகடன் பிரச்சினைகளும்—என். ஜி. பி. பண்டிதரத்ன, எண் 10 திறைசேரிகள், அரசாங்கத்திலுள்ள திட்டமிடல் அபிவிருத்தி முகவர்களுடனை மத்திய வங்கியின் தொடர்புகள்—கலாநிதி டபிள்யூ. ராசபுத்ர, எண் 11 வங்கிகளும் வேளாண்மை கொடுகடனும்—இந்தியாவின் அனுபவம்—எம். நரசிம்மம் முன்னைய ஆளுநர். இந்திய ஒதுக்கு வங்கி, எண் 12 பிராந்திய இறக்குமதி நிறுவனங்கள்—தென் ஆசியாவின் கைத்தொழிலுக்கான பிராந்திய ஒத்துழைப்பு வழி வகைகள்—சுமதி நிமால் பெர்னாண்டோ, எண் 13 தவணைக் கொள்வனவும் குத்தகைக்கான நிதியும்—என். யூ. ஜெயவர்த்தன ஆகியனவும் வெளியிடப்பட்டன.

கொடுகடன் தகவல் திரட்டு:—''மீன்பிடித் தொழிலுக்கான கொடுகடன்'' என்ற தலையங்கத்தின் கீழ் எண் 5 வெளியிடப்பட்டது.

## ஆய்வரங்குகள்

1985 யூன் 3 ஆம் தேதியிலிருந்து 5 ஆம் தேதி வரைக்கும் ''வங்கியல்லாத நிதியிடும் நிறுவனங்களும் நாணய கொள்கையும்'' என்ற தலைப்பில் ஒரு மூன்று நாள் ஆய்வரங்கொன்றை நடாத்துவதற்கு மத்திய வங்கி ஆதரவளித்தது. தென்கிழக்காசிய மத்திய வங்கியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வாய்வரங்கில் இந்தோனேசிய வங்கி, நிகாராமலேசிய வங்கி, நேபாள இரஸ்ரா வங்கி, பிலிப்பைன்ஸ் மத்திய வங்கி, தாய்லாந்து வங்கி, இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றிலிருந்து அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## அளவீடுகள்

### நாடளாவிய தரவுகள் சேகரிக்கும் முறை

நாடளாவிய தரவுகள் சேகரிக்கும் முறையின் கீழ்க் கிட்டத்தட்ட 220 நுகர்வோர் விடயங்களின் சில்லறை விலைகள், முதன்மை வேளாண்மை உற்பத்திகளின் உற்பத்தியாளரின் விலைகள், வேளாண்மை உள்ளீடுகளின் சில்லறை விலைகள், நெற்செய்கை, தேயிலை, இறப்பர், தெங்கு சிறுவுடமைகள், கட்டடவாக்கக் கைத்தொழில் ஆகியவற்றிலுள்ள கூலி வீதங்கள் என்பவற்றின் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இலகுவில் கிடைக்கக்கூடியதான நுகர்வோர் பொருட்கள், வேளாண்மை உள்ளீடுகள், தொழிலாளர் என்பனவற்றிற்கான தகவல்களும் சேகரிக்கப்பட்டன. இத் தரவுகள் ஒழுங்கான அடிப்படையில் நாட்டின் 100 தெரிந்தெடுக்கப்பட்ட நிலையங்களிலிருந்து சேகரிக்கப்பட்டதுடன் ஆண்டு தோறும் 'விலை, கூலி, புள்ளி விபரங்கள் : சில்லறை உற்பத்தியாளர், உள்ளீட்டு விலைகளும் கூலிகளும்' என்பனவற்றில் காட்டப்பட்டன.

### இறக்குமதி தாராளமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தைக் கண்காணித்தல்

வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களம் கொடுகடன் பத்திரங்களுக்கும் உண்டியல்களுக்கும் எதிராகப் பெறும் மாதாந்த தரவுகளின் மூலம் இறக்குமதி தாராளமாக்குதல் நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்தும் கண்காணிப்புச் செய்தது. தரவுகளும் அவற்றின் பகுப்பாய்வுகளும் ஒழுங்கான அடிப்படையில் தொடர்பான அதிகாரச் சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

**திட்டமிட்ட முதலீட்டின் அளவீடு**

முதலீட்டு அமைப்பு, அதன் போக்கு, திட்டமிடல் விரிவு, மூலங்கள், நிதியத்தின் பயன்பாடுகள் முதலீட்டின் அளவுகள் என்பனவற்றை ஆய்ந்தறியும் பொருட்டு வருடாந்த அடிப்படையில் வியாபாரத் தொழிற்பாடுகளும் திட்டமிட்ட முதலீடுகளும் என்ற ஒரு அளவீடு நடாத்தப்பட்டது. 1983/1984—1985/1986 காலப்பகுதிக்கான வியாபாரத் தொழிற்பாடுகளும் திட்டமிட்ட முதலீடுகளும் என்பதன்மீதான அளவீட்டின் அறிக்கை பூர்த்தியடைந்து விட்டது.

**இலங்கை வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர்கள் பணிகளின் அளவீடு**

வங்கித் தொழிலின் வாடிக்கையாளர் பணிக் குழுவின் வேண்டுதலுக்கிணங்க வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் பணிகள் அளவீடு 1985 சனவரி—ஏப்பிறல் காலப்பகுதியில் நடத்தப்பட்டது. இலங்கையின் வங்கித் தொழில் பணிகளின் விரிவினையும் தகைமையையும் முன்னேற்றுவதற்கான வழிவகைகளையும், கருத்துக்களையும் ஆராயும் பொருட்டு வங்கித்தொழில் வாடிக்கையாளர்களிடமிருந்து அவர்களின் வங்கிகளினால் வழங்கப்பட்ட பணிகள் தொடர்பான அவர்களின் மனப்பான்மை பற்றிய தகவல்களை ஒன்றுதிரட்டுவதே அளவீட்டின் முதன்மை நோக்கமாகும்.

**பயிற்சி**

1985 ஆம் ஆண்டுக் காலத்திலும் மத்திய வங்கி, வங்கி அலுவலர்களுக்கான கல்வி சார்ந்த, மற்றும் செய்முறைப் பயிற்சி என்பனவற்றைக் கொண்ட அதன் நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்தது. கல்வி சார்ந்த பயிற்சி நெறிகள் முக்கியமாகப் பொருளியல் மற்றும் பொருளியல் அளவு முறைகளில் பட்டப் பின் படிப்புக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டன. குறுந்தவணைப் பாடநெறி, ஆய்வரங்குகள், தொழிற்கூடங்கள், கல்விச் சுற்றுலாக்கள் போன்ற முறைகளில் இலங்கையிலுள்ள நிறுவனங்களிலும் அதே போன்று வெளிநாட்டு நிறுவனங்களிலும் இடம் பெற்ற செய்முறைப் பயிற்சிகள் கிராமிய அபிவிருத்தி, வேளாண்மை மற்றும் கைத்தொழில் கொடுகடன் கணனி கற்கைகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய துறைகளை முக்கியமாக உள்ளடக்கியிருந்தன.

1985 திசெம்பருடன் முடிவடைந்த 12 மாதகாலப் பகுதியில் ஒன்பது அலுவலர்கள் பட்டப்பின் படிப்பு கற்கைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றனர். இவ்வலுவலர்களில் ஆறு பேர் முதுமானிப் பட்டத்திற்கான நெறிகளைக்கற்ற வேளையில் மூவர் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுகளை மேற்கொண்டனர். ஒரு அலுவலர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் பட்டப்பின் படிப்புக் கற்கையினையும், 4 அலுவலர்கள் கொழும்பு பல்கலைக்கழகம், பட்டயக் கணக்காளர் நிறுவனம், வர்த்தக முகாமைக்கான தேசிய நிறுவனம் என்பனவற்றில் டிப்ளோமாப் பயிற்சி நெறியினையும் மேற்கொண்டனர். தொண்ணூற்றி நான்கு பேர் செய்முறைப் பயிற்சியின் பொருட்டு வெளிநாடு சென்றனர். நூற்றி ஐம்பத்தொரு அலுவலர்கள் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியினால் நடத்தப்பட்ட பயிற்சி பாட நெறிகளைப் பின்பற்றியதுடன் மேலும் 116 அலுவலர்கள் உள்நாட்டில் ஏனைய பயிற்சி நிலையங்களினால் நடத்தப்பெற்ற குறுங்காலப் பயிற்சி நெறிகளிலும், ஆய்வரங்குகளிலும் பங்குபற்றினர்கள்.

மத்திய வங்கி அலுவலர்களுக்கான வர்த்தக வங்கித்தொழில் நடைமுறைகள், தொழிற்பாடுகளில் பணிபுரியும் போதே பயிற்சி பெறும் நிகழ்ச்சித் திட்டம் இலங்கை வங்கியால் 1985 மே வரை தொடர்ந்தும் நடைபெற்றதுடன் மூன்று அலுவலர்கள் இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினர். இந்நிகழ்ச்சித் திட்டம் 1986 ஆம் ஆண்டிலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தரவு செய்முறைப்படுத்தல்

1985 ஆம் ஆண்டில் கீழ்வரும் கணனி விண்ணப்பங்களைத் தரவு செய்முறைப் படுத்தல் திணைக்களம் கையாண்டது:—

1. ஊழியர் சேமநிதிக் கணக்கீட்டு முறை.
2. இலங்கையின் சென்மதி நிலுவை.
3. இறக்குமதிக் கண்காணிப்புமுறை.
4. அரச கணக்குக் கிளையும் நடைமுறைக் கணக்குகளும்.
5. பொதுப்படுகடன் திணைக்களத்தின் கணக்கீட்டு முறை.
6. புள்ளிவிபர அளவீடுகள்—

   (I) வங்கித் தொழிலில் வாடிக்கையாளர் பணிகளின் மீதான அளவீடு.

   (II) உலக வங்கிக்கான 1978/1979, 1981/1982 ஆம் ஆண்டுகளின் நுகர்வோர் நிதி அளவீட்டுத் தரவுகளின் பகுப்பு—இலங்கை மத்திய வங்கி 1970 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் வாழ்க்கைத் தரங்களின் உயர்வு.

7. இலங்கைக் கொள்கைக்கான பொருளாதார மாதிரிகளை மதிப்பிடல்.
8. ஆள் பதிவுத் திணைக்களத்துக்கான தேசிய அடையாள அட்டை எண்ணிடும் முறை.
9. சம்பளப் பட்டியல்கள் கணக்கிடலும் முறையும், ஏனைய கொடுப்பனவுகளும்.
10. நாடு முழுவதற்குமான தரவுகள் சேகரிக்கும் திட்டம்.
11. மத்திய வங்கி ஊழியர்களினது இளைப்பாற்றல் நன்மைத் திட்டம்.
12. மத்திய வங்கி நலன்புரிக் கடன்கள் முறை.

13. மத்திய வங்கிக்கான முகாமைத் தகவல் முறை.

14. தேசிய சேமிப்பு வங்கியின் கணக்கீட்டு முறை.

15. பணச் சந்தையினதும் வெளிநாட்டுச் செலாவணியினதும் கொடுக்கல் வாங்கல்கள்.

16. இலங்கை அரசாங்கப் புகையிரதத் திணைக்களத்திற்கான புள்ளி விபர வேலை.

மேலே தரப்பட்ட வேலைகளுடன் ஊழியர் சேமநிதிய பற்றுவரவேடு முறை வழங்கல் தொடர்பான கணனிமயப்படுத்தல் வேலையையும் மேற் கொண்டது. பற்று வரவேட்டின் நிகழ்ச்சித் திட்டங்கள் பரீட்சித்து நடைமுறைப் படுத்துவதற்குத் தயாராகவிருக்கின்றன. இத்திணைக்களம் தன்னியக்க காசோலைத் தீர்ப்பனவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பேற்றது. இதற் கான ஆரம்ப வேலை 1985 ஆம் ஆண்டில் முற்றுப்பெற்று விட்டது. இதன் தொழிற்பாடு 1986 ஆம் ஆண்டு தொடக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதி கண்காணிக்கும் முறையின் மீதான முறைகளும் நிகழ்ச்சித் தொழிற் பாடுகளும் இக்காலப்பகுதியில் கையேற்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் வங்கித் தொழில் திணைக்களத்தின் நாளேடு, ஐந்தொகை என்பன முடிவடைந்தன. 1986 ஆம் ஆண்டின் முதற் பகுதியில் உற்பத்திப் பதிவுகள் தொடங்கப்படும்.

## முகாமைக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 1985ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மாத் தறை, அநுராதபுரம் பிரதேச அலுவலகங்கள் உட்பட வங்கியின் பல்வேறு திணைக் களங்களையும் கணக்காய்வு செய்தது. பொதுப்படுகடனின் கணக்காய்வு இணைந்த முதலீட்டு நிதியத்தின் அனைத்து தொழிற்பாடுகளையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவாக்கப்பட்டது.

முகாமைக் கணக்காய்வுப் பிரிவு அலுவலர் தேவைகள், வேலையின் தன்மை, அமைப்பும் முறைகளும் பொறுப்பில் மேற்கொள்ளப்படும்போது உள்ளகக் கட்டுப் பாடுகளின் தற்போதைய நடைமுறைகளும் ஆய்வுகளும் ஆகியவற்றை மீளாய்வு செய்தது. 1985 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பொதுப்படுகடன் திணைக்களத்தின் தேவைகள் மீதான ஆய்வு நிறைவு செய்யப்பட்டது. வங்கியின் அனைத்துத் திணைக்களங்களிலுமுள்ள சம்பளமற்ற விடுப்பு மீதானதொரு அறிக்கையும் முற்றுப்பெற்றது. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஏற்றுமதி ''பிந்திய பரிசோதனைக்கிளை'' யின் உயர் பதவியல்லா அலுவலர்களின் வேலைத் தன்மையின் மீதான அறிக்கையும் இவ்வாண்டுக் காலத்தில் முடிவாக்கப்பட்டது.

## ஆளணி

ஆளுநர், முனைவர் டபிள்யூ. இராசபுத்திர 1985 ஆம் ஆண்டுக் காலத்தில் பின்வரும் மாநாடுகளிலும் கூட்டங்களிலும் கலந்துகொண்டார்:—

(அ) மலேசியா, கொட்டா கின்னபலுவில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கியின் ஆளுநர்களின் இருபதாவது மாநாடு.

(ஆ) நேபாளம், காத்மண்டுவில் நடைபெற்ற தென்கிழக்காசிய நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களின் மாநாடு.

(இ) நேபாளம், காத்மண்டுவில் நடைபெற்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் 13 ஆவது சபைக் கூட்டம்.

(ஈ) ஐக்கிய அமெரிக்கா, வாசிங்டனில் நடைபெற்ற பன்னுட்டு நாணய நிதியத்தினது இடைநிலைக் குழுவினது கூட்டம்.

(உ) இத்தாலி, ரோமாபுரியில் நடைபெற்ற வடக்கு—தெற்கு வட்டமேசை மாநாடும், பன்னுட்டு அபிவிருத்திச் சமூகத்தின் பதினெட்டாவது உலக மாநாடும்.

(ஊ) தென்கொரியா, சியோலியில் நடைபெற்ற பன்னுட்டுநாணய நிதியத்தினதும் பன்னுட்டு புத்தாக்க அபிவிருத்தி வங்கியினதும் ஆண்டுக் கூட்டங்கள்.

(எ) பாகித்தான் அரச வங்கியினதும் சீன மக்கள் வங்கியினதும் அலுவல் சார் கலந்துரையாடல்.

நிதி,திட்டமிடல் அமைச்சின் செயலாளர் நாட்டில் இல்லாத காலப்பகுதியில் திறைசேரியின் துணைச் செயலாளரான திரு. ஜீ. குமாரணதுங்க அவையின் மாற்று அலுவல்சார் உறுப்பினராகச் செயற்பட்டார்.

ஆளுநர் இலங்கையில் இல்லாத காலப்பகுதியில் மூத்த துணை ஆளுநர் திரு. டி. எல். கன்னங்கரா வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும், நாணயச்சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

### நியமனங்கள்

தரவு செய்முறைப்படுத்தல் திணைக்களப் பணிப்பாளர் திரு. வி. என். டி. நாணயக்கார 1985 சனவரி 15 ஆம் நாளிலிருந்து பொதுப்படுகடன் திணைக்களக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பொதுப்படுகடன் திணைக்களக் கண்காணிப்பாளர் திரு. பி. அமரசிங்க 1985 சனவரி 15 ஆம் நாளிலிருந்து தரவு செய்முறைப்படுத்தல் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் முனைவர் ஜீ. எம். அபயரத்ன 1985 நவெம்பர் 15 ஆம் நாளிலிருந்து புள்ளிவிபரவியல் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பணிமனைத் திணைக்களப் பணிப்பாளரும் வங்கித்தொழில் திணைக்கள மேலதிக முதன்மைக் கணக்காளருமான திரு. பி. எம். நாகாவத்த 1985 நவெம்பர் 15 ஆம் நாளிலிருந்து செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் திரு. டி. ஏ. பி. வீரவர்த்தன 1985 நவெம்பர் 15 ஆம் நாளிலிருந்து இத்திணைக்களத்தின் மதியுரையாளராக நியமிக்கப்பட்டார்.

புள்ளிவிபரவியல் திணைக்களப் பணிப்பாளர் முனைவர் என். ஈ. எச். சந்தரத்ன 1985 நவெம்பர் 15 ஆம் நாளிலிருந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. எஸ். பட்டிவிதான நாணயத் திணைக்களக் கண்காணிப்பாளர் பதவியின் கடமைகளைச் செய்வதற்கு 1985 சனவரி 15 ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார். இவர் 1985 யூன் 8 ஆம் நாளிலிருந்து நாணயத் திணைக்களப் பதில் கண்காணிப்பாளராகவும், 1985 நவெம்பர் 15 ஆம் நாளிலிருந்து பணிமனைத் திணைக்களப் பதில் பணிப்பாளராகவும் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி மேலதிக பதில் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

நாணயத் திணைக்களத் துணைக் கண்காணிப்பாளர் திரு. ஜீ. டி. பீ. முனிதாச 1985 நவெம்பர் 15 ஆம் நாளிலிருந்து நாணயத் திணைக்களக் கண்காணிப்பாளர் பதவியின் கடமையைச் செய்வதற்கு நியமிக்கப்பட்டார்.

**விடுவிப்பிலுள்ள அலுவலர்கள் (1985 திசெம்பர் 31 ஆம் நாளில் உள்ளவாறு)**

பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையின் அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், பன்னாட்டு நாணய நிதியம் ஆகியவற்றில் கடமையாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டார்கள்:—

நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன வங்காளதேசம், பூட்டான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகப் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.

முனைவர் எஸ். ரி. ஜி. பர்னாந்து மக்கள் வங்கியின் தலைவராகக் கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

திரு. எஸ். ஈஸ்பரதாசன் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் வெளிநாட்டுப் படுகடன் வழிப்படுத்தலும் முகாமைப்படுத்தலும் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

முனைவர் எல். ஈ. என். பர்ணந்து இலங்கை வங்கியின் தலைவராகக் கடமை யாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

திரு. ஏ. ஏ. டி. ஜஸ்ரின் கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சின் செயலாளராகப் பணிபுரிவதற்காகக் கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச் சிற்கு.

முனைவர் ஏ. சி. ரந்தெனி, முனைவர் ஜி. அபயசேகரா, முனைவர் ஐ. குமாரசுவாமி, முனைவர் எஸ். எஸ். கொலம்பகே, திருவாளர்கள் எம். பி. திசநாயக்கா, ஈ. ஏ. பி. என். டயஸ், ஜீ. ஏ. பி. பொன்சேகா ஆகியோர் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

முனைவர் டி. எஸ். விஜயசிங்க ஆராய்ச்சிப் பொருளியலாளராகப் பதவி யேற்பதற்காக மலேசியாவிலுள்ள தென்கிழக்கு ஆசிய மத்திய வங்கியின் ஆராய்ச் சிப் பயிற்சி நிலையத்திற்கு.

ஓய்வுபெற்றோர்

துணை ஆளுநர் திரு. எச். என். எஸ். கருணாதிலக 1985 மாச்சு 1 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

ஆலோசனைப் பொறியியலாளர் திரு. எம். ஈ. த ஆப்ரூ 1985 மே 30 ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார். அவர் மீண்டும் அன்றைய நாளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் தொழிலில் அமர்த்தப்பட்டார்.

நாணயத் திணைக்களக் கண்காணிப்பாளர் திரு. ஆர். எம். தென்னக்கூன் 1985 யூன் 8 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

திரு. ஏ. ரி. டபிள்யூ. ஜெகோரட்ணம், உயர் பதவி அலுவலர் தரம் IV 1985 நவெம்பர் 12 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கியின் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

இறப்பு

துணை ஆளுநர் திரு. ரி. ஜி. புஞ்சி அப்புஹாமி 1985 ஒற்றோபர் 19 ஆம் நாளன்று காலமானார்.